# வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார்

பதிப்பாசிரியர்
முனைவர் ம. இராசேந்திரன்
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை – 15

# வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார்

பதிப்பாசிரியர்

முனைவர் ம. இராசேந்திரன்
முனைவர் ச. சிவகாமி


உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 15
வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் (30-06-2004)


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Veḷḷakāl Pa. Cuppiramaṇiya Mutaliyār** |
| Editors | : | Dr. M. Rajendran<br>Director (Full Addl. Charge)<br>IITS, Taramani, Chennai - 600 113.<br><br>Dr. S. Sivakami<br>Associate Professor<br>IITS, Taramani, Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 587 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii+120 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.40/- (Rupees Forty Only) |
| Printing | : | Raagaas<br>12/293, Royapettah High Road<br>Royapettah, Chennai-600 014<br>Ph. 044-43510437 |
| Subject | : | Biographical & Critical Studies on<br>V.P.S. Mudaliar |



கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# முகவுரை

தமிழ்மொழி தமிழ்ச் சமுதாயத்தின் உருவாக்கமாகும். தனிமனிதர்களின் பங்களிப்பால் வளர்ச்சியும் வாழ்வும் பெற்று வருகிற தமிழ் பல்துறைகள் கொண்டது.

அதன் துறைதோறும் துறைதோறும் தமிழறிஞர்கள் பலர் தொண்டாற்றியுள்ளனர்.

அப்படியான தமிழறிஞர்களைக் கண்டறிந்து போற்றி வருவது வழக்கமாக உள்ளது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இவ்வாறு தமிழறிஞர்களைப் போற்றுவதற்கு அடிப்படையாக அவர்தம் படைப்புகள் கொள்ளப்பெற்றன.

'தமிழறிஞர் வரிசை' எனும் தலைப்பில் திங்கள் கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன.

வளரும் தலைமுறையினரும், வரும் தலைமுறையினரும் இத் தமிழறிஞர்களை அறிந்து பயன்கொளும் பொருட்டு இக்கருத்தரங்குகள் நடத்தப்பெற்றன. முதல் வரிசைக் கருத்தரங்கில் பதினாறு தமிழறிஞர்களின் பங்களிப்புகள் ஆராயப்பெற்றன.

இவ் வரிசையில் பதினைந்தாவதாக வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் அமைகின்றார்.

முந்தைய தலைமுறை தமிழறிஞரில் குறிப்பிடத்தக்க வகையில் படைப்பாற்றலும் ஆய்வுத்திறனும், இவர் கைவரப் பெற்றவராவார்.

இவருடைய வாழ்க்கைவரலாறு, படைப்புகள், மொழிபெயர்ப்பு மற்றும் இதழியல்பணிகளை ஆறு தமிழறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர்.

அவை சீர் செய்யப்பெற்று, தனிநூலாக இப்போது வெளிவருகின்றன.

வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் ஆளுமை இந்நூலில் முழுதும் வெளிப்படுவதை அறியலாம். இதற்குக் காரணமான கட்டுரையாளர்களும், இக்கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்த முனைவர் ச. சிவகாமி அவர்களும் பாராட்டுதற்குரியவர்கள் ஆவர்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கும் நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு கோ. சந்தானம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் களுக்கும், இந்நூலின் மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனுக்கும், கணியச்சுச் செய்த திருமதி பி.கௌசல்யா மற்றும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அச்சகத் தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## கட்டுரையாளர்


முனைவர் நா. உசாதேவி

தலைவர், தமிழ்த்துறை

மதுரை திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி

திருநெல்வேலி - 627 010

முனைவர் லொ.ஆ. உமாமஹேஸ்வரி

விரிவுரையாளர், தமிழ்த்துறை

டாக்டர் எம்.ஜி.ஆர்.-ஜானகி மகளிர் கலை அறிவியல் கல்லூரி, சென்னை - 600 020

முனைவர் வே. சசிகலா

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி

குற்றாலம் - 627 802

முனைவர் நா. சந்திரசேகரன்

விரிவுரையாளர்

த.இரா.ப.க.க.செ. இந்துக்கல்லூரி, சென்னை-600 072

முனைவர் பு. பாலாஜி

விரிவுரையாளர்

த.இரா.ப.க.க.செ. இந்துக்கல்லூரி, சென்னை-600 072

செல்வி க. ஜெயந்தி

ஆய்வாளர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

# உள்ளே


வாழ்க்கை வரலாறு

- நா. உசாதேவி

படைப்புகள்

- வே. சசிகலா

அகலிகை வெண்பா

- பு. பாலாஜி

கம்பராமாயண சாரம்

- கா. ஜெயந்தி

மொழிபெயர்ப்புப் பணி

- நா. சந்திரசேகரன்

இதழியல் கட்டுரைகள்

- லொ. ஆ. உமாமஹேஸ்வரி

# வாழ்க்கை வரலாறு

நா. உசாதேவி

*எண்பதாண் டான இளைஞனே இன்னமுதப்*
*பண்பெலாம் காட்டுத் தமிழ்ப் பாவலனே-நண்பனே*
*வெள்ளகால் செல்வனே வேள்சுப் பிரமணிய*
*வள்ளலே வாழ்க மகிழ்ந்து*

*- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை*

## முன்னுரை

வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் வெள்ளம் போல் பொங்கி வரும் கவியாற்றல் உடையவர். அகலிகை வெண்பா, நெல்லைச் சிலேடை வெண்பா ஆகியன இவரது சிற்றிலக்கியப் படைப்புகள் ஆகும். இவரது கோம்பிவிருத்தம் ஆங்கிலக் கவிதை ஒன்றின் தழுவலாகும். கவிஞர் மில்ட்டனின் சுவர்க்க நீக்கம் இவரால் மொழிபெயர்க்கப் பெற்று நூல்வடிவம் பெற்றுள்ளது. சமணர், ஒருவரின் இறைவணக்கப் பாடலைப் பாட்டு வடிவத்தில் மொழிபெயர்த்து, அதற்குச் 'சர்வசன செபம்' என்று பெயரிட்டார். திருவாவடுதுறை மடாதிபதி மீது இவர் பாடிய மாலை இலக்கியமும் ஒன்று உண்டு. வேறு வேறு காலங்களில் நண்பர்களைப் பாராட்டிய கவிதைகளையும், தமிழ்ச் சான்றோர்களும், நண்பர்களும் இறந்த போது பாடிய இரங்கல் பாடல்கள்ளயும் தொகுத்துத் 'தனிப்பாடல் திரட்டு', என்ற நூல் வெளிவந்தது. ஆய்வுத்திறன் பெற்றவர். ஆங்கிலப் புலமை மிக்கவர். கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்த்தவர். கம்பன் கவிதைகளின் கவிநயத்தை வளர்க்கக் 'கம்ப இராமாயண இன்கவித் திரட்டு' என்ற தொடர் கட்டுரையைச் செந்தமிழ் இதழில் 1930ஆம் ஆண்டில் எழுதி வந்தார். அதுவே பின்னர்க் கம்ப இராமாயணசாரம் என்ற நூல் வடிவம் பெற்றது. இவர் தம் படைப்புத் திறனை மதிப்பிடுவதற்கு இவர் தம் ஆளுமைத் திறனையும் வாழ்வியல் பின்புலத்தையும் அறிவது இன்றியமையாதது.

## ஆளுமைத்திறன் வெளிப்பாடு

தமிழில் ஆளுமை என்ற சொல், ஆங்கிலத்தில் வழங்கிவரும் personality என்ற சொற்பொருளின் வடிவம் ஆகும். இதன் மூலம் இலத்தின் மொழி ஆகும். நாடக மேடையில் நடித்துக் காட்டிய போது, நாடக நடிகர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்புக்கேற்ப முகமூடி அணிந்து வருவர். இம்முகமூடிதான் ஆங்கிலத்தில் பர்ஸனா (persona) என்று அழைக்கப்பட்டது. இச்சொல்லில் இருந்துதான் personality என்ற சொல் உருவாக்கப்பெற்றது. ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் என்ற பொருள்படத்தான் (personality) 'பெர்சனாலிட்டி' என்ற சொல் வழங்கி வந்தது. சொற்பொருள் வளர்ச்சியின் காரணமாக இன்று அச்சொல்லின் பொருள் ஒரு மனிதனின் தனிப்பட்ட நடத்தை முறையைக் குறிக்கிறது. "தற்காலத்தில் இச்சொல்விரிவான பொருளைப் பெற்று ஒரு மனிதனின் சீரான தனிப்பட்ட நடத்தை முறையைக் (Unique pattern of behaviour) குறிப்பதாயிற்று".[1] ஆளுமை என்பது ஒருவனது உடலமைப்பே என்றும், ஒருவனுடைய உடலமைப்பு, அவன் வாழும் சமூகச் சூழ்நிலை ஆகியவற்றின் தன்மைக்குத் தக அமையும் இயல்புகள் எல்லாம் ஒன்று சேர்ந்ததே என்றும், ஒருவனது இயல்பூக்கங்களும் உள்ளக் கிளர்ச்சிகளும் ஒருங்கே சேர்ந்தமைவதே என்றும், பாரம்பரிய இயல்புகளும் (Heriditary Traits) அனுபவத்தால் ஈட்டிய இயல்புகளும் (Acquired Traits) ஒருங்கே சேர்ந்தமைவதே என்றும் பலவாறு ஆளுமைக்குக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகிறது.[2]

எனவே ஆளுமைத்திறனை வெளிப்படுத்த ஒருவரின் தோற்றப் பொலிவு, இளமை வாழ்க்கை, பாரம்பரியம், படிப்பு, பட்டறிவு, சுற்றுப்புறச்சூழல், முயற்சி, பயிற்சி ஆகியன துணைபுரிகின்றன.

### வெ.ப.சு.வின் தோற்றப்பொலிவு

"வருஷங்களை ஒன்று இரண்டு என்றெண்ணி வயதைக் கணக்கிட்டு மனிதரைக் கிழவரென்றும் குமரரென்றும் மதிப்பது சரியான முறையன்று. எண்பது வயதான இளைஞரும் உண்டு, இருபது வயதான கிழவருமுண்டு. வெள்ளகால் திருவாளர் ராவ்சாஹிப் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களை நெருங்கிப் பழகினவர் ஒருவரேனும் அவர்களை ஒரு குடுகுடு கிழவர் என்று

கூறத் துணியார் என்பது உறுதி. அவர்களது சுறுசுறுப்பைக் கண்ட எந்த இளைஞனும் அவர்கள் முன் நாணித் தலைகுனிந்து விடுவான்"[3] என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறியுள்ளார். எண்பது வயதிலும் இருபது வயது இளைஞனின் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் வெ.ப.சு. செயல்பட்டார். நாளும் உடற்பயிற்சி செய்வதும், மூன்று மைலுக்குக் குறையாமல் நடப்பதும் வெ.ப.சு.வின் வழக்கமாயிற்று.

## பிறப்பும் முன்னோர் சிறப்பும்

முதலியார் என்ற பட்டம் முதன்மையாளர் என்ற பொருளில் தொண்டை மண்டலத்திலிருந்த வேளாளரில் அரசர் படைத்துணையாயிருந்து வெகுமதி பெற்றவர்களுக்கு முதன்முதல் சூட்டப்பட்டிருந்தது. முதலியார் என்ற பட்டம் பெற்றவர்களில் ஒருசிலர் அரசர்களுக்கு முடி சூட்டுபவராய் அமைந்திருக்கிறார்கள். அவர்களையே, கொண்டைக்கட்டிகள் என்று கூறுவதுண்டு. இக்கொண்டைக்கட்டி முதலியார் மரபில் வெ.ப.சு. தோன்றினார். இவர் குடும்பத்தார் மதுரை மாவட்டச் சோழவந்தான் என்ற கிராமத்தில் குடியிருந்தனர். இவர் பாட்டனார் சுப்பிரமணிய முதலியார் காலத்தில் தான் இவர்களின் குடும்பத்தார் தென்காசித் தாலுகாவிலுள்ள வெள்ளகாலில் வந்து குடியிருந்தனர். அந்நாளில், திருநெல்வேலியில் நவாப் அரசர்களுக்குப் பிரதிநிதியாயிருந்து திருநெல்வேலியை ஆண்ட தளவாய் முதலியார் குடும்பம் புகழுடனிருந்தது.

இவர் தாத்தா சுப்பிரமணிய முதலியார் மேடைத்தளவாய் திருமலையப்ப முதலியாரின் சகோதரி மகள் உலகண்ணியைத் திருமணம் புரிந்தார். தன் மகன் பழனியப்ப முதலியாருக்கு ஆழ்வார்குறிச்சி ஆறை அழகப்ப முதலியார் குடும்பத்தில் பெண் கொண்டார். பழனியப்ப முதலியார் அருளுள்ளம் கொண்டவர். உலகியலறிவு வாய்க்கப் பெற்றவர். நிர்வாகியாக இருந்து தளவாய் எஸ்டேட்டைப் பலவகைகளிலும் மேம்படுத்தியவர். வெள்ளகால் வழியாக வீரகேரளம்புதூர் வரை ஆறு மைல் நீளத்திற்கு நல்ல சாலை அமைத்தார். ஊர்மக்களுக்காகக் குற்றாலநாதர் கோயில் வலப்புறம் ஒரு பெரிய கிணற்றை வெட்டினார். இவரின் முதல் மகனாய் வெள்ளகால் ப. சுப்பிரமணியம் 1857ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14ஆம் தேதி ஆழ்வார்குறிச்சியில் பிறந்தார். இவர் தம் ஐந்தாம் அகவை முடியும் வரை வெள்ளகாலில் வளர்ந்தார். அதன்பின் நெல்லைக்கு வந்து, தம் அத்தை கணவர் மேடைத்தளவாய் குமாரசாமி முதலியார் அரண்மனையில் வாழ்ந்தார்.

## இளமைக் கல்வி

நெல்லை நகரில் தெற்குப் புதுத் தெருவில் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்திருந்த கணபதி வாத்தியாரிடம் படித்தார். கணபதி வாத்தியார், அழகிய சொக்கநாத பிள்ளையின் சிறிய தந்தையாவார். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நான்கு வருடங்கள் கற்றார். நெல்லை நகர் அரசடிப்பாலத் தெருவிலிருந்த மிஷன் பள்ளிக்கூடத்தில் தமிழும், ஆங்கிலமும் படித்துத் தேறினார். அதன் பின்னர் நெல்லை சந்திப்பில் அப்போது "இந்துக் கலா சாலை" என்ற பெயரில் அழைக்கப்பட்ட ம.தி.தா. இந்துக் கல்லூரி நிறுவனத்தில் சேர்ந்து படித்தார். 1876இல் மெட்ரிகுலேஷன் பள்ளித் தேர்வில் வெற்றி பெற்றார். மேற்கொண்டு படிப்பைத் தொடரும் எண்ணம் இன்றி வீட்டிலிருந்து உழவுத்தொழிலைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் தம் வகுப்புத் தோழர் T.N. சிவஞானம் வற்புறுத்தலுக்கிணங்க, கல்லூரி திறந்து ஆறு மாதங்களுக்கு அப்பால் சென்னைக் கிறித்துவக் கல்லூரி கலாசாலையில் இண்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்து படித்தார். அப்போது வெ.ப.சு. தம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் பி.ஏ. முதலிய பெரிய வகுப்பு மாணவர்களுக்கும், தமிழ்ப்பாடம் கற்றுத் தந்தார். 1878இல் நடந்த தேர்விலும், அதன் பின்பு நடந்த தேர்விலும் வெ.ப.சு. ஆங்கிலத்தில் தேறவில்லை. அதோடு படிப்பை நிறுத்திவிட்டு மில்லர் மூலம் நல்லொழுக்க நெறிமுறைகளைக் கற்றுக் கொண்டார்.

## இல்லற வாழ்க்கை

உரிய வயதில், வெ.ப.சு. வுக்குத் திருமணம் செய்யத் தந்தை விரும்பினார். ஆழ்வார் குறிச்சி மேலப்பண்ணை ஆறை ராமலிங்க முதலியார் மகள் வேலம்மாள் அண்ணியை மணம் பேசினார். ஆனால் வெ.ப.சு. இசையவில்லை. தந்தை, தாம் மணம் பேசிய பெண்ணுக்கு இளைய மகன் திருமலையப்ப முதலியாரை மணமகனாக்கினார். ஆனால் அவருக்குக் காய்ச்சல் வர, தம்பிக்குப் பேசிய பெண்ணை, வெ.ப.சு. மணம் முடித்துக்கொண்டார். பத்தொன்பது வருட இல்லற வாழ்க்கை வாழ்ந்த அம்மையார் 1899இல் காலமானார்.

முதல் மனைவி இறந்த மறுவருடம் தென்காசித் தாலுகா, கிடாரங்குளம் இராமசாமி முதலியார் மகள் வடிவம்மாள் அண்ணியை மணந்து கொண்டார். முதல் மனைவியின் பெண்

மக்களுள் மூத்த மகள் உலகம்மாள் அண்ணியை ஆழ்வார்குறிச்சி மேல்பண்ணை M.P.M. ஆறை ராமலிங்க முதலியாருக்கு மணம் முடித்துக் கொடுத்தார். இரண்டாவது மகள் கல்யாணி அண்ணியைத் திருநெல்வேலி மேடைத்தளவாய் ரெங்கநாத முதலியார் மணந்து கொண்டார். இரண்டாவது மனைவியின் மக்கள் நால்வர். இரண்டு பெண்கள். இரண்டு ஆண்கள். இவர்களுள் ஒரு பெண் இறந்துவிட்டார். மற்றொரு பெண் செல்லம்மாள் அண்ணி, மேடைத்தளவாய் சண்முகக் குமாரசாமி முதலியாருக்கு மனைவியானார். இரு ஆண்மக்களில் மூத்தவர் V.S. பழனியப்ப முதலியார்; இளையவர் V.S. தீத்தாரப்ப முதலியார்.

## கால்நடை மருத்துவத்துறையில் பணி

திருநெல்வேலித் தாலுகா அலுவலகத்தில் வெ.ப.சு. தற்காலிக எழுத்தாளர் (Acting Copyist) வேலை பார்த்தார். பின்னர் சென்னை விவசாயக் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து 1884 ஜுன் மாதம் வரை படித்துப் பட்டம் பெற்றார். புதிதாக ஏற்படுத்தியிருந்த கால்நடை மருத்துவ இலாக்காவில் பணி ஏற்றார். ஓராண்டு காலம் தற்காலிக உள்ளூர்க் கால்நடைப்பிணி ஆய்வாளராகப் (Probationary Local Cattle Disease Inspector) பணியாற்றினார். 1887இல் கணக்கெடுப்பு ஆய்வாளராக Stock Inspector என்ற பெயருடைய பதவியில் அமர்ந்து ரூ75 ஊதியமாகப் பெற்றார். 1890இல் கால்நடை இலாக்கா வளர்ச்சியடையவில்லை. அதனால் தேவையில்லை என்று அரசு அன்று இலாக்காவை எடுத்து விட்டது. வெ.ப.சு. சென்னை வருவாய்த்துறை அலுவலகத்தில் பணியில் அமர்த்தப்பட்டார். பின்னர் வெ.ப.சு. ஓராண்டு மும்பைக் கால்நடைக் கல்லூரியில் படித்து GBVC பட்டம் பெற்றார். 1894இல் மீண்டும் கால்நடை இலாக்கா செயல்படத் தொடங்கியதும் பணியில் சேர்ந்தார். கால்நடை மருத்துவத் துணைவராக (Veterinary Assistant) நியமனத்தில் அமர்ந்த வெ.ப.சு. 1914இல் இணைக் கண்காணிப்பாளர் ஆனார். 15.8.1915இல் அப்பணியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார்.

## மொழிபெயர்ப்புப் பணி

தமிழ்வழிக் கல்விக்கு வெ.ப.சு. ஆற்றியுள்ள பணி குறிப்பிடத்தக்கது. அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துறை நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருந்தன. மாணவர்கள் ஆங்கில வழிக்கல்வி படித்து இடர்ப்பட்டனர். கால்நடையியல் பற்றிய ஆங்கில நூல்களை முதன்முதலில் தமிழில்

மொழிபெயர்த்தவர் வெ.ப.சு. லியூட் கால் ஜேம்ஸ் மில்ஸ் (Lieut Col James Mills) என்பார் எழுதிய Indian Stock Owner's Manual என்ற நூலை "இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புத்தகம்" என 1885ஆம் ஆண்டு வெ.ப.சு. மொழிபெயர்த்தார். இந்நூல்தான், ஐரோப்பிய கால்நடை மருத்துவத்தைப் பற்றி முதன்முதலில் தமிழில் வெளிவந்த நூலாகும். கால்நடையியல் துறையில் பணியாற்றும் வெ.ப.சு. தமது பல்வேறு பணிகளுக்கிடையே மிகப் பொறுமையோடு திறமையாக மொழிபெயர்ப்புப் பணியை ஆற்றியுள்ளார். இப்பணி ஈடிணையற்ற பணியாகும் என்று மூல நூலாசிரியரே பாராட்டியுள்ளார்.[4] (Nothing could equal the patience and skill he has displayed in the work performed in addition to his other duties as a probationary in the Cattle Disease Inspector Department now known as civil Veterinary Department.)

இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணும் உயிருக்கு ஆபத்தான பிணிகள் (More deadly form of Cattle Diseases in India) என்ற நூலை மொழிபெயர்த்தார். "அம்மை குத்தலும் அதன் பயன்பாடும்" குறித்து ஒரு சிறு நூலையும் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் அமைந்த நூல்களை அறிஞர்களுக்காக வெ.ப.சு. மொழிபெயர்க்கவில்லை. வயலிலும், பண்ணையிலும் பணி செய்யும் எளிய மக்களுக்குப் புரியும் வண்ணம் எளிதாக மொழிபெயர்த்தார். 'நான் எழுதிய இந்தப் புத்தகங்களைப் படித்துப் பயன்பெற வேண்டியவர்கள் நம்நாட்டு விவசாயிகளும் பண்ணை வேலை செய்யும் பள்ளர், பறையர்களும் ஆவர். அவர்களிடம் நேரில் பேசுவதாக மனதில் பாவனை செய்து கொண்டு எழுதியதனால் தான் இவ்வளவு எளிய நடையில் இவை அமைந்திருக்கின்றன'[5] என்று வெ.ப.சு. தம் நூல்கள் பற்றிக் கருத்துரை வழங்கியுள்ளார். கால்நடைகளின் வெக்கை நோய்க்கு (Rinderpest) ஊசி போடுதல் (Inoculation) முறையை மக்களிடையே அறிமுகப்படுத்திப் பயன்பெறும்படி அறிவுறுத்தினார். தாம் ஏற்றுக்கொண்ட வேலையை உண்மையாகவும் திறம்படவும் செய்வதால், வெ.ப.சு.வை மேலதிகாரிகள் பெரிதும் பாராட்டியுள்ளனர். ஹோல்னஸ் துரை (Major J.D.E. Holnes), "விடா உழைப்புக்கும் உண்மைக்கும் இவர்கள் அந்த இலாக்காவில் தலைசிறந்தவராக அமைந்தார்கள் என்று புகழ்ந்துள்ளார்.

### தமிழ்மொழி ஈடுபாடு

கால்நடை மருத்துவத் துறையில் பணியாற்றிய போதும், தமிழ்மொழி மீது பற்றுக்கொண்டவர் வெ.ப.சு. அவர்தம்

இளமைச்சூழல், தமிழ்மொழிப் பயிற்சிக்கு வாய்ப்பாக அமைந்தது. மேடைத்தளவாய் அரண்மனையில் முத்துச்சாமிபிள்ளை என்ற இருகண்ணும் இழந்த வேலையாள் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கதைக்களஞ்சியம். சிறுவனாக இருந்தபோது, இவரிடம் வெ.ப.சு. அல்லி அரசாணிமாலை, பவளக்கொடிமாலை, இராமாயணம், திருவிளையாடல் போன்ற கதைகளை எல்லாம் கேட்டறிந்தார். தம் தமிழ்மொழிப் பயிற்சிக்கு மூல குரு முத்துச்சாமி பிள்ளை என்று வெ.ப.சு. குறிப்பிட்டுள்ளார்.

சிற்றிலக்கிய வகைகளான குற்றாலத் தலபுராணம், வருண குலாதித்தன்மடல், கூளப்பநாயக்கன் காதல், விறலிவிடுதூது போன்ற நூல்களைத் தம் பதினான்காம் வயதுக்குள் அரண்மனையில் வளர்ந்த வெ.ப.சு. படித்து முடித்தார். அந்நாளில், திருநெல்வேலி நகரில், தெற்குப் புதுத்தெருவில் கவிராச நெல்லையப்பப்பிள்ளை வீட்டின் தோட்டத்தில் அமைந்திருந்த 'சவுக்கை' தமிழ் வளர்க்கும் பண்ணையாயிருந்தது. இங்கு வேம்பத்தூர் பிச்சுவையர், கல்போது புன்னைவனக் கவிராயர், முகவூர் கந்தசாமிக் கவிராயர், அவர் மகன் மீனாட்சி சுந்தரக் கவிராயர், சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் போன்ற தமிழ்ச்சான்றோர் உவப்பத் தலைகூடி ஒண்தமிழ் ஆராயும் வழக்கு நிலவியது. இச்சவுக்கைப் புலவர்களோடு, வெ.ப.சு. பழகிப் பல நூல்களைக் கேட்டு, வாங்கிக் கற்றுணர்ந்தார். திருவிளையாடற் புராணம், குற்றாலத்தலபுராணம், பாரதம், ஔடதம், கலிங்கத்துப்பரணி முதலான நூல்களை எல்லாம் கற்றார். சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணத்தையும், கச்சியப்ப முனிவரின் தணிகைப் புராணத்தையும் படித்தார். மேலும் நன்னூல், சுவாமிநாத தேசிகரின் இலக்கணக்கொத்து, சிவஞான சுவாமிகளின் இலக்கண விளக்கச் சூறாவளி, பிரயோக விவேகம் போன்ற இலக்கண நூல்களை எல்லாம் கற்றுத் தேர்ந்தார். இருபது வயது நிரம்பும் முன்னே, இலக்கண இலக்கிய நூல்களை எல்லாம் ஆர்வமுடன் படித்துப் புலமை பெற்ற திறன் வியத்தற்குரியது. சேற்றூர் சமீன்தார், எட்டையபுரம் சமீன்தார், ஊற்றுமலை சமீன்தார் போன்றோர் அந்நாளில் தமிழ்ப்புலவர்களாக விளங்கினர். அரண்மனையில் வாழ்ந்த வெ.ப.சு. இத்தகு புலவர்கள் அருகிலிருந்து அவர்களின் திறமைகளை அறிந்து போற்றுவார். தாமும் அப்புலவர்களைப் போலச் சில பாட்டுக்கள் புனைந்து பாடியுமுள்ளார். ஊற்றுமலை சமீன்தார் இருதாலய மருதப்ப தேவருக்கும் வெ.ப.சு. குடும்பத்துக்கும்

நெருங்கிய நட்பு இருந்தது. வெ.ப.சு. இவர் மீது சில பாட்டுக்கள் பாடியுள்ளார்.

## கம்பராமாயணக் காதல்

நெல்லையில் இருந்த போது கம்பராமாயணத்தைப் படிக்கும் வாய்ப்பு வெ.ப.சு.க்கு வாய்க்கவில்லை. 1887இல் சென்னைக் கிறித்துவக் கலாசாலையில் மாணவராகச் சேர்ந்து பயின்றார். பிற மாணவர்களுக்குத் தமிழ்ப்பாட நூலில் இடம்பெற்றுள்ள கம்பராமாயணப் பாடல்களைக் கற்றுத்தருவதற்காக வெ.ப.சு. அதனைப் படிக்கத் தொடங்கினார். விடுதல் அறியா விருப்பினர் ஆனார். தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறும் நோக்கில் 'கம்பராமாயண சாரம்' என்ற நூலை வெளியிட்டார்.

## இலக்கிய வட்டம்

வெ.ப.சு. அருந்தமிழ்ச் சான்றோர் பலருடன் பழகித் தம் இலக்கிய வட்டத்தைப் பெருக்கிக் கொண்டார். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரோடு, வெ.ப.சு.வுக்கு ஆழ்ந்த நட்புறவு உண்டு. இவ்விரு கிழவர்களும் ஐம்பதாண்டுகளாகப் பழகிய நண்பர்கள். திருநெல்வேலி இந்துக் கலாசாலை முதல்வராக இருந்த சாமி ஐயர் என்பாரே இவர்கள் இருவரையும் அறிமுகப்படுத்தி இருவர் நட்புக்கும் பாலமாக இருந்தவர். உ.வே.சா. அவர்களால் திருவாவடுதுறை ஆதீனமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் நட்பும் வெ.ப.சு.வுக்குக் கிடைத்தது. திருநெல்வேலிக் கவிஞர் அழகிய சொக்கநாத பிள்ளை, முரா. அருணாசலக் கவிராயர், பூண்டி அரங்கநாத முதலியார், பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரனார், அ. மாதவையா ஆகியோருடனும் வெ.ப.சு. நன்கு பழகியுள்ளார். இவர்களுள் அழகிய சொக்கநாத பிள்ளை, அ. மாதவையா ஆகியோரிடம் வெ.ப.சு. மிகுந்த நட்பு பூண்டிருந்தார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, "இவர்கள் தற்காலம் காணும் ஆங்கிலம் படித்த ஏனைய தமிழ்ப்புலவர்களைப் போல்வார் அல்லர். சிறந்த தனித்தமிழ்ப் பண்டிதருள் ஒருவரென்னும்படி ஆங்கிலம் படித்தும் தமிழன்பும் பாண்டித்யமும் நிறைந்த ஒரு புலவர்"[6] என்று வெ.ப.சு.வைக் கற்றோர் அவையில் பாராட்டியுள்ளார். பேராசிரியர் இராமாயணத்தில் உள்ளுறையாக அமைந்து கிடக்கும் தென்னிந்திய சாதி வரலாற்றைக் குறித்துக் கருத்துரை வழங்கினார். அவர் இறந்தபின்னர் அக்கருத்துக்களை எல்லாம் அப்படியே "சுரோதா" என்ற புனைபெயரோடு,

இராமாயணத்தில் உள்ளுறைப் பொருள், என்ற தலைப்பில் 'தக்ஷிணதீபம்' இதழில் எழுதி வெளியிட்டார். சுந்தரம்பிள்ளை எண்ணிய எண்ணங்களைத் தமிழ் கூறும் உலகம் அறியச் செய்த பெருமை, வெ.ப.சுவைச் சாரும்.

அ. மாதவையாவும், வெ.ப.சு.வும் திருநெல்வேலி இந்துக் கலாசாலை மாணவர்கள். இருவரும் தமிழால் நட்பு பூண்டவர்கள். ஒருவர் இயற்றிய நூல்களை மற்றொருவர் பார்வையிட்டுத் திருத்தமுறச் செய்தும் வந்தார்கள். வெ.ப.சு. ஆங்கிலக் கவிஞர் மில்ட்டன் இயற்றிய, சுவர்க்கநீக்கம் (Paradise Lost) என்னும் காவியத்தின் முதற்காண்ட மொழிபெயர்ப்பைத் தமிழில் விருத்தப்பாவில் 'சுவர்க்க நீக்கம்', எனப் பதிப்பித்து வரும் வேளையில், பம்பாய் மிருக வைத்திய கலாசாலையில் பயிற்சி பெறும்படி அனுப்பப்பட்டார். அப்போது மாதவையா அப்பதிப்பு வேலையை, மேற்கொண்டு முற்றுப் பெறச் செய்தார். அதோடு அந்நூலுக்கு அணிந்துரை அவாவி, திருவனந்தபுரம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளைக்கு அனுப்பினார். இவ்வுதவிகளை மறக்காது வெ.ப.சு.

இன்சுவர்க்க நீக்கத்துக்கு யான்பெற்ற தாயாக
மன்செவிலித் தாயானாய் மாதவா!– முன்சொலந்நூற்(கு)
யான்கொண்ட அன்புக் கிரட்டி பூண்டு ஆதரிப்பாய்
மீன்கொண்ட நீர்ப்புவியின் மேல்

என்ற வெண்பா பாடித் தம் நன்றியுணர்வை வெளிப்படுத்தினார். அ.மாதவையா தாம் எழுதிய விஜயமார்த்தாண்டம் என்னும் நூலை வெ.ப.சுவுக்கு உரிமையாக்கித் தம் அன்பை வெளியிட்டுள்ளார்.

நற்றமிழ் வளர்க்கும் நாவலன் அன்றியும்
செய்குதற் கருமையும் செய்தபின் காப்பும்
பிறைமதி யன்ன நிறைதகு பெற்றியும்
பயில்தொறும் நூலென இனிக்கும் பான்மையும்

ஒத்த உணர்ச்சியின் உற்ற கிழமையும்
அகநெகு மெய்ம்மையும் அல்லல் உழப்பும்
மிகுதியின் மேற்சென் றிடிக்கும் மேன்மையும்
உடுக்கை இழந்தோன் ஒண்கையின் உதவியும்
..... ..... ..... ..... .....
மற்றெலா நலனும் மன்னிய நட்பினன்

என்று வெ.ப.சு.வின் நட்பையும் அருங்குணத்தையும் நற்றமிழ்த் தொண்டையும் பாராட்டிப் புகழ்ந்துள்ளார், அ. மாதவையா.

## பொது நலப்பணி

வெ.ப.சு. அரசுப்பணியில் கால்நடை மருத்துவ இலாக்காவில் அமர்ந்து பணியாற்றிய போதும் ஓய்வு பெற்ற பின்பும் தமிழ்மக்களுக்குப் பல்வேறு வகையில் பணியாற்றியுள்ளார். பல கௌரவப் பதவிகள் ஏற்று நற்பணி ஆற்றியுள்ளார். 1916ஆம் ஆண்டு திருநெல்வேலித் தாலுகா போர்டின் அங்கத்தினராகவும், பின் 1919இல் அதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். சேறு, குப்பை சேராமல் சாலை பராமரிப்புப் பணியில் ஈடுபட்டும், நிலங்களைக் குத்தகைக்கு விட்டும் நகராட்சிக்கு ஐயாயிரம் ரூபாய் வருமானம் வரும்படியும் பணி செய்துள்ளார். 1922ஆம் ஆண்டு மாவட்ட ஆணையராக இருந்த லயனல் டேவிட்சன், வெ.ப.சு.வின் நேர்மையையும் ஒழுக்கத்தையும் அறிந்து, அவரைத் தென்காசிப் பெஞ்சு கோர்ட்டின் தலைவராய் நியமித்தார். 1926ஆம் ஆண்டு முதல்நாள் மாட்சிமை தாங்கிய ஐந்தாம் ஜியார்ஜ் மன்னர் இவருக்கு ராவ்சாகிப் பட்டமளித்துச் சிறப்பித்தார்.

அன்றைய திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் தம்புத்துரை (A. Moy. Tampoe- M.A. I.C.S.) 1.5.1926இல் தென்காசியில் இராவ்சாகிப் பட்டம் பெற்றதற்குப் பாராட்டு விழா ஏற்பாடு செய்தார்.

## தமிழ் வழிக்கல்வி

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்த பெருமை வெப.சுவைச் சேரும். தமிழ்மொழி வழிக் கல்வியைப் பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்த அரசு எண்ணினாலும் தமிழில் அறிவியல் துறை சார்ந்த நூல்கள் இல்லை. சென்னையில் தமிழ்வழிக்கல்வி சாத்தியமா என்பது பற்றி ஆராய அரசு ஒரு குழுவை அமைத்தது. தமிழ்மொழி தனியே இயங்கும் தன்மை உடையதன்று; அறிவியல் நூல்கள் இதுவரை தமிழில் இல்லாததே அதற்குச் சான்று என்று கூறித் தமிழ்வழிக் கல்வியை நிராகரித்தது. ஆனால் அக்குழுவில் இருந்த வெப.சு. ஏற்கெனவே தமிழில் பல ஆண்டுகளுக்கு முன்னே இலங்கையில் இருந்த மருத்துவக் கல்லூரியில் பயன்படுத்தி வந்த அங்காதி பாத சாஸ்திரம், ரணவைத்தியம், பிரசவநூல் முதலிய நூல்களைக் குழுவின் முன் எடுத்துக்காட்டினார். அதன் பின்னர்த்

தமிழ்மொழிக்கு என்று ஒரு பல்கலைக்கழகம் நிறுவலாம். அப்படி நிறுவினால் அதற்குரிய நூல்களை எழுதலாம் என்றும் குழு பரிந்துரை செய்தது. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் ஒரு பல்கலைக் கழகத்தையும் நிறுவினார். வெ.ப.சு. அவர்களும் கால்நடையியல் படிப்புக்காகத் தமிழில் கால்நடையியல் நூல் எழுதித் தமிழ்வழிக் கல்விக்குத் தம்பங்கினை ஆற்றியுள்ளார்.

## காலத்தைப் பாடும் கவிஞர்

"விரைந்து எழுதும் கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், மொழி வித்தகர், கவிஞர் என்ற பல்வேறு நிலைகளில் தாங்கள் ஒரு சான்றாகத் திகழ்கிறீர்கள்; எவராலும் பின்பற்றுதற்கரிய திறன்கள் பெற்றுள்ளீர்; சுருங்கச் சொன்னால் தமிழ் உலகம் என்றும் ஆழ்ந்து சிந்தித்து நன்றியைத் தெரிவிக்க வேண்டிய நிலையில் கடன்பட்டிருக்கிறது"[7] என்று திவான் பகதூர் எஸ். பவானந்தம் பிள்ளை பாராட்டியுள்ளார். (As a vigorous prose writer, translator, commentator, and a poet you have set an example which as unprecedented as it is difficult to be followed. Infact you have placed the Tamil world under deep debt of gratitude - Diwan Bahudur S. Bavanandam Pillai, Asst. Commissioner of Police, Madras 27.7.1928).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்த இக்கவிஞர் எண்பது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த முதுபுலவர். அவர் காலம் சமீன்தார்கள் வாழ்ந்த காலம். தனிமனிதப் புகழ்பாடும் சிற்றிலக்கியங்கள் உருவான காலம். ஒரு கோவை பார்த்து ஒரு கோவை, ஒரு மாலை பார்த்தொரு மாலை பாடும் கோலம் மிகுந்த காலம். இக்காலக் கட்டத்தில் வாழ்ந்த இக்கவிஞரும், சிற்றிலக்கிய வகைகளையே படைத்தார். காலத்துக்குத் தக்கபடி தான் கருத்தமைந்த கவிதைகள் வெளிவரும்[8] என்பார் ஆ.வேலுப்பிள்ளை. அவ்வக் காலத்திற் சிறப்புற்றிருந்த கருத்துக்கள் அவ்வக்கால இலக்கியங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன.

## நெல்லைச் சிலேடை வெண்பா

கவிஞரின் சிலேடை வெண்பா நெல்லை என்ற ஊர்ப்பெயரைத் தலைப்பில் கொண்டுள்ளது. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் வெண்பா அந்தாதி என்பதும் ஒன்று. இருபொருள் பயக்கும் சிலேடை அமைப்பில் நூறு பாடல்கள் அமைவது சிலேடை அந்தாதியாகும். இக்கவிஞர் பாடிய நூறு பாடல்களிலும் இரண்டாவது அடியில் மூன்றாம் சீர் நெல்லையே என்று ஊர்ப்

பெயர் விளிக்கப்பட்டுள்ளதால் இச்சிற்றிலக்கியம் நெல்லைச் சிலேடை வெண்பா எனப் பெயர் பெற்றது.

தமிழ்ப்பாக்களின் சுவையைத் திராட்சாபாகம், கதலி பாகம், நாளிகேரப்பாகம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறுவர். சிறிதும் சிரமம் இன்றிப் படித்தின்புறக் கூடிய கவிதைகள் திராட்சாபாகப் பகுதியுள் அடங்கும். சிறிது சிரமப்பட்டுப் பின்னர்ப் பொருள் தெரிந்து சுவைக்கக் கூடியது கதலிபாகப் பகுதியாகும். மிகுந்த இடருற்று சுவை அறியத்தக்க முறையில் அமைந்த கவிதைகள் நாளிகேரப்பாகப் பகுதியில் சேரும். நெல்லைச் சிலேடை வெண்பாவை, நாளிகேரப்பாகக் கவிதை எனலாம். வெ.ப.சு.வின் அரிய தமிழ்ப்புலமைக்கு இந்நூல் சான்றாகும்.

"இந்நெல்லைச் சிலேடை வெண்பா, திருநெல்வேலி என்னும் ஸ்தலத்தை முன்பாதியில் சிலேடை வகையால் சிறப்பித்தும், அத்தலத்தில் எழுந்தருளிய சிவபிரானைப் பிற்பகுதியில் திரிபு வகையால் சிறப்பித்தும் கூறப்பெற்ற நூறு வெண்பாக்களை உடையது. சிலேடையும் திரிபும் செம்பாகமாகவே அமைக்கப் பெற்றிருத்தலால், சிறிது ஊன்றி நோக்கிற் பொருள் காண்டல் எளிதே. பொருள் புலப்பட்டவுடன் மனத்தில் எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காணல் அரிதாம்" என்று முரா. கந்தசாமிக் கவிராயர் விவேகபானு என்ற இதழில் புகழ்ந்துரைத்துள்ளார்.

**அருண் மணங்கமழும் பொருளின் சுவையும்**
**மறைதரு சொற்சுவை யமையும்**
**மருவுற விசைத்த சிலேடையின் வியப்பும்**
**வாய்த்தநற் கற்பனை வனப்பும்**
**தருபத மதுரங் கொழித்திடும் பொலிவும்**
**சார்திரிபு யமகத்தகவும்**
**தெருடரும் யாரும் புகழ்தர நெல்லைச்**
**சிலேடை வெண்பாத் தமிழ்**

என்று திருநெல்வேலி கவிராச நெல்லையப்பப் பிள்ளை கூறுவதே இந்நூலின் பெருமைக்குரிய சான்றாகும். இந்நூல் அரங்கேற்றப்பட்ட ஒரு நூலாகும். சொல், பொருண்மை குறித்து விவாதம் ஏற்பட்டதால் குறிப்புரை எழுதியதாக வெ.ப.சு. கூறியுள்ளார்.

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, நவநீதப் பாட்டியல் என்ற நூலின் பதிப்புரையில் வழக்கிலுள்ள சிற்றிலக்கியங்கள்

எண்பத்தைந்து என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வெண்ணிக்கையில் சிலேடை வெண்பா இடம்பெறவில்லை. தொல்காப்பியர் நாற்பத்திரண்டு இலக்கிய வகைகளைக் குறித்துள்ளார். பாட்டியல் நூல்கள் தொண்ணூற்றாறு என்கிறது. இதில் அந்தாதி அடங்குகிறது. அந்தாதி யாப்பில் நெல்லைச் சிலேடை வெண்பா அமைந்திருப்பதால், கவிஞரின் இப்படைப்பு சிற்றிலக்கியமே என்பது தெளிவு. அந்தாதி என்பது முன்னைய பாடலின் இறுதிச்சீர் அடுத்த பாடலின் முதலாவதாக அமைவதாகும். அம்முறையில் இந்நூல் அமையவில்லை. நூறு பாடல்கள் என்ற எண்ணிக்கை அடிப்படையில் மட்டுமே வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. அந்தாதித் தொடை அமைப்பு உள்ளது. ஆயின் அந்தாதியாகப் பாடல்கள் அமையவில்லை. நூல் முழுதும் அந்தாதித் தொடை அமைப்பு இல்லாததால், இந்நூலுக்கு வெ.ப.சு. நெல்லைச் சிலேடை வெண்பா என்றே பெயரிட்டுள்ளார்.

**தேறுசைவ ருங் கணவர்த் தீர்ந்தோரும் வெண்ணிலவில்**
**நீறு புனைந்திடூஉ நெல்லையே – மாறன்**
**அடிச்சுவடு வேய்ந்தார் அடியார் சிரமேல்**
**அடிச்சுவடு வேய்ந்தார் அகம்**

வெண்ணிலவினீறு - வெள்ளிய ஒளியுடைய விபூதியைப் புனைந்து இடும் தேறுசைவர் - அலங்கரித்து அணியும் சைவர்களையும் நீறுபு னைந்திடும் கணவர் தீர்ந்தோரும்-காதலரைப் பிரிந்த பெண்களையும் கொண்ட நெல்லையே, மாறன் அடிச்சுவடு ஏய்ந்தார்-பாண்டியன் பிரம்பினால் அடிக்க அந்த அடித்தழும்பைத் தாங்கினார் ஆகிய சிவபெருமான் அடியார் சிரமேல் அடிச்சுவடு வேய்ந்தார்-அடியார் தலைமேல் தம் அடிச்சுவட்டை அணிவித்தார் என்று பிரித்துப் பொருள் காணும் போது கவிதையின் பொருள் புலனாகிறது.

நெல்லைச் சிலேடை வெண்பா, திருநெல்வேலியின் அரும்புகழை இயம்பும் நூலாகும். பொதியமலை வர்ணனை, மருதநிலச் செழுமை, தெரு ஒழுங்குகள், நெசவுத்தொழில், மகளிர் நிலை, கும்ப முனி பற்றிய செய்தி, தலபுராணங்கள் ஆகியன இந்நூலில் இயம்பப்பட்டுள்ளன. விநாயகர் துதி, சமயாச்சாரியார் துதி, அவையடக்கம், நூல்நுவலும் செய்தி ஆகிய அமைப்புகள் இந்நூலின் சிறப்புகளாகும். காந்திமதி அன்னையை வடிவன்னை என்றழைக்கிறார். வடிவு என்ற பெயர் நெல்லைநகர் மகளிர்

பெயராகப் பெருவழக்கில் அமைந்திருப்பது எண்ணற்குரியது. ஆங்கிலம் கற்ற வெ.ப.சு., சிலேடை, திரிபு நயம் மிக்க அரிய நூலை எழுதி அருந்தமிழ்க் கவிஞராக விளங்குகிறார்.

## கோம்பிவிருத்தம்

நரிவிருத்தம், எலிவிருத்தம், கிளிவிருத்தம் என்ற நூல்கள் தமிழில் இருக்கின்றன. அம்மரபைப் பின்பற்றி வெ.ப.சு. கோம்பிவிருத்தம் பாடியுள்ளார். கோம்பி என்பது பச்சோந்தி என்றும், ஓணான் என்றும் கூறப்படுகிறது. விருத்தப்பாவால் அமைந்த இந்நூலுக்கு மூலநூல் ஜெ. மெர்ரிக் என்பவர் எழுதிய கேமலின் என்ற ஆங்கிலக் கவிதை நூலாகும். திருத்தக்கதேவர் எழுதிய நரிவிருத்தம் சமயநீதியை உரைக்கும் நூலாகும். கோம்பி விருத்தமும் மக்களுக்கு அறமுரைக்கிறது. உள்ளடக்கத்தாலும் உருவத்தாலும் தமிழ்மரபைப் பின்பற்றியுள்ளது. எழுபத்திரண்டு பாடல்களைக் கொண்ட இச் சிறுநூல், உயிரினப் பெயரைத் தாங்கியுள்ளது. கேமலின் என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் பச்சோந்தி, செந்து, ஓந்தி என ஆங்கிலப் பெயரகராதி பொருள் தருகிறது. ஓணான், தெண்டில் எனப் பாமரர் வழக்கில் வழங்கும் கற்றோர் வழக்கான, கோம்பி என்ற சொல்லையே கவிஞர் தேர்ந்துள்ளார். விருத்தப்பாவில் கோம்பியின் பண்புகளை விளக்குவதால், கோம்பி விருத்தம் என்ற பெயர் பெற்றது.

எழுபத்திரண்டு பாடல்களில் பாலைநில வருணனையே பெரிதும் அமைகிறது. இருவர் உரையாடலும், மூன்றாமவன் கருத்தும் சில பாடல்களிலே முடிந்து விடுகின்றன. உண்மையை உலகோர்க்கு உணர்த்தும் முறையில் பச்சோந்தி வெளிப்படுவது அறுபதாவதுபாடல் எனில் எஞ்சிய பன்னிரண்டு பாடல்களும் உவமைகளால் விளக்கப்படுகின்ற நீதிகளே ஆகும். கவிஞரின் கற்பனைக்குத் தக்க சான்றாகக் கோம்பிவிருத்தம் அமைகிறது. உருக்காட்சியிலும் சிறந்து விளங்குகிறது. வெ.ப.சு.வின் மூலநூலே என்று சொல்லும் அளவிற்குத் தமிழ்மரபு கெடாமல் நூல் எழுதப்பட்டுள்ளது. ஒரே கருத்தை விளக்கப் பல உவமைகளைக் கவிஞர் கையாண்டுள்ளார்.

## நிலப்பகுப்பு

தமிழர் நிலத்தை நான்காகப் பகுப்பர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன அவை. மலை, நாடு, காடு, கடல் என முறையே கூறலாம். தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம்,

நெய்தல் என்று வரிசைப்படுத்துகிறார். இளம்பூரணர் 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்று வரும் நூற்பாவுக்கு விளக்கம் தரும்போது "இன்னும் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே, என்றதனால் இம்முறையின்றியும் சொல்லப்படும் என்று கொள்க. அஃதாவது அவற்றுள் யாதானும் ஒன்றை முன்னும் பின்னுமாக வைத்துக் கூறுதல். அது சான்றோர் செய்யுட் கோவையினும் பிறநூலகத்துங்கண்டு கொள்க" என்று கூறுகின்றார். இதனைக் கவிஞர் வெ.ப.சு. நுட்பமாக அறிந்து கோம்பி விருத்தம் முதற் பாடலில்

மருதமா தியநிலம் வாழு மானிடர்
எவருவருங் குளிரினால் மெய்ந் நடுக்குற்இத்
தெருமரு பருவத்துஞ் சேர்ந்த மாந்தரைச்
சுரமென வெதுப்பிடுஞ் சுரமொன் றுண்டரோ

என்று பாடியுள்ளார். தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர் கூற்று நோக்கியே 'மருத மாதிய நிலம்' என்று அமைத்துள்ளார். கவிஞரின் ஊரான வெள்ளகால் மருதம் சான்ற மருதம் தண்பணை சூழ்ந்தது. எனவே கவிஞர் மருதத்துக்கு இன்றியமையாமை தருகிறார்.

### பாலை நிலம்

பாலைத்திணைக்குத் தனியே தொல்காப்பியர் நிலம் குறிக்காவிடினும் அதனைச் சுரம் என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதிகாரம் இயற்றியுள்ள இளங்கோவடிகள் பாலை நிலத்துக்கு,

முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (காடுகாண்:64–66)

என விளக்கம் தந்துள்ளார். பாலைக்குரிய மக்களும் உரிப்பொருளும் உணர்த்தும் தொல்காப்பியர்,

நடுநிலத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநில மருங்கின் முன்னிய நெறித்தே

என்று பாலைக்குக் காலமும் இடமும் உணர்த்துகிறார். வேனிற்காலத்தில் நிகழ்வன கருப்பொருளாகக் கொள்ளப்படும்.

## கருப்பொருள் இயல்பு

பாலை நிலத்தை இரண்டாம் பாட்டில் வர்ணிக்கிறார்.

**தண்மையே வெம்மையாத் தரங்கங் கானலா**
**ஒண்மணி பரல்களா வுற நெகிழ்ச்சியே**
**திண்மையா மீனினந் தீய் மாக்களா**
**அண்மிய கடலென வகன்ற தச்சுரம்**

முதற் பாடலில் நானில மக்களும் குளிரால் நடுக்கமுற்று வருந்தி இப்பாலை நிலம் வந்தால் சுரநோய் போல வெதுப்புகிற நிலை பெறுவர் என்கிறார். பாலை நிலத்தை அதன் பரப்பளவு கருதிக் கடலுடன் ஒப்பிடுகிறார். கடலின் குளிர்ச்சி இப்பாலை நிலத்தில் வெம்மையாகவும், கடல் மணிகள் இங்குப் பருக்கைக் கற்களாகவும், கடல் அலைகள் கானலாகவும், கடலின் நெகிழ்ச்சியான தரை இங்கு இறுகிய தரையாகவும், மீன்கூட்டம் இங்குச் செந்நாய் போன்ற விலங்குகளாய், வழிப்பறி செய்வோராய் மாறி அமைந்திருப்பதாகக் கவிஞர் வருணித்துள்ளார்.

சிவபெருமானுக்குக் கதிரவனும் திங்களும் இரு கண்கள். நெற்றிக்கண் நெருப்பால் ஆனது. இந்த நெற்றிக்கண் நெருப்புப் போன்றது, பாலை நிலத்தின் வெம்மை என்று ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

**சங்கரன் கண்ணெனச் சாற்றும் பானுவுந்**
**திங்களும் பாத்துளேஞ் சிவந்த தீக்கணை**
**எங்கணுங் கண்டில மென்றியம் புவார்க்**
**கிங்குள ததுவென விறுத்த தச்சுரம்**

கடலின் நடுவே அமைந்த வடவாமுகாக்கினி என்னும் தீ உலக ஊழிக் காலத்தில் தோன்றி அழிக்கும் என்பது புராண நம்பிக்கை. அது நீர் நடுத்தீயாயின், இப்பாலை நிலம் நிலநடுத்தீயாக அமைந்து வாட்டுகிறது, என்கிறார் வெ.ப.சு.

**நீர்நடு வடவையுண் டென நிகழ்த்துவார்**
**ஆரது கண்டன ரதனைப் போலன்றிப்**
**பார்நடு நெருப்பெனப் பார்த்த பல்லவர்,**
**சோர்விலா துரைப்பரச் சுடு சுரத்தையே**

பன்னிரு திங்களில் பங்குனியே வெப்பமிகுதியான திங்களாகும். யாதாயினும் ஒன்று செய்ய உடன்பட்டோர் அது செய்யாவிடில்

'பங்குனி மாதத்தில் பகல்வழிப் போவோர் துன்பத்தை அடைவேனாக' என்று சூளுரை செய்யும் வழக்கம் முந்திய காலத்தில் இருந்தது எனக் கவிஞர் குறிப்புரை தந்து பங்குனி மாத வெம்மையைப் பாடுகிறார்.

தீயதே நிலமுமாய்த் திரவ நீருமாய்
வாய்வு மாயதிவ் வைய கத்தென
ஏயுறு பொருளெலாம் வெம்மை யெய்திட
மேயபங்குனியினோர் வெய்ய நாளினே

வெஞ்சுரத்து நிலப் பொருள்களெல்லாம் வெம்மை அடையும்படிப் பங்குனி மாதம் வந்தது என்று உரைக்கிறார்.

கோம்பி பன்னிறம் காட்டும் விந்தைகண்டு சிந்தை குழம்பி நின்ற பயணிகள், யானை காணச் சென்ற குருடர் போலத் திகைத்தனர், என்கிறார்.

பல பல உறுப்பையும் தொட்டுப் பார்த்துத்தாம்
மலைவற அவரவர் மனங்கொள் அங்கம்நேர்
அலகு உரல் சுள(கு) உலக்கை யொப்(பு) யானை

என்கிறார். கோம்பியைப் பற்றிப் பேச, பாலையையும் அதனிடையுள்ள ஒரு சோலையையும் அச்சோலையிடையுள்ள ஒரு தடாகத்தையும் வருவித்து அத்தடாகத்தில் கண்ட நீலவானத்தின் நிறத்தைக் கோம்பிக்கு ஒப்புமை கூறித் தொடங்குகின்ற முறை, நூலின் கட்டமைப்புத் திறனைக் காட்டுகிறது.

கதையமைப்பாலும், கதை கற்பிக்கும் நீதியாலும் பாலை, சோலை, தடாகம், தென்றல் இவற்றின் வருணைகளாலும் இந்நூல் சிறந்து விளங்குகிறது.

### அகலிகை வெண்பா

பழைய கதைகளைக் கையாண்டு காலத்தேவைக்கேற்ப இலக்கியம் படைப்பது எல்லாக் காலங்களிலும் புலவர்களின் மரபாக இருந்திருக்கிறது. பழைய கதைகளையோ அல்லது கதைக் குறிப்புகளையோ அடிப்படையாகக் கொண்டு தேவைக்கேற்ப மாற்றங்களைப் புகுத்திப் புதுவது புனைதல் படைப்பாளரின் திறமையாகும். இராமாயணம், மகாபாரதம் ஆகியன எழுத்தாளர்களுக்குக் கதைச் சுரங்கங்களாக இருந்து வந்திருக்கின்றன. மகாபாரதத்திலும், இராமாயணத்திலும் அகலிகை

கதை இடம்பெற்றுள்ளது. அகலிகை கதை அனைவரும் அறிந்த ஒன்று. இளமைக்கோலம் கொண்ட அகலிகையும், தவக்கோலம் புனைந்த கௌதமரும் வாழ்வில் இணைகின்றனர். அகலிகையை எண்ணிக் காலம் பார்த்துக் காத்திருந்தான் இந்திரன். கௌதமரைத் தந்திரமாக வெளியேற்றிய இந்திரன், கௌதமர் வேடத்தில் அகலிகையை அடைந்தான். இச்செய்தி வெவ்வேறு இலக்கியங்களில் வெவ்வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

## அகலிகை கதை உருவான கதை

ஆங்கில நாடக ஆசிரியரான சேக்ஸ்பியர் எழுதியுள்ள லுக்கிரீசைக் கற்பழித்தல் (Rape of the Lucrece) என்ற நூலே, வெ.ப.சு. அகலிகை வெண்பா எழுதுவதற்கு மூலமாக இருந்தது. கோலாட்டைன் (Collatine) என்பவனுடைய அழகிய மனைவியான லுக்கிரீசு (Lucrece) என்னும் பெண்ணை டார்க்குவின் (Targuin) பலாத்காரமாய்க் கற்பழித்ததைக் கூறும் அக்கதை. அக்கதையில் டார்க்குவின் லுக்கிரீசு படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அறையை நாடும்போது, அவன் மனதில் எழுந்த எண்ணங்களையும், லுக்கிரீஸ் டார்க்குவினிடம் தன் கற்புக்குப் பங்கம் விளைவிக்காமலிருக்க வேண்டி மன்றாடுதலையும் பின்னர் டார்க்குவினால் பலவந்தமாய்க் கற்பழிக்கப்பட்டபின், லுக்கிரீசின் புலம்பலையும் விரிவாக ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார். இந்நூலின் கருத்துக்களைத் தமிழ்மக்களும் அறிய வேண்டும் என்ற அவாவுடன் அகலிகை கதையைத் தேர்ந்தார்.

'இந்நூலிலுள்ள பாட்டுக்களுள் சில நான் முதன் முதல் இயற்றியவை. இவைகளை இயற்றிய போது, கற்புடையாள் ஒருத்தி கற்பழிய நேர்ந்த சமயத்தில் பொறுத்தற்கரிய மனவருத்தமடையும் அதிபரிதாபமான கட்டத்தை வருணிக்கவும் கருதியே இயற்றினேன். இவ்வாறு இயற்றிச் சில காலம் செல்ல, அகலிகை கதையை ஒரு சிறு நூலாக இயற்றலாம் என்றும், அதனில் நான் முதலில் பாடிய பாட்டுக்களை இடைப்பெய்து இணைக்கலாம் என்றும் ஒரு நினைவு தோன்றியது. இந்நினைவின் முற்றுப்பேறே இந்நூல்',[9] என்று வெ.ப.சு. தாம் எழுத நேர்ந்தசூழலை விளக்குகிறார். அகலிகை வெண்பா நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்களால் அமைந்தது. கடவுள் வழிபாட்டுடன் தொடங்குகிறது. எந்தக் குறிப்பிட்ட கடவுளையும் குறிப்பிடவில்லை. அவையடக்கத்தில் அகலிகையைப் பஞ்ச கன்னியருள் ஒருத்தியாகத் தியானிப்பதே இந்நூலுக்கு அவையடக்கம் எனக் கூறுகிறார். ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அன்றைய

அரசராதலின், அரசவாழ்த்தோடு அகலிகை வெண்பா முடிவடைகிறது. இந்நூல் 19.11.1914இல் முதன்முதலாக வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1921இல் அனுபந்தமாகச் சில வெண்பாக்கள் சேர்க்கப்பட்டு வெளிவந்தது. மூன்றாம் பதிப்பு 1938இல் வெளிவந்தது.

## இந்திரனா? தந்திரனா?

இக்காப்பியத்தில் இந்திரன் கொலுவிருக்கும் நேர்த்தியும் அவன் அகலிகை பால் கொண்ட அளவிலா மோகமும், நெஞ்சோடு கிளத்தலும், அவளை அடையச் சமயம் பார்த்தலும், அடைந்த நிலையில் தாழ்வுற்று நிற்பதும் விவரிக்கப்பட்டுள்ளன. எல்லாத் தேவர்களாலும் இறைஞ்சப் பெறும் இந்திரன், இழிவுற்று இறுதியில் நிற்பது, அவனை ஒரு தாழ்வுற்ற தலைவனாகக் காட்டி அனுதாபம் கொள்ளச் செய்கிறது. மனிதரில் மேம்பட்டவர் தேவர். அத்தேவர்களுக்குத் தலைவன் இந்திரன். அவனது காதல் வானில் எத்தனையோ விண்மீன்கள் இடையே ஒரு நிலவு. அது தான் இந்திராணி. இவனது கூடாஒழுக்கம் தேவர்களால் ஒடுக்கப்படவில்லை. தலைவன் என்ற தகுதிக்கு இந்நிகழ்ச்சி தடையாக இல்லை. ஏனெனில் கற்பெனும் நிறை பெண்டிர்க்கே உண்டு. இந்திரனாம் ஆடவனுக்கு இல்லை. தன்னாட்சிக்குட்பட்ட ஓர் அந்தணன் அகலிகையை அடைவதா? ஆணவமும் அதிகாரச் செருக்கும் இந்திரனை ஆட்கொள்கிறது. சிந்தித்தான் இந்திரன்; தந்திரமாய்ச் செயல்பட்டான். இதுவோ தேவர்க்கு அழகு?

## தவமா? அவமா?

கௌதம முனிவரோ முக்காலமும் உணர்ந்தவர். தவ வாழ்வுக்குத் தளிர்க்கொடியாளைப் போட்டியில் வென்று அகப்படுத்த வேண்டுவதன் அவசியம் என்ன? எழிற்கோலம் தாங்கிய ஏந்திழை, துறவுக்கோலம் புனைந்த முனிவர்க்குப் பொருத்தமானவள் தானா? அகலிகை அதனை விரும்பியிருப்பாளா? இல்லை, அவள் விருப்பம் தான் அங்கு எடுபடுமா? ஆள்வழக்கே இல்லா அடவி நடுவே, வேள்வி வளர்க்கும் ஆசிரமத்தில் தன் வாழ்வை அமைத்துக் கொண்டாள் அகலிகை. இங்கே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவள் அகலிகை மட்டுமா? கௌதமரும் அல்லவா? நேரமல்லா நேரத்தில் கோழி கூவியதைக் கேட்டுச் சிந்திக்க வேண்டாமா? முற்றும் உணர்ந்த முனிவனே ஏமாந்தான் எனின் கௌதமர் வடிவில் வந்த இந்திரனைக் கண்டு அகலிகை ஏமாந்தது இயற்கை தானே!

## அகலிகையின் அவலம்

அகலிகையின் அடிமனதில் இந்திரன் பற்றிய ஏக்கம் இருந்திருக்கலாம். எனவே தான் தவவேடம் பூண்டு வந்தவனை யாரென்று அறியாத நிலையில்,

> **எங்கோன் அறியின் என்னாம் என்றறியாய் இந்திரனும்**
> **வெங்கோபத் தீயினின்றும் மீளானே**

என 'இந்திரனும்' என அவன் பெயரைக் குறிப்பிடுகிறாள். உடனே இந்திரன், 'அந்த இந்திரனே', வந்திருப்பதாகச் சாற்றுகிறான். பின்னர் அகலிகைக்கும், இந்திரனுக்கும் இடையே வாக்குவாதம் நிகழ்கிறது. இது மூலக்கதையில் இல்லாத ஒன்று. லுக்கிரீசுக்கும் டார்க்குவினுக்கும் இடையே நிகழும் சொற்போரை மனதிற்கொண்டு இவ்விருவர் உரையாடலை வெ.ப.சு. அமைத்துள்ளார். இவ்வுரையாடல் நாடகத்தன்மை வாய்ந்ததாகவும், பாத்திரப்பண்பு நலனைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளது.

அகலிகை, தன் பக்கத்து நியாயங்களை இந்திரனிடம் எடுத்துரைக்கிறாள். அவள் கூறும் கருத்துக்கள்:

1. பகைவரிடத்தே காட்டும் வலிமையைத் தன்னிடம் காட்டுவது பொருந்தாது.
2. தேவர் தலைவன் பழி செய்தால், அப்பழி தீராது எங்கும் பரவும்.
3. மனைவி, மைந்தர், நண்பர், பகைவர், எவரும் இந்திரனது இப்பழிச்செயல் அறிந்தால் வெறுப்பர்.
4. பழியோடு கூடிய இன்பம், உயிரை அழித்து நரகத்தில் விடும்.

அதற்கு இந்திரன் கூறும் சமாதானம் மிகவும் சாமர்த்தியமாக அமைந்துள்ளது.

1. ஆருயிரை விட்டாலும், உயிரினும் இனியவளை விடுதல் இயலாது.
2. பிற ஆடவர் ஆடையோ, அதில் படிந்த நீர்த்துளியோ, அவர் நிழலோ, காற்றோ பட்டாலே பெண்ணின் கற்பு மாசுபட்டதாகும். அப்படியிருக்க தொட்டபின், சுகமடைய என்ன தடை?
3. தெரியாத குற்றங்கள் செய்யாதன போன்றவையே.
4. இணங்கினால் செல்வம் வழங்கப்படும்.

இந்நிலையில் 'வெற்பின் உச்சி நின்றுருண்டு வீழ்பெரிய பாறை இடை நிற் புறக்கை கொண்டு தடுப்பதையே ஒக்கும்' என்று கூறி இந்திரன் அவளை நெருங்கினான். இந்திரனைத் தடுக்க வலியற்றவளாய் மயங்கி அறிவிழந்து விழுந்து விட்டாள் அகலிகை. இந்திரன் எண்ணம் ஈடேறியது.

### கவித்திறன்

அகலிகை வெண்பா அருங்கவித் திறனும் மிக்கது. இந்நூலில் எழிலார் கற்பனைகள் இடம்பெற்றுள்ளன.

### படைப்புக்கற்பனை

ஆசிரியர் அரிய கற்பனைக் காட்சியைப் படைத்துக் காட்டுதல் படைப்புக் கற்பனையாகும். 'மின்னல் கரிய மேகத்தைக் கூந்தலாக ஒதுக்கிக் கொண்டு, பெண் உருக் கொண்டதாக' அகலிகையை வருணிக்கும் போது இக்கற்பனையின் ஆட்சியைக் காணலாம்.

"இந்திரன் கபடமாகச் சொல்லிய காம வசனமாகிய காற்றானது, செவி வாசல் வழி மன வீட்டில் சென்று, கற்பு தீபத்தைச் சலனமடையச் செய்தது" என்று கற்பனை செய்கிறார்.

"இந்திரனின் தேகம் நெருப்பாக, தழுவுதல் நெருப்பு சூழ்வதாக, வசனம் காற்றாக, அவள் மேனி பொற்குடமாக, அவள் நெஞ்சு குடத்தின் உள்ளே நெய்யாக, அந்த நெய் இளகுதல் போல் நெஞ்சம் இளகுதல் உற்றாள்" என அகலிகை மனநிலையை ஆசிரியர் அழகாகப் படைத்துக் காட்டுகிறார்.

### இயைபுக் கற்பனை

ஆசிரியர் தான் கண்ட காட்சியோடு மற்றொரு காட்சியை இயைத்துக் காண்பது இயைபுக் கற்பனையாகும். இங்கு அகலிகையை எண்ணும் போது இந்திரன் 'இந்தப் பெண்ணொளி எழுந்தவுடன், என் இதய வானில் ஒளி வீசிய மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலான நட்சத்திரங்கள் மறைந்தொழிந்தன. நிலாவான இந்திராணி பகல் நிலவாய் ஒளி குன்றினாள்' என்று எண்ணமிடுகிறான்.

அகலிகையின் கண்களை வருணிக்கும்போது "செம்பவளக் கொடி படர்ந்த வெண்பாற்கடல் நடுவில் நீல விஷம் தோன்றுதல்

போல் செவ்வரி ஓடிய கண்கள் மத்தியில் கருமணி விளங்குகிறது" என்கிறார்.

## கருத்து விளக்கக் கற்பனை

ஆசிரியன் தன் கருத்தை இயற்கைக் காட்சியின் மீதேற்றிக் கூறுவது கருத்து விளக்கக் கற்பனையாகும். சான்றாக, அந்திவானம் செம்மையாக இருப்பது இயல்பு. இந்திரனோ செந்நிறத் தீயானது செவ்வானம் எனப் பேர்மாற்றி வந்து துன்புறுத்துவதாக எண்ணுகிறான்.

**அந்தீ! சொல் உனக்கு யாது தீங்கிழைத்தார்?**

எனக் கேட்கிறான்.

வானவர் கண்கள் இமையா. இதற்கு இந்திரன் ஒரு காரணம் கற்பிக்கிறான். அகலிகையின் அழகைக் கண்டு கண்கள் இமைக்க மறந்தனவாம்.

## உவமை நயம்

அகலிகை இந்திரனை எண்ணி நடுங்கும்போது அவள் நிலையைப் பல உவமைகளை அடுக்கிக் காட்டிப் பரிவோடு விளக்குகிறார்.

**வலையில் அகப்பட்ட மயில் போல**
**புலியானது பற்களினால் கௌவி நகங்களால்**
**பற்றியது போல**
**மேகம் இல்லாமல் மின்னும் இல்லாமல் வெள்ளிடி**
**விழுந்தாற் போல**

கவிஞர் வாழ்ந்த காலத்தில் தீண்டாமை மிகுதியும் இருந்திருக்கக்கூடும். அக்கருத்தை உவமையாக்கியுள்ளார். "தீண்டாத குலத்தார் தொட்ட மண்கலத்தை அதற்கு முன் ஆண்டு கொண்டிருந்த உயர்குலத்தார் பின்னர்த் தொடமாட்டார்கள். இவன் தொட்ட உடம்பை அவன் தொடமாட்டான்" என அகலிகை எண்ணுவதாகப் பாடியுள்ளார்.

## சொல்லணி

வெ.ப.சு. தமிழில் ஆழ்ந்த புலமை வாய்ந்தவர். சொற்கள் இக்கவிஞரிடம் 'எனை வைத்தி' 'எனை வைத்தி' என இறைஞ்சி

நிற்கின்றன. இக்காலக் கவிஞர்களுக்கு அரிதான சொல்லணியை இயல்பாக அமைத்திருக்கிறார்.

**சசி ஆனாள் பகற் சசியானாள்**

இவ்வரிகளில் சசி என்ற சொல் இந்திராணியையும், நிலவையும் குறிக்கிறது.

**அலக்கணீர் வாளா அவள் நெஞ்சு போழக்**
**கலக்கணீர் வாளா கவிழ்த்தாள்**

இவ்வரிகள் 'துன்பம் பிளக்கிற வாளாக அவள் நெஞ்சை அறுக்க, பயனின்றிக் கண்ணீர் விட்டாள்' என்ற பொருளைத் தருவன. அலக்கண் ஈர் என்றும், கண்-நீர் வாளா என்றும் பிரிந்தும் அவை பொருளின்பம் தருகின்றன.

**என்னினிச்**
**சாவத் தடை இச்சண்டாளன் என்றாள் விஞ்**
**சாவத்தடைந்த அணங்கு**

என்ற பாடலில் முதல் மடக்கு பயின்று வந்துள்ளது. சாவத்தடை யாது? என்று விஞ்சு ஆபத்து அடைந்த அணங்கு எண்ணுவதாகப் பொருள் அமைந்துள்ளது.

## உணர்வு வெளிப்பாடு

கௌதமன் முன் அகலிகையும் இந்திரனும் மனம் நடுங்கி ஒடுங்கி நாணி நிற்கின்றனர். இக்காட்சியைச் சுவைபட எடுத்துரைக்கிறார் கவிஞர்.

**உட்கி அடங்கி ஒடுங்கி நடுநடுங்கி**
**வெட்கி மெலிந்து வெளிறி ஒளி-மட்கி**
**உலைந்தார் குலைந்தார் உடைந்தார் இடைந்தார்**
**அலைந்தார் இருவரும்நின் றார்**

அகலிகை வெண்பா - நாடகத்தின் விறுவிறுப்பும், காப்பியத்தின் கவிநயமும் பழைய கதையின் புதுவடிவும் பெற்று, நவில்தொறும் நூல்நயம் நல்குகிறது. பெண்ணின் மனப்போராட்டங்களை உளவியல் முறையில் அணுகிப் பெண்ணின்பால் மதிப்பும் பரிவும் ஏற்படச் செய்து, புதிய சிந்தனையைத் தூண்டுகிறது.

"அகலிகை வெண்பாவில் காணும் வெண்பாக்களைப் படித்துப் பார்த்தேன். அவை சொல்வளமும், பொருள்வளமும் அமைந்து நிரம்ப நன்றாக இருக்கின்றன. இந்நூலிற் காணும் செய்யுட்கள் விரைவிற் பொருள்படுவதாக இருந்தும் ஒவ்வொரு செய்யுளும் இரண்டு முறைக்குக் குறையாமல் படிக்கும்படிச் செய்கின்றன. நூல் முழுவதையும் மெல்லப் படித்துப் பூர்த்தி செய்தேன். ரஸபுஞ்சமாக இருக்கிறது. தமிழ்ப் பாஷையை நன்றாகக் கற்றவர்கள் இதுவரை எதிர்பாராத ஓர் ஆனந்தத்தை இதனால் அடைவார்கள் என்று நிச்சயிக்கிறேன்" என்று சாமிநாதையர் கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

**சுவர்க்க நீக்கம்**

ஜான்மில்ட்டன் எழுதிய Paradise Lost (பாரடைஸ் லாஸ்ட்) Paradise Regained (பாரடைஸ் ரீகெய்ன்டு) என்பவை ஆங்கிலத்தில் பெருங்காப்பியங்கள். தமிழில் இந்தச் சுவர்க்க நீக்க நூல், வேதக்கண் ஐயரால், 'ஆதி நந்தவனப் பிரளயம்' என்ற நாடக நூலாகவும், தாமஸ் வேதநாயக நாடாரால் 'பூங்காவன பிரளயம்' என்ற அம்மானை நூலாகவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் சான்ற வெ.ப.சு. மில்ட்டனின் சுவர்க்க நீக்கம் நூல் ஒன்றை மட்டும், 'முதற்காண்டம்' என்ற பெயரால் நூலாக்கினார். கம்பராமாயண ஈடுபாட்டின் காரணமாக அதன் உட்பிரிவுகளாகக் காண்டங்களைக் கண்டு தமது படைப்பிற்கும் நூலென்று பெயரிடாது, முதற்காண்டம் என்றே பெயரிட்டார். இருமொழிப் புலமை வாய்ந்த வெ.ப.சு. மில்ட்டனின் 798 காவிய வரிகளை, 241 பாடல்களில் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். விருத்தப் பாடல்களால் ஆனது. தமிழ் மரபுக்கேற்ப இம்மொழிபெயர்ப்புக் காவியம் அமைந்துள்ளது. சி.வை. தாமோதரம் பிள்ளையின் சிறப்புப் பாயிரத்தோடு நூல் தொடங்குகிறது. ஆங்கில முடிவுரை, தமிழ்முடிவுரை, மில்ட்டனின் சரித்திரம், சுவர்க்க நீக்க, மொழிபெயர்ப்பு-முதற்காண்டம், மேற்படி வசனம், சுவர்க்க நீக்க வியாக்கியானங்கள், அரும்பத விளக்கம், பரிசோதனைப் பத்திரம் எனப் பிரிக்கப்பட்டு 196 பக்கங்களில் முடிகிறது.

முதற்காண்டம் முதல் ஆறு பாடல்களில் விலக்கப்பட்ட கனி குறித்து விளக்குகிறார். சாத்தானால் மனிதன் பாவம் செய்கிற நிகழ்ச்சியை ஏழு முதல் இருபத்தோராம் பாடல் முடியக் கூறுகிறார். நரகத்தில் விழுந்த சாத்தானின் நிலைமை இருபத்திரண்டு முதல்

அறுபது வரை உள்ள பாடல்களில் அமைகிறது. பெயல் செய்புவை நோக்கிச் சாத்தான் கூறிய பதிலுரை ஒன்பது பாடல்களிலும் சாத்தானின் சம்வாதம் எண்பதாம் பாடல் முடியவும் அமைக்கப்பட்டுள்ளன. சாத்தானின் உருவத்தோற்றம் 87 பாடல் முடிய ஏழு பாடல்களில் இடம் பெறுகிறது. தீக்கடலில் கிடக்கும் தேவதூதர்களின் அவலம், தூதர்களின் தோற்றம், சாத்தான் படைத்திறன், சாத்தான் கடவுளிடம் தோற்றுப்போதல் எனச் சுவர்க்க நீக்கக் கதைப் பகுதி அனைத்தையும் மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.

### மொழிபெயர்ப்புத் திறன்

நரகத்திலே சாத்தானும், அவனைச் சேர்ந்தவர்களும் தள்ளப்பட்ட போது, சாத்தான் தான் வந்தடைந்திருக்கும் புதிய இடத்தை எப்படி ஏற்றுக்கொள்கிறான் என்பதை ஆங்கில மகாகவியான மில்ட்டன்,

**Here for his envy will not drive us hence**
**Here we way reign secure and in my choice**
**To reign in worth ambition through in hell**
**Better to reign in hell than serve in heaven**

என்று அழகாக எழுதியுள்ளார். இதனை வெ.ப.சு. மிகத் திறம்பட விருத்தப்பாவில் மொழிபெயர்த்துள்ளார்.

*இங்குநின்று நமை துரத்தான் யாம்ஓர் கவற்சி யிலாதாட்சி*
*இங்குபுரியலாம் நரகின் எனினும் இறைமை நயத்தகும் ஈ (து)*
*இங்கென் கருத்தால் வானிடைத் தொண்டியற்று குடியா*
*வாழ்தலினும்*
*இங்கு நிரையத்(து) இறைவனாய் எய்தல் இனியது இனியதரோ!*

மூல நூல் கருத்துகளெல்லாம் மொழிபெயர்ப்பில் அப்படியே அமைந்து விளங்குவதை உணரமுடிகிறது. மில்ட்டன் கவிதையில் உள்ள கருத்துக்களைக் கவித்திறன் குன்றாது தெளிவாக உண்மையாகத் திட்டமாக மொழிபெயர்த்துள்ளார் வெ.ப.சு. வெ.ப.சு.வின் கடும் உழைப்புக்குச் சான்றாக இந்நூல் விளங்குகிறது என்று T. வாக்கர் பாராட்டியுள்ளார். (The explanations of Milton's Poems are wonderfully accurate and show that you have expended great pains over them. Those who know Milton's paradise lost will be able to see for themselves how faithful your rendering is- Extract from the letter of Rev: T. Walker M.A. 29.12.1896).

இந்நூலின் மொழிநடை செவ்வியல் மரபு சார்ந்ததாகவும், காவியத்துக்கேற்ற யாப்பு பின்பற்றப்பட்டுள்ளதாகவும் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி போற்றியுள்ளார். (The Language of the book is classical and the metre which you have used is very well adopted to the graneur of the poem). G.U. போப்,

> It is a strange thing that the great English Christian Epic should be reproduced, in this end of the century in Tamil for the use principally of non-Christian and that the translator himself should be non-Christian. One of the readers of the book in India has called it a Christian puranam

என்று இந்நூலைப் பாராட்டியுள்ளார். நல்ல தமிழ் நடையில் ஓசை நயத்தோடு சுவர்க்க நீக்கத்தை எழுதியுள்ளார்.

**of Man's first disobedience and the fruit**
**of that forbiden tree whose mortal taste**
**Brought death into the world and all woe**

என்ற தொடக்க அடிகளை,

**மானுடன் முனாட் பரன்பணி கடந்ததும், மரணம்**
**ஆனவெம்பயன் தரும் எதன் நுகர்ச்சியால் அவனிக்**
**கூனவன்துயர் யாவையும் உடனுற மிகுத்துத்**
**தான் அடைந்தது? அத்தவிர் மரக்கனி தனையும்**

என்று தன் முதற் பாடலில் மொழிபெயர்த்திருப்பது தமிழ்ச் சொல்லாக்கத்திற்குச் சான்றாகும்.

வெ.ப.சு.வின் மொழிபெயர்க்கும் திறனைச் சில சொற்களைக் கொண்டு அறியலாம்.

| | | |
|---|---|---|
| Heaven | - | பரமண்டலம் |
| Universal space | - | பெருவெளி |
| Sacred Hill | - | பரிசுத்த பருவதம் |
| Pandemonium | - | சர்வபைசாச மாளிகை |

பெயர்களில் கூட அதிக உச்சரிப்பு ஒலி மாற்றங்களைச் செய்யவில்லை.

| | | |
|---|---|---|
| Michaeal | - | மிகாவேல் |
| Gabrial | - | காபிரீல் |
| Raphael | - | ராபேல் |
| Satan | - | சாத்தான் |
| Beelzebub | - | பெயல்செபு |
| Messiah | - | மேசியா |
| Moloch | - | மோளோகு |

"தமிழ்க் காதல்தான் இக்கிழவனார் கண்டுபிடித்த இளமையின் மர்மம் . . . தமக்குத்தாமே இவர் செய்து கொண்ட யௌவன சிகிச்சை. தாம் இயற்றியது சிலேடை வெண்பாவாயினும், வேறு புது முறைச் சில்லறை பிரபந்தமாயினும், மில்ட்டன் மகாகவியின் பாரகாவியமான சொர்க்க நீக்கத்தின் மொழிபெயர்ப்பாயினும் எல்லாம் இவர்அனுபவித்து வந்த தமிழின்பத்தின் விளைவுதான்" என்று பி.ஸ்ரீ. பாராட்டுவது வெ.ப.சு.வுக்கு மிகவும் பொருந்தும். இராமாயணக்காதலே மில்ட்டன் காவியத்தின் மீது காதலாக ஏதுவாகியது. இராமனே சுவர்க்க நீக்கக் கடவுள். சாத்தானே இராவணன். கம்பராமாயணக் காப்பிய விருப்பத்தின் காரணமாக, மொழிபெயர்ப்புக்கு மில்ட்டனின் சுவர்க்க நீக்கத்தில் பன்னிரண்டு காண்டங்களில் முதல் காண்டத்தை (Book-I) எடுத்துக் கொண்டார்.

## தனிக்கவித் திரட்டு

தனிப்பாடல்களின் உட்பொருள் அடிப்படையில் தொகை நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. கையறுநிலைப் பாடல்கள், பாராட்டுப் பாடல்கள், கவிமடல்கள், நிகழ்ச்சிகளை விளக்கும் பாடல்கள் ஆகியன இத்திரட்டில் அடங்கும். வெப.சு. தம்மோடு பழகின நண்பர்களை இழந்த போது, பாடிய இரங்கற்பாக்கள் இவர் தம் தனிக்கவித்திரட்டு என்ற நூலில் உள்ளன. தொகுக்கப்பட்டிருப்பதால் இது தொகை நூலாகும். தனி ஒருவரின் சொந்த அனுபவம் ஆதலின் தனிக்கவித்திரட்டு என்று தலைப்பு அமைந்தது.

கடவுள் வாழ்த்து, குரு வணக்கம், அறிவுரைகள், அகப்பொருள் துறைகள், பலசந்தர்ப்பங்களில் பாடியவை, நிருபகவிகள், சிறப்புப் பாயிரங்கள், தற்சிறப்புப் பாயிரங்கள் என்ற வைப்புமுறையில் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீலஸ்ரீ

அம்பலவாண பண்டார சன்னிதிகளை வெ.ப.சு. முதன்முதலாகச் சந்தித்தபோது பாடிய, "அம்பலவாண தேசிக மாலை", என்பது இந்நூலின் ஒரு பகுதியாக அமைகிறது. அறிவுரைப் பகுதியில், "சருவ சன செபம்", முதலிடம் பெறுகிறது. யமகம், திரிபு, மடக்கு முதலிய சொல்லணிகளும், பொருளணி பலவும் வாய்ந்த அகப்பொருள் துறைக் கவிகள் ஒரு பகுதியாக அமைகின்றன. ஊற்றுமலை சமீன்தார் இருதாலய மருதப்ப தேவர் பற்றிய கவிதைகள் இதனுள் அடங்கும். 350 தனிநிலைச் செய்யுட்கள் உள்ளன. வாழ்த்து, வணக்கம் நீங்கலாக 343 அமைகின்றன. 113 பாடல்கள் சொல்லணிகள் நிரம்பியன.

மதுரை சொக்கநாதர் ஒரு துறைக் கோவைக்கு அளித்த சிறப்புப் பாயிரத்தில் கவிஞர்,

**பெருகும் ஒன்பான் சுவைவளமும்**
**பெருங்கற்பனைகள் பல அணிகள்**
**மருவுவனமும் திரிபு வனம்**
**மகிழும் திரிபு வனமும் உற**
**அருமை அருமை எனக் கவிஞர்**
**அதிசயிக்கத் தக்க கவிமழை பெய்**
**பருவமுகில் . . . .** **(தனிக்கவித்திரட்டு–ப.VI)**

என்று பாராட்டியிருப்பது இக்கவிஞருக்கும் பொருந்தும். இவரின் சொல்லணிக் கவிதைச் சுவையில் ஈடுபட்ட பண்டிதமணி கதிரேசச் செட்டியார் ''பலவகையான சொற்களையும், சொற்றொடர் களையும் அறிந்து கோடல், அருந்தொடர்களைப் பொருள் இயையப் பிரித்துப் பொருள்கோடல், முதலிய நற்பயிற்சிகளில் மாணவர் தலைப்பட்டு, கல்வி நலமுடையர் ஆவதற்கு இன்னோரன்ன சொல்லணி மிக்க செய்யுட்களும் எற்றவையாகும்" என்று பாராட்டியுள்ளார் (மேலது,v.xll). இந்நூலுக்கு அருணாசலக்கவுண்டர் குறிப்புரை வழங்கி, 1939ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். விளக்கவுரையோடு இந்நூலை மீண்டும் பதிப்பித்தால், கவியாற்றலை முழுதும் அறிந்து இன்புற இயலும்.

## சொல்லணிக் கவிதைகள்

"பதினாறு வயது பிராயமிருக்கும் போதே, தமிழிலுள்ள சிலேடை, யமகம், திரிபு என்ற தமிழ்க் கற்பாறைகளை உடைக்க (இவர்கள்) ஆரம்பித்து விட்டார்கள். இந்த வர்க்கத்துச் சித்திரக்கவிகள் எவ்வளவு வைரம் பாய்ந்திருந்தாலும்

முதலியாரவர்கள் கைக்குவந்தால், தாமாகப் பிதிர்ந்து போய்விடும்" (மேலது, V. VII) என்று டி.கே.சிதம்பர முதலியார் புகழ்ந்துரைத்துள்ளார். வெ.ப.சு. வற்றாத கவிநயமுடன் குற்றாலநாதரைப் பாடிப் பரவுகிறார்.

**திருக்குற்றா லத்திருக்குந் தீர்த்தன்பர்க் காகத்**
**திருக்குற்றா லத்திருக்குந் தீர்த்தன்** (மேலது, பா. 4)

என்ற கவிதையைத் "திருக்கு உற்றால், அத்திருக்கும் தீர்த்து, அன்பர்க்காகத் திருக்குற்றாலத்திருக்கும் தீர்த்தன்", எனச் சீர்பிரித்துப் பொருள் காண வேண்டும்.

தலைவி ஒருத்திக்காக, மதுரைச் சிவபிரானிடம் தூது செல்லும் தோழி கூற்றாக அமைந்த அகத்துறைப் பாடலிலும் முழுவதும் சொல்லணி சுடர் விடக் காணலாம்.

**மாசங்க ராசி, வசி வாவிமலி கூடற், பூ**
**மா, சங்கரா, சிவசி வா, விமலி, மாசங்க**
**மத், தையன் மாலகன்வான் வாய் மணிற் றேடும்பர, வா**
**மத், தையன் மாலகன்வான் வா** (பா.8)

என்பது அக்கவிதை. வண்டுகளும் (மா) சங்கராசிகளும் வசிக்கின்ற வாவி மலிந்த கூடலில் வாழும் பூமா, சங்கரா, சிவசிவா, சரஸ்வதி (விமலி) மா (இலக்குமி) ஆகிய இருவர் சங்கமத்து வாழும் அயனும், மாலும், அகல்வானிலும், மண்ணிலும் தேடும் பரனே! அழகுடைய (வாம) தையலின் மயக்கத்தை அகல்வான் வேண்டி, அவளிடம் வந்தருள்வாயாக என்பது இக்கவிதையின் பொருளாகும்.

பிறிதொரு அகத்துறைப் பாடலில் 'காந்தனை மின்சேரில் இராக்காலம் இராக்காலமாகும்", (பா. 12.2) எனச் சிலேடையாக மொழிந்துள்ளார்.

**மன்னம் பலவாணா! வாழ்த்தியுனைப் போற்றுதற்கே**
**இன்னம் பலவாணாள் ஈ**

எனத் தம் குரவரான அம்பலவாணரைப் போற்றிப்பாட இன்னும் பலவாணாள் வேண்டுமென வேண்டுகிறார்.

## ஐந்திணை மயக்கம்

ஐந்திணைகளும் ஒருங்கே அமையப் பெற்ற கவிதை ஒன்றினையும் இக்கவித் திரட்டில் காணலாம். நெய்தல் நிலத்துப்

புன்னை, மாதர் ஆட மலரும், பாலை நிலத்துக் குரவம் அணைக்க அரும்பவிழும், முல்லை சிரிக்க மலரும், மருதத்து மாமரம் பார்க்கப் பூக்கும், குறிஞ்சி நிலத்து அசோகம் உதைக்க மலரும். இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஒரே பாடலில் கவிஞர் அமைத்துள்ளார். "அந்தி மயங்கும் மாலை வேளையில், கடற்கரைச் சோலையில் புன்னை மரக் கிளையில் அன்னை உமாதேவி ஊஞ்சல் ஆடினாள். சிவபிரானை ஒத்திருக்கும் குரவம் பூவை அணைத்து மகிழ்ந்தாள். மாமரத்தின் மீது படர்ந்திருக்கும் முல்லைக் கொடியை நோக்கிச் சிரித்தாள். பிரிந்த காதலர்க்குச் சோகம் தரும் அசோகு, 'அசோகம்' எனப் பெயர் பூண்டிருப்பது எண்ணிச் சினந்து உதைத்தாள். இத்தகு தன் செயல்களால் பூக்கள் பூத்திருப்பதைக் கண்டு உள்ளம் உவகை கொண்ட உமாதேவியின் திருவழகை உன்னி உய்தியுறுவோம்" (பா.6) எனப் பொருள்படக் கவிஞர் பாடியுள்ளார்.

**உருவகம்**

உருவகத்தைப் பொருத்தமாக அமைத்துப் பொருத்திக் காட்டும் கவித்திறனும் கவிஞரிடம் உண்டு.

> சாதனமாகிய ஓடத்தின் மீதேறிச்
> சற்குரு வாகிய மாலுமியால்
> போதன ஞான வழியோடப் பெற்றுப்
> பொருந்தலாம் முத்திக் கரையினையே (பா. 38)

என்ற கவிதையில் முழுதும் உருவகம் ஆட்சி செய்யக் காணலாம்.

**உவமைநயம்**

உவமைகளைக் கையாளும் திறனைக் கொண்டே, கவிஞரின் ஆற்றலை மதிப்பிட முடியும். முயற்சியின் உயர்ச்சியை விளக்க உவமைகளைக் கவிஞர் அடுக்குகிறார். அவ்வுவமைகள் :

1. தேனீ யினத்தில் வேலை செய் பெண்கள் சிறந்திடும். ஆண்கள் சிறப்பிழக்கும். வேலையினால் மாந்தர் மாண்புறுவர். சோம்பித் திரிவோர் இழிவடைவர்.
2. பாய்ந்துவரும் நீர் பட்டுப்பட்டு, கல்லும் குழிந்து விடும். சிற்றெறும்பு ஊரப் பாறையும் தேய்ந்து விடும். இடைவிடாத முயற்சி உயர்ச்சி தரும்.
3. அரணி கடைய நெருப்புத் தோன்றும், ஆழமாகத் தோண்ட நீர் சுரக்கும். விடாத முயற்சியினால் வெற்றியடையலாம் (பா. 41)

## கதை மேற்கோள்

கவிதையிலே கதையை மேற்கோள் காட்டிக் கருத்தினைப் புலப்படுத்தும் உத்தியை வெள்ளகால் கவிஞர் மேற்கொண்டுள்ளார். ஒரு கவிதையில் பின்னோர் பலனடைய முன்னோர் உழைத்தல் வேண்டும் என்ற கருத்தை உரையாடலாக வெளிப்படுத்தியுள்ளார்.

அருத்தியாற் பழங்கள் நடுங்கிழ வாநீ
அவை மரமாய் கனி தருங்காறும்
இருத்தியோ என்ற இளைஞ கேள்
முன்னோ ரினிது வைத்துள மரக்கனிகள்
திருத்தியா னயின்றேன் இளமையில், அந்தத்
தீர்த்திலாக் கடன்றனைத் தீர்ப்பான்
விருத்தியாம் பின்னோர்க் குதவ இக்கனிகள்
வித்துகின்றேன், என்றான் விருத்தன் (பா.56)

## வாழ்வியல் கருத்துகள்

தொண்ணூறு அகவைக்கு மேலும் குறைவற வாழ்ந்து இறைவனைச் சேர்ந்த கவிஞர் நிறைந்த பட்டறிவு உடையவர். தம் வாழ்நாளில் உணர்ந்த நல்ல கருத்துக்களை எல்லாம் அவ்வப்போது கவிதைகளில் வெளியிட்டுள்ளார். சான்றுக்கு ஒரு சில கருத்துக்களைக் காணலாம்.

1. மனிதன் உழைத்து முயற்சியில் முன்னேற வேண்டும் (பா18).
2. தொழில் இயற்றுவோர் மனநிலையைப் பொறுத்தே தொழிலின் இழிவும் சிறப்பும் அமைகின்றன (பா. 47).
3. பிறப்பினால் சிறப்பு எவர்க்கும் வருவதில்லை. அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றாலேயே மனிதன் சிறப்படைகிறான் (பா. 48).
4. உண்மைக்கு மேலான மதமில்லை. மகாத்மா காந்தியடிகள் இக்கருத்துடையவர். உண்மையைக் கண்டறிய, தன் வாழ்வையே சத்திய சோதனை ஆக்கிக் கொண்டவர் (பா. 53).
5. தன்னலம் நாடாமல் பிறர்க்கு உதவிட வேண்டும் (பா.55).
6. கோபத்தை ஒழிக்க வேண்டும் (பா. 59).
7. தண்டனைக்கு அஞ்சிக் குற்றம் செய்யாதவர், நெஞ்சத்தாற் குற்றம் இழைத்தவரே ஆவர். தண்டனை இல்லையென்றாலும் குற்றம் செய்யாதிருப்பதே நன்மை ஆகும் (பா. 60).

8. தீய செயலினும் தீய சிந்தனை தீயது (பா. 61).
9. செல்வமென்பது சிந்தையின் நிறைவே ஆகும் (பா. 67).
10. தாழ்குலத்தாரென்று எவரையும் அருளின்றி விலக்கக்கூடாது (பா. 65).
11. நல்லது புதுமையாயினும் நன்றே, அல்லது பழமையானாலும் பொல்லாதது (பா. 75).
12. காலம் மாறக் கருத்துக்கள் மாறும் (பா. 84).
13. சிசு பலி, உடன்கட்டையேறுதல் போன்ற மூடப்பழக்கங்கள் மேலோர்கள் முயற்சியால் போயொழிந்தன (பா. 83).
14. புத்தகசாலை, கல்விச்சாலை, விளையாட்டு மையம், கோவில், மருத்துவச்சாலை ஆகிய உருவாக்குதல் அறச்செயல்களாகும் (பா. 86).
15. அறிவோடு ஒழுக்கமுடையவர் பெரியோர் (பா. 87).

தனிக் கவித்திரட்டில் உள்ள கவிதைகள் அனைத்தும் கவிநயம் சான்ற கவிதைகள். நிரூபக் கவிதைகளில் குமாரசாமி, சுப்பிரமணியன், முத்துசாமி, அருணாசலம், இருதாலய மருதப்பன் போன்ற திரிபுக்கு இசையாத இயற்பெயர்களை ஆசிரியர் பல இடங்களில் பொருளுக்கிணங்கத் திரித்துக் காட்டியுள்ளது வியத்தற்குரியது.

> **சிலரிசை சந்தந் தனிற் சிலர் திரிபிற் சிற்சிலர்**
> **சிலேடைகற் பனையில்**
> **வலாரெனப் படுவரவ்வண மின்றி வழங்குமெப் பாவினும்**
> **வல்ல புலவன்** (பா. 225)

என்று தம் ஆசிரியர் அழகிய சொக்கநாத பிள்ளையவர்களைக் கவிஞர் சிறப்பித்துள்ளார். அச்சிறப்பு வெ.ப.சு.வுக்கும் பொருந்தியிருப்பதற்குத் தனிக்கவித்திரட்டே சான்றெனக் கூறலாம்.

### சருவசன செபம்

கவிஞர் இயற்றிய பிரார்த்தனைச் செய்யுள் நூல், சருவ சனசெபம் என்னும் தலைப்பைக் கொண்டது. சமணர் ஒருவரின் நூலை அடிப்படையாகக் கொண்டு எழுதிய அறநூல் சருவ சனசெபம். சம்பத்துராயசயினரின் எதிரிடைகள் இசைவுநூல் என்னும் நூலின் இறுதிப் பகுதியை மூலமாகக் கொண்டாலும், பொது அறங்களைப் புகுத்தி இந்நூலைப் படைத்தார். 137

அடிகளில் அமைந்தது. சாதி, இனம், சமயம் என வேறுபாடில்லாமல் உலகில் அனைத்து மக்களுக்கும் உரிய அறத்தைக் கவிஞர் கூறுவதால் சருவசனம் என்ற சொற்றொடரை அமைத்துக் கொண்டார். இந்நூல் குறித்துப் பி.ஸ்ரீ "எளிய நடையில் எவ்வளவு உயர்கொள்கைகள், சிறிய அறையொன்றில் அநந்தமான ஐசுவரியத்தைப் பார்ப்பது போலிருக்கிறது", (ச.ச. முன்னுரை) என்று பாராட்டியுள்ளார். திருக்குறள், நாலடியார் கூறும் அறக்கருத்துக்கள் மட்டுமல்லாமல் இயேசுபிரான், புத்தர்பிரான், கருத்துக்களையும் நீதி மொழிகளாக இந்நூலில் இடம்பெறச் செய்துள்ளார்.

> **வாழ்வுவரின் இறுமாந்திடேனாக**
> **தாழ்வுறு மெனின் மனம் தளர்ந்திடேனாக**
> **செய்தற்குரிய சிறிய கடனையும்**
> **எய்தற்குரிய பயனை எண்ணாமல்**
> **அப்பயன் அடைந்திட அவாவுவார் யாரினும்**
> **விருப்போடு செய்யும் விழுமியேனாக**

என்று ஆறு சிறு அடிகளில் பகவத்கீதையின் பொருளெல்லாம் அமைந்துள்ள பாங்கினை அறியலாம். "பகைவர்க்கும் அன்புசெய் பண்பினேனாக" என்று ஆசிரியர் செபம் செய்யத் தூண்டும்போது, கவுதமபுத்தன் கூறிய உரையெல்லாம் விளக்கமுறுகின்றது.

> **பகையைப் பகையால் மாற்ற முயலல்**
> **தழலைத் தழலால் தணித்தல் போலாம்**
> **அழலை நீரால் ஆற்றல் போல**
> **அன்பால் பகையை ஆற்றலே ஏற்றதாம்**

என்ற கவுதம புத்தர் கருத்தை இந்நீதிநூலில் குறிப்பிட்டுள்ளார்.

## கம்பராமாயண சாரம்

கம்பராமாயணத்திலுள்ள அருமையான இன்கவிதைகளை எல்லாம் திரட்டிப் பொருளெழுதி - விளக்கம் தந்து 'கம்பராமாயண இக்கவித்திரட்டு' என்ற தலைப்பில் தொடர்ந்து செந்தமிழ் இதழில் 1930ஆம் ஆண்டில் வெளியிட்டார். 'கம்பராமாயணசாரம்' என்ற பெயருடன் பின்நாளில் நூலாக வெளிவந்தது. "இதுவரை கம்பர் கவியைப் படித்துணராத மக்களுக்கு ஒரு புதிய உலகத்தையும், படித்துச் சுவைத்த மாணவர்களுக்கு இன்னும் புதிய புதிய இன்பங்களையும் இந்நூல் காட்டும்" என்று சுவாமி விபுலானந்த அடிகள் இந்நூலைப் பாராட்டியுள்ளார்.

"ஆசிரியனது நடை அவனது எண்ணத்தின் சாயலை வெளிப்படுத்த வேண்டும். மொழியைக் கையாள்வதில் அவனுக்கு உள்ள ஆற்றலும் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் அவனது பண்பட்ட பயிற்சியினால் கைகூடுகிறது"[12] என்பர்.

பலதுறை அறிவும், பட்டறிவும், பைந்தமிழ்ப் புலமையும், பழகுதமிழ் நடையும் வெ.ப.சு.வின் உரைத்திறனுக்கு மெருகூட்டியுள்ளன.

## நூலாசிரியரைப் பாராட்டல்

கம்பன் கவிதைகளில் திளைத்த வெ.ப.சு. ஒல்லும் வகையெல்லாம் உவந்து கம்பரைத் தம் உரையில் பாராட்டியுள்ளார்.

> **இக்கவி கம்பரது அதிசய கவித்துவ சாதுரிய விசேடத்துக்குக் காட்டாகச் சுட்டத்தக்க அதிஅற்புத கவிகளில் ஒன்று. இப்பாட்டின் இறுதியடி நனியினியக் கவிப்பகுதிகளுள் ஒன்று**

என்றெல்லாம் போற்றுகிறார்.

## ஒருபொருள் குறிக்கும் சொற்களைச் சுட்டல்

ஆச்சாமரம், சால மரம், மாமரம் என்பவை ஒரு பொருள் குறித்தவை. பரபோதம், தேவபோதம், பரஞானம், தத்துவ ஞானம், சிவஞானம், மெய்ஞ்ஞானம், மெய்யுணர்வு, கேவலவுணர்வு, பேரறிவு, ஞானதிருஷ்டி, ஞானக்கண் என்பவைகளும் ஒரு பொருட் பல சொல். விளம்பனம் செய்தல், மந்தித்தல், ஆலசியஞ் செய்தல், தாமதித்தல் என்பன ஒரு பொருள் குறித்தவை என்று ஒரு பொருள் குறிக்கும் பல சொற்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## ஒரு சொல்லுக்குப் பல விளக்கம் பகர்தல்

"ஏழு பெற்றதே இக்கணைக்கு இலக்கம்" என்ற வரியில் இடம்பெறும் ஏழு என்ற சொல்லுக்கு விரிவாக விளக்கம் தருவது வெ.ப.சு.வின் நுண்ணறிவை விளக்குகிறது.

ஏழுவேலை:- உவர்நீர், கருப்பஞ்சாறு, மது, நெய், தயிர், பால், நன்னீர், இவற்றின் மயமானவை.

ஏழுலகம்:- பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், ஜனலோகம், மஹர்லோகம், தபோலோகம், சத்தியலோகம்.

ஏழுகுன்றம்:- கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், நமட்டம், நீலகிரி.

ஏழு இருடிகள்:- அத்திரி, பிருகு, ருத்ஸர், வசிஷ்டர், கௌதமர், காசியபர், ஆங்கிரசு.

கதிரவனின் ஏழுபரிகள்:- காயத்ரி, உஷ்ணிக், அனுஷ்குப், ப்ருஹதி, பஸ்தி, த்ரிஷ்டுப், ஜகதீ.

ஏழு மங்கையர்: பிராஹ்மி, மஹேச்வரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, சாமுண்டி.

என ஏழு என அமையும் பொருள்களின் பெயர்களை அடுக்குகிறார்.

## இலக்கிய நடை

வெ.ப.சு. கவிஞர் ஆதலின் அவர் உரையினை உவமைகளும் எதுகை மோனைகளும் ஆங்காங்கே அணிசெய்கின்றன.

> **திருடி கற்றவன் இடறி விழுந்தால் அதுவும்**
> **வித்தை என்பது போல**
> **நீ கன்னிகை என்னில் என்னிலும் தன்னியனில்லை**
> **தரிசித்த போதும் பரிசித்த போதும்**
> **மாருதி வாரிதி கடத்தற்கு**

என்றெல்லாம் அழகுற உரை எழுதிச்செல்கிறார்.

## தன்கருத்தை நிலைநாட்டுதல்

"வள்ளியோர்கள் நின்னில் யார் சொல்லற்பாலர்" என்ற வரிக்குப் பொருளுரைக்கும் போது. வெ.ப.சு. அழுத்தமாக விளக்கம் தருகிறார். அதிகமான் ஒருவன் இருக்க, வள்ளியோர் யாருளர் என்பது பொருந்துமோ எனக் கேட்டுப் பொருந்தும் என்பதற்கு விளக்கம் தருகிறார். அதிகமான் காலம் இராமாயண காலத்துக்கு முற்பட்டது என்கிறார். அதோடு பிற்பட்டது எனக் கொண்டாலும் ஒரு நெல்லிக்கனி அமுதத்தை அதிகமான் ஔவைக்கு ஈந்தான். ஆனால் வாலியோ தேவர்கள் எல்லோரும் உண்டு, எஞ்சியிருந்த மிகுதி அமுதத்தைச் சிறிதும் அருந்தாது, இந்திரனிடம்

தந்துவிட்டான். எனவே அதிகமானைக் காட்டிலும், அதிகக் கொடையுள்ளம் சான்றவன் வாலியே என்று நிலைநாட்டுகிறார்.

## கதைவாயிலாகக் கருத்தை வலியுறுத்தல்

கள்ளுண்ணும் தீய செயல், மற்றைய தீய செயல்களுக்கும் காரணமாகும் என்பதைக் காட்டும் கர்ணபரம்பரைக் கதையொன்றுண்டு என்று கூறிக் கதையைச் சொல்கிறார். 'வழிப் பிரயாணி ஒருவன்' பிள்ளையைத் தூக்கிக் கொண்டும் அரிவாளை ஓங்கிக் கொண்டும் மதுகலசத்தை ஏந்திக் கொண்டும் வந்த பெண்ணொருத்தியை எதிர்ப்பட்டான். அவள் இந்த வாளால் பிள்ளையைக் கொல்லுதல், என்னைச் சேர்தல், மதுவருந்துதல் ஆகிய மூன்று தீச்செயல்களில் எதையாவது செய், என்று வற்புறுத்தினாள். அவன் மது அருந்துவது சின்ன குற்றம் தானே என்று கருதி, மதுவை வாங்கி மாந்தினான். குடித்த பின்னர் மதிமயங்கி மற்ற இருபாவங்களையும் ஒரு சேரச் செய்து முடித்தான் என்ற கதையை விரிவாகச் சொல்லியுள்ளார்.

'முதலியார்வாள் பொறுக்கி எடுத்துத்தந்த கவிதைகளைப் படித்த பிறகுதான் கம்பன் கவிதையில் எனக்குச் சுவையும் ஆர்வமும் ஏற்பட்டன' என்று கல்கி, இவரது கம்பராமாயண சாரம் நூலின் சிறப்பைப் பாராட்டுகிறார். 'கடவுள் சிருட்டியாகிய பிரபஞ்சம் போலக் கம்பர் சிருட்டியாகிய கம்பராமாயணமும் நுணுகி நுணுகி நோக்குந்தோறும் நூதன நூதனமான வனப்புகளும் உண்மைகளும் புலப்படுத்தி மேலும் மேலும் விளங்குவதால் வியப்பும் நயப்பும் விளைப்பதாயுள்ளது'[13] என்று வெ.ப.சு. கூறியுள்ளார். அத்தகு கம்பர் கவிதைகள் என்னும் கோயிலில் தம் அறிவொளியால் கண்ட கலையழகையும், கடவுள் காட்சியையும், நுட்பங்களையும் தம் உரைத்திறனில் மாட்சிமையுடன் வெளிப்படுத்தியுள்ளார் வெ.ப.சு. என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

"தமிழ்ப்புலமையின் மூன்று தலைமுறைகளுக்கு ஒரு பாலமாக அமைந்தவர் வெள்ளகால் முதலியார். புலவர்கள், தமிழன்பர்கள், முதியவர்கள், இளைஞர்கள், செல்வர், ஏழைகள் என்ற வேற்றுமையின்றி எல்லோரிடமும் நட்புரிமை கொண்டு பழகி வந்தார். மகா மகோபாத்தியாய சாமிநாதையர், பாஷா கவிசேகர இராகவையங்கார் முதலிய புலவர் சிகாமணிகளும் அவருக்குச் சகோதரர்கள். பி.ஸ்ரீ., டி.கே. சிதம்பரநாத முதலியார்

போன்ற ரஸிக சிகாமணிகளும் அவருடைய நண்பர்கள்"[14] என்று கல்கி, வெ.ப.சு.வை அவரது நண்பர் குழாத்துடன் இணைத்துக் காட்டிப் புகழ்ந்துள்ளார். ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில், கால்நடைத்துறையில் உயர் பதவியில் அரசு அலுவலராக இருந்த வெ.ப.சு. கன்னித்தமிழுக்கு ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. மூலநூலாசிரியரின் கருத்துக்களை ஞாலமறியச் செய்த உரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், மொழிபெயர்ப்புக் காவியங்கள் புனைந்த கவிஞர், நீதிநூல் இயம்பிய நெறியினர், சொல்லணி மிக்க சீர்சால் செவ்வியல் மரபுக்கவிதைகளைச் செப்பிய செம்மல், தமிழ்வழிக் கல்விக்கு உற்றுழி உதவிய அறிஞர், இருமொழிப் புலமையால் அருந்தமிழுக்கு ஏற்றம் சேர்த்த முதுபெருங்கவிஞர் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

## அடிக்குறிப்புகள்

1. எஸ். சந்தானம், கல்வி உளவியல் அடிப்படைகள், ப. 447.
2. கலைக்களஞ்சியம் தொகுதி 1, ப. 460.
3. பாஸ்கரத் தொண்டைமான், திருநெல்வேலி முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும், ப. 4.
4. Lient Col James Mills - Indian Stock Owner's Manual - முன்னுரை.
5. மேலது.
6. பாஸ்கரத்தொண்டைமான் - திருநெல்வேலி முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும், ப. 32.
7. மேலது, ப. 57.
8. டாக்டர் க. வேலுப்பிள்ளை, காலமும் கருத்தும், ப. 18.
9. வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் - அகலிகை வெண்பா முன்னுரை.
10. பாஸ்கரத் தொண்டைமான், முதலியார் வாழ்க்கை வரலாறு, ப. 48.
11. பாஸ்கரத் தொண்டைமான், திருநெல்வேலி முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும், ப. 110.
12. Gibbon Edward, Autobiography - English Prop Style, p-x vi.
13. வெ.ப. சுப்பிரமணிய முதலியார், கம்பராமாயணச் சிறப்பு (கம்பன் கவிதை, நவயுகப் பிரசுராலயம், சென்னை).

14. பி.சி. கணேசன், வெ.ப.சு.வின் சுவர்க்க நீக்கம், ப. 80, மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. (பொதிகை ஆய்வுமலர் மலர்-1 இதழ்-2, 1986)

## துணை நூல்கள்


1. வெ.ப. சுப்பிரமணிய முதலியார் - கம்பராமாயண இன்கவித்திரட்டு, மூலமும் உரையும், கிட்கிந்தா காண்டம்- 1930 - செந்தமிழ்.
2. " " , இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 1935.
3. " " , கோம்பிவிருத்தம்.
4. " " , அகலிகை வெண்பா, மதராஸ் டைமண்டு அச்சுக்கூடம், சென்னை, 1915.
5. " " , தனிக்கவித்திரட்டு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1939.
6. கைலாசபதி, அடியும் முடியும் (இலக்கியத்தில் கருத்துக்கள்) பாரி நிலையம், சென்னை, 1970.
7. சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் ஆறாவது மாநாடு, கழக வெளியீடு, சென்னை, 1964.
8. பொதிகை ஆய்வு மலர், வெ.ப.சு. தமிழ்க்கலை ஆய்வு மையம் ம.தி.தா. இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.
9. தட்சிணாமூர்த்தி, பி. புலப்பாட்டு நெறி, இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி, 1984.
10. கம்பன் கவிதை, நவயுகப் பிரசுராலயம், சென்னை.
11. பாஸ்கரத் தொண்டைமான், திருநெல்வேலி முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும்.

# படைப்புகள்

வே. சசிகலா

## முன்னுரை

மதிநுட்பம், மனநலம், பரந்த கல்வி, விரிந்த நோக்கு, உயரிய இலட்சியம், சிறந்த கவியுளம், ஆராய்ச்சி மனப்பான்மை, பெருகும் பன்மொழிப்புலமை, சிறந்த ஆங்கிலத் தேர்ச்சி யாவும் ஒருங்கமையப் பெற்றவர்; புதியன புனைந்தும், உரைவளம் நாடியும், மொழிபெயர்த்தும் தமிழ்இலக்கியத்தை வளப்படுத்தியவர்; திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெருவில் கணபதி வாத்தியாரின் திண்ணைப் பள்ளியில் நான்காண்டுகள் பயின்றவர்; அரசடிப்பாலம் மிஷன் பாடசாலையில் உயர்பள்ளிப்படிப்பு முடித்து, ம.தி.தா. இந்துக் கலாசாலையில், சாமி ஐயர் தலைமையாசிரியராக இருந்த போது அங்குப் பயின்றவர்; 1876இல் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேறியவுடன் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் கற்றவர்; 1884இல் சைதாப்பேட்டை விவசாயக் கல்லூரியில் பயிர்த்தொழில் பயிற்சி பெற்றவர்; சென்னை அரசினரால் பம்பாய்க் கால்நடை மருத்துவக் கல்லூரிக்குச் சென்று உயர்பட்டம் பெற்றவர்; தங்கப் பதக்கத்தையும் வென்றவர்; தமிழறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்; அவரே ராவ்சாகிப் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் ஆவார்.

## பட்டங்கள்

வெ.ப. சுப்பிமணிய முதலியாருக்கு அவர் காலத்தைய ஆங்கில அரசு இரு பட்டங்களை வழங்கி மேன்மைப்படுத்தியது. இவருடைய கல்விச் சிறப்புக்காக, 'கில்லத்' என்ற பட்டத்தை ஆங்கிலேய அரசு இவருக்கு வழங்கியது.' அதே அரசு பின்னர் 'ராவ்சாகிபு' பட்டத்தையும் கொடுத்தது. சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் இவருக்கு 'முதுபெரும்புலவர்' என்னும் பட்டத்தை அளித்தது.

## பொதுச்சேவைகள்

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் திருநெல்வேலி ஜில்லா போர்டுகளில் தலைமை தாங்கியும், அங்கம் வகித்தும் பொது நலச் சேவை புரிந்தார். மேலும் தென்காசிப் பெஞ்சுக் கோர்ட்டின் தலைவராய் இருந்து நீதி வழங்கும் பணியையும் செய்தார்.

## உயர்வு

'வெ.ப. சுப்பிரமணிய முதலியார் தமிழ்க்கலை ஆய்வு மையம்' என்பது திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் நிறுவப்பட்டுள்ளது. 1986இல் இவருடைய பெயரர் கிடாரக்குளம் அம்மையப்பர் இந்துக் கல்லூரியில் இந்த ஆய்வு மையத்தை நிறுவினார். இவருடைய நூல்களுக்கான உரிமம் அனைத்தும் இவ் ஆய்வு மையத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.[2]

## புலமை

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் இந்துக் கலாசாலையில் ஆங்கிலம் கற்ற போது தெற்குப் புதுத் தெருச் சவுக்கைத் தமிழ் மன்றத்தில் இவருக்குக் கிடைத்த அனுபவங்களும், சூழலுமே இவரைப் பிற்காலத்தில் முதுபெரும் புலவர் ஆக்கின என்கிறார் அருணாசலக் கவுண்டர்.[3]

வெ.ப. சுப்பிரமணிய முதலியாருக்கு இளமை முதலே இல்லத்திலும், வெளியிலும் அமைந்த இலக்கியச் சூழல் இருபது வயது நிரம்பும் முன்னரே அவரைத் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்க வைத்தது.

## ஆங்கிலத் தேர்ச்சி

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் இளமையிலேயே ஆங்கில வழிக் கல்வி கற்றார். டாக்டர் மில்லட், கூப்பர், அலெக்சாண்டர், பேட்டர்சன், மாக்டொனால்ட் போன்ற ஆங்கிலேயர்களிடம் பயிலும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது.[4] கால்நடைத் துறைப் பணியும் அவருக்குப் பல ஆங்கில அதிகாரிகளுடன் பழகிப் பேச வேண்டிய சூழலை உருவாக்கிற்று. கால்நடைகள் பற்றிய தகவல்களைக் கிராம மக்களுக்கு எளிய தமிழில் எடுத்துக் கூற வேண்டிய அவசியமும் நேர்ந்தது. ஆக ஆங்கில வழிக் கல்வி மட்டுமின்றி, ஆங்கிலத்தில் பேச, படிக்கக் கிடைத்த வாய்ப்புக்களும் இவருடைய சிறந்த ஆங்கிலத் தேர்ச்சிக்குக் காரணங்களாயின.

## இயற்றிய நூல்கள்

வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் இயற்றியனவாக பதின்மூன்று நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இந்நூல்களுள் நூலாசிரியர் தாமே இயற்றியனவும், ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தனவும், பிறர் கருத்துக்களைக் கேட்டு நூலாக்கியதும், பிறர் இலக்கியத்தைத் தொகுத்ததுவும் என்பன உட்படப் பல வகைகள் அடங்கும். இவை ஆசிரியராலும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாலும், கு. அருணாசலக் கவுண்டர் பதிப்பாலும் வெளிவந்துள்ளன.

## ஆசிரியர் பதிப்பு

1. சுவர்க்க நீக்கம் முதற்காண்டம்.
2. இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம். (மொழிபெயர்ப்பு)
3. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற வியாதிகளைப் பற்றிய புஸ்தகம் (மொழிபெயர்ப்பு)
4. கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்தலும், அதன் உபயோகங்களும்
5. கல்வி விளக்கம் (மொழிபெயர்ப்பு)
6. ஜான் மில்டனார் சரித்திரம்

## சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பு

7. கோம்பி விருத்தம்
8. நெல்லைச் சிலேடை வெண்பா
9. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்

## கு. அருணாசலக் கவுண்டர் பதிப்பு

10. சருவசனசெபம்
11. அகலிகை வெண்பா
12. தனிக்கவித்திரட்டு
13. கம்பராமாயண சாரம்
    1. பால காண்டம்
    2. அயோத்தியா காண்டம்
    3. ஆரணிய காண்டம்

4. கிஷ்கிந்தா காண்டம்
5. சுந்தர காண்டம்
6. யுத்த காண்டம்

## பாடநூல்கள்

வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் நூல்களுள் சில சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

சுவர்க்க நீக்கம் முதற்காண்டத்தின் ஒரு பகுதியாகிய 'ஜான் மில்டனார் சரித்திரம்' 1911ஆம் ஆண்டு இன்டர்மீடியட் பாட நூலாக இருந்தது.

கோம்பி விருத்தத்தின் சில பாடல்கள் 1934ஆம் ஆண்டில் இன்டர் மீடியட் பாடப் புத்தகத்தில் இருந்துள்ளன.

சருவசனசெபம் என்னும் சிறு கவிதை நூல் 1937இல் பிரவேசிகா தேர்வுப் பாடநூலாக இருந்தது.[5]

## நூல்கள் அறிமுகம்

### 1. சுவர்க்க நீக்கம் - முதற்காண்டம்

'பாரடைஸ் லாஸ்ட்' என்ற மில்டனின் ஆங்கிலப் படைப்பின் தமிழாக்கமே சுவர்க்க நீக்கம் முதற் காண்டமாகும். வெ.ப. சுப்பிரமணிய முதலியார் இதனை விருத்தப் பாக்களில் மொழிபெயர்த்துள்ளார். 'இந்நூல் மூல நூல் போல விளங்கிப் பொருளை நன்கு புலப்படுத்துகின்றது'[6] என்று உவே. சாமிநாதையர் இந்நூலைப் பாராட்டுகின்றார். இந்நூலைப் பதிப்பித்து வருகையில் நூலாசிரியர் பம்பாய் செல்ல நேரிட்டதால் அ. மாதவையா பதிப்பு வேலையை முற்றுப் பெறச் செய்தார்.[7] வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் மொழிபெயர்ப்பு ஜி.யு. போப், ரெவரண்ட்டிவாக்கர் போன்ற ஆங்கிலேயர்களால் பாராட்டப் பட்டுள்ளது.[8]

### 2. இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் கால்நடைத் துறையில் பணியாற்றிய போது அங்கிருந்த மேலதிகாரிகள் அனைவரும் வெளிநாட்டவர். அவர்கள் தாம் அறிமுகப் படுத்த நினைத்த கால்நடை மருத்துவ முறையை எளிய தமிழில் கிராம மக்களுக்குப் புரியும்படிச் செய்ய நினைத்ததன் விளைவாக இந்நூல் பிறந்தது.

லெப்டினன்ட். கால். ஜேம்ஸ் மில்லர் என்ற கால்நடை ஆய்வாளர் 'Indian Stock Owner's Manual' என்ற நூலை எழுதினார். அதனை 1885இல் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் 'இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்' என்று மொழிபெயர்த்தார். ஐரோப்பியக் கால்நடை மருத்துவத்தைப் பற்றி முதன் முதலில் தமிழில் வெளிவந்த நூல் இது.[9]

### 3. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணாபாயமான வியாதிகள்

கால்நடைத் துறையில் நூலாசிரியர் பணியாற்றிய போது மொழிபெயர்த்த மற்றொரு மொழிபெயர்ப்பு நூல் இது. 'More deadly Forms of cattle Diseases in India' என்ற நூலின் தமிழாக்கம் ஆகும்.

### 4. கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மைகுத்தலும் அதன் உபயோகங்களும்

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் கால்நடைத் துறையில் தனக்குக் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் இச்சிறு நூலை எழுதி வெளியிட்டார். எளிய தமிழ் நடையில் அமைந்த நூல் இது.

### 5. கல்வி விளக்கம்

மற்றுமொரு மொழிபெயர்ப்பாகிய 'கல்வி விளக்கம்' என்னும் நூல் நூலாசிரியரின் நண்பர்களுடன் இணைந்த கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளது. 'ஹெர்பர்ட் ஸ்பென்சர்ஸ் எஜூகேஷன்' என்ற ஆங்கில நூலிலிருந்து வெ.ப. சுப்பிரமணிய முதலியார், எஸ்.வி. கள்ளபிரான் பிள்ளை, சி. அப்பாவு பிள்ளை ஆகியோர் இதனை மொழிபெயர்த்துள்ளனர். 1899ஆம் ஆண்டில் வெளிவந்த இந்நூலை, ஸ்பென்சரின் அரிய கருத்துகளைத் தமிழ் மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்று மொழிபெயர்த்தனர். அறிவு யாது, அறிவுப் பயிற்சி, நன்னெறிப் பயிற்சி, சரீரப் பயிற்சி என்ற நான்கு பாகங்களைக் கொண்ட மூல நூலிலிருந்து முதல் இரண்டு பாகங்கள் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கிரேக்கம், பிரெஞ்சு, ஜெர்மன், இலத்தீன், ருஷ்ய, ஜப்பானிய, சீனமொழிகளில் மொழிபெயர்க்கப் பட்ட நூலைத் தமிழில் ஆக்கிய பெருமை வெ.ப. சுப்பிரமணிய முதலியாருக்குரியது.

### 6. ஜான் மில்டனார் சரித்திரம்

சுவர்க்க நீக்கம் - முதற் காண்டத்தின் ஒரு பகுதியே ஜான் மில்டனார் சரித்திரம் ஆகும்.

### 7. கோம்பி விருத்தம்

மெர்ரிக் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'தி கேமலான்' என்ற கவிதையை அடியொட்டித் தமிழில் எழுதப்பட்ட நூலே கோம்பி விருத்தமாகும். 'தமிழ்ச் செய்யுளில் அமைந்திருந்த போதிலும் அதையும் அனுபவிக்க இயலும் என்று சிலர் வார்த்தையாடத் தொடங்கினர்' என்பது டி.கே. சிதம்பர நாத முதலியாரின் பாராட்டுரை.[10] உ.வே.சா. 'இதைப் படிக்கும் பொழுது இடையிலே வைத்து விட்டு வேறொன்றைச் செய்தற்கு எனக்கு மனம் வரவில்லை' என்கிறார்.[11] 'அது நரிவிருத்தத்தையும், எலி விருத்தத்தையும் காடுகளிலும், வளைகளிலும் மறைவிடந் தேடியோடச் செய்தது'[12] என்பது சி.வை. தாமோதரம் பிள்ளையின் கூற்றாகும்.

### 8. நெல்லைச் சிலேடை வெண்பா

நூறு வெண்பாக்களைக் கொண்டு புனையப்பட்ட கவிதை நூலாகும் இது. முன்பாதி சிலேடை முறையில் திருநெல்வேலியையும், திரிபு வகையால் சிவனையும் குறித்துப் பாடப்பட்ட நூல். சிறுவயதிலேயே சிலேடை, யமகம், திரிபு போன்றவற்றில் ஈடுபாடு காட்டிய நூலாசிரியர் ஒரு சிறந்த தமிழ்க்கவி என்பதற்கு இந்நூல் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

### 9. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்

கட்டுரை வடிவில் அமைந்துள்ள இந்நூலை வெ.ப. சுப்பிரமணிய முதலியார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை வெளிப்படுத்திய கருத்துகளின் அடிப்படையில் எழுதியுள்ளார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பாரதம், இராமாயணம் முதலிய கதைகளை வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து தான் கண்டறிந்த உண்மை என்று சில கருத்துகளை வெளியிட்டார். அக்கருத்துகளைக் கேட்க நேரிட்ட வெ.ப. சுப்பிரமணிய முதலியார் 'சுரோதா' என்ற புனைபெயரில் சுந்தரம்பிள்ளையிடம் தாம் கேட்டதை 'மலபார் குவார்டர்லி' என்ற இதழுக்கனுப்ப, அதனைப் பொன்னம்பலம் பிள்ளை வெளியிட்டார்.[13]

ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் உள்ளிட்ட பலர் இந்நூற்கருத்துகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த மறுப்புகளுக்கு மேல் பிறர் குறிப்புகளும் எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.[14]

### 10. சருவசன செபம்

சம்பத் ராய் ஜெயின் என்பவர் எழுதிய 'எதிரிடைகள் இசைஅறுதல்' என்ற நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூலாகும். எளிய நடையில் எவ்வளவு உயர் கொள்கைகள்; சிறிய அறையொன்றில் அநந்தமான ஐசுவரியத்தைப் பார்ப்பது போலிருக்கிறது[15] என்று பி.ஸ்ரீ. இந்நூலைப் பாராட்டுகிறார். இவர் எழுதியுள்ள நூல்களில் மிகச் சிறியது இது. இறைவனை வழிபடும் முறை, அறக்கருத்துகள், மொழிப்பற்று, நாடு கடந்த உலக நேயம் போன்றவை இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன.

### 11. அகலிகை வெண்பா

பழைய கதையாகிய அகலிகை வரலாற்றை மாற்றியமைத்து, அகலிகையின் தூய தன்மையை நிறுவவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதப்பட்ட நூல் 'அகலிகை வெண்பா'. பஞ்ச கன்னிகையரில் ஒருத்தியாக அகலிகை விளங்குகிறாள் எனில் அவள் கற்பு நிலையில் பாதிப்பற்றவள் என்பது நூலாசிரியர் கருத்து. உளக்கற்புக்குப் பங்கம் இல்லாமல் உடற் கற்பை மட்டும் அகலிகை இழந்தாள் என்பதுவே நூலாசிரியர் வாதம்.

**மன்னும் உலகியல் தேர்வண் சுப்பிரமணியன்**
**பன்னும் அகலிகை வெண்பாப் பொருளை – உன்னுவோர்**
**எல்லாம் அகலிகையா இந்திரனாக் கோதமனாக்**
**கல்யாவும் ஆவார் கனிந்து**

என்று டி.கே.சி. அகலிகை வெண்பாச் சிறப்பினை உரைக்கிறார்.[16] இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று வெண்பாக்களைக் கொண்ட 'அகலிகை வெண்பா' சொல், பொருள், கருத்து, கற்பனை, வருணனை வளங்களுடன் விளங்குகிறது என்பது பலர் முடிவு. லுக்கிரிசின் பலாத்காரம் (Rape of Lucrece) என்ற ஷேக்ஸ்பியரின் கவிதையைப் பல இடங்களில் நினைவுறுத்தும் இந்நூலில் ஆங்கிலக்கவிதையின் தாக்கம் உள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

### 12. தனிக்கவித்திரட்டு

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் பல்வேறு பொழுதுகளில் பாடியுள்ள பாடல்கள் 'தனிக்கவித்திரட்டு' என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் அம்பலவாண தேசிக மாலை, அறிவுரைப்பகுதி, யமகம், திரிபு, மடக்கு முதலிய அடங்கிய அகப்பொருட் கவிதைகள், பிற சந்தர்ப்பங்களில் பாடிய பாடல் ஆகிய நான்கு பகுதிகளில் அடங்கும் 343 கவிகளைக் கொண்டது. சொல்லணி வகை சார்ந்த பாடல்கள் நூற்றுப் பதின்மூன்றாகும். நூலாசிரியர் கவிதைப் புலமைக்கு இந்நூல் தக்க சான்று.

### 13. கம்பராமாயண சாரம்

'கம்பராமாயண இன்கவித்திரட்டு' என்ற தலைப்பில் பொழிப்புரை, குறிப்புரை, ஆராய்ச்சியுரை ஆகியவற்றைக் கதைத் தொடர்ச்சியுடன் 'செந்தமிழ்' என்னும் மதுரைத் தமிழ்ச் சங்க ஏட்டில் வெளிவந்தவை 'கம்பராமாயணசாரம்' என்னும் பெயரில் நூல் வடிவாகியுள்ளது. பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் ஆகிய ஆறு காண்டங்களிலிருந்தும் மிக இனிய கவிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை விளக்கவுரைகளுடன் எழுதிச் சிறப்பித்துள்ளார். கம்பராமாயணம் முழுவதையும் படிக்க இயலாதவர்க்கு இந்நூல் அதனை முழுமையும் அறிவதற்குப் பெரிதும் உதவும்.

'பால் கிரேவ்' என்னும் அறிஞர் மாணவர்களுக்காக, 'தி கோல்டன் டிரஷரி' என்ற நூலைத் தொகுத்துள்ளார். ஷேக்ஸ்பியரின் படைப்புகளில் சிறந்தவை 'பியூட்டிஸ் ஆஃப் ஷேக்ஸ்பியர்' என்று தொகுக்கப்பட்டுள்ளன.[17] அதைப் போலக் கம்பரின் படைப்பும் தொகுக்கப்பட வேண்டும் என்பது நூலாசிரியரின் விருப்பம். 'விரிவஞ்சி முழுவதும் படியாத கற்றோரும், மற்றோரும் அதன் இனிமையான பகுதிகள் முழுவதையும் கற்று அறிந்து ஆனந்தித்துப் பயனடையும்படிக் கருதினேன்'[18] என்று நூலாசிரியரே குறிப்பிடுவது கருதத்தக்கது.

### படைப்புத்திறன்

வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்பாற்றலை இயற்றுதல், எழுதுதல், மொழிபெயர்த்தல் என்னும் மூவகையிலே பகுத்து ஆராயலாம். அகவிகை வெண்பா, கோம்பிவிருத்தம்,

நெல்லைச்சிலேடை வெண்பா, சருவசனசெபம், தனிக்கவித்திரட்டு ஆகியன இவரது கவிபுனையும் ஆற்றலுக்குக் கட்டியம் கூறி நிற்கும் படைப்புகளாகும். இவருடைய வசன நடைத்திறனை வெளிப்படுத்துவதாக 'இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்' என்ற நூல் விளங்குகிறது. கம்பராமாயண சாரம் என்பது நூலாசிரியரின் உரைத்திறனையும், ஆராய்ச்சி மனப்பான்மையையும் எடுத்துரைக்கிறது. சுவர்க்க நீக்கம் முதற்காண்டம், ஜான்மில்டனார் சரித்திரம். கல்வி விளக்கம், இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம், இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற வியாதிகள் பற்றிய புஸ்தகம். கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்தலும் அதன் உபயோகங்களும் ஆகியன இவரது மொழிபெயர்ப்புத்திறனுக்குச் சான்றுகளாகின்றன.

## இயற்றுதல்

'கவி எனப்படுவோன் குற்றமில் இலக்கணம் முற்றுப் பெற்ற சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய, வளமிக்க செய்யுளில் உலகுக்கு உறுதி பயக்கும் விழுமிய பொருளை இனிதமைத்துத் தருபவனே'[19] என்கிறார் ரா. ராகவையங்கார். இவை யாவும் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரிடம் பொருந்தியுள்ளன என்பது அவர் கருத்து. இவர் படைப்புகளில் கருப்பொருள் தெரிவு கற்பனை வளம், வருணனைத்திறன், உவமை நயம், சந்த நயம், சிலேடை, திரிபு, யமகம் போன்றவை சிறப்புற அமைந்துள்ளன.

## கருப்பொருள் தெரிவு

அகலிகை வெண்பாவில் நூலாசிரியர் கற்புடைய பெண்ணின் மேன்மையை எடுத்துரைப்பதையே நோக்கமாகக் கொண்டார். தேவர்க்கு வேந்தன் என்று அறிந்தே அகலிகை அவனுடன் மனம் மகிழ்ந்து இருந்தாள் என்ற வான்மீகத்தினின்றும் வேறுபட்டு, 'நெஞ்சினால் பிழைப்பிலாள்' என்னும் கம்பர் கருத்துடன் ஒத்துத் தம் கதையை அமைத்துள்ளார். அகலிகை மனத்துக்கண் மாசற்றவள் என்பதை நிறுவுவதே நூலாசிரியரின் நோக்கமாகும். கற்பு நெறி காக்க முந்தும் ஒரு பெண் பலாத்காரத்தால் படும் துன்பத்தை ஆங்கிலக்கவிதை வழி உணர்ந்து,[20] அதைத் தமிழ்ப் பாடல்களாக எழுதி வைத்து விட்டுப்பின்னரே அவை அகலிகை வெண்பா உருவாக வழி வகுத்தன. பெண் மாட்டு ஏற்பட்ட பரிவுணர்ச்சியினை வெளிப்படுத்தவே அகலிகை வெண்பா தோற்றம் பெற்றது.

மிக எளிய சாதாரண கருத்துக் கூடக் கவிதையாக உருவாகலாம் என்பதற்குக் கோம்பி விருத்தம் ஓர் எடுத்துக்காட்டு. 'பச்சோந்தியே' இக்கவிதையின் பாடுபொருள். இப்படைப்புக்கு வழி வகுத்ததும் ஓர் ஆங்கிலக்கவிதையே.[21] எனினும் தம் கவித்துவத்தை அதில் இணைத்து மூலத்தையும் விஞ்சும் அளவிற்குப் படைத்துள்ளார். கோம்பி விருத்தம் எழுதப்பட்டுள்ள முறையால் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது. சேனாதிராசா, தாமோதரம் பிள்ளை, குமாரசிங்க முதலியார் போன்ற அறிஞர்கள் மட்டுமின்றி, ஞானபோதினி உள்ளிட்ட பல இதழ்களும் இக்கவிதைப் பொருளைப் பாராட்டியுள்ளன.

நெல்லைச் சிலேடை வெண்பாவோ திருநெல்வேலித் தலத்தையும், அதில் எழுந்தருளியுள்ள இறைவனையும் பாடுபொருளாகக் கொண்டு விளங்குகிறது. தனிக்கவித்திரட்டு படைப்பாளியின் எதையும், எந்தச் சூழ்நிலையிலும் கவியாகப் புனையும் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகி நிற்கின்றது.

## கற்பனை வளம்

கற்பனை செய்வது என்பது கவிஞனின் தனி ஆற்றல். கவிஞன் தன் மனதில் தோன்றுவதை, தான் அனுபவித்ததைப் பிறரும் உணர்ந்து பயனுறும் வண்ணம் ஆக்குகிறான். பொருத்தமான சொற்களால் தன் அனுபவத்தை அவன் வெளிப்படுத்துவதே கற்பனையாகும். வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்புகளில் கற்பனை வளம் இருப்பதைக் காண முடிகிறது. அகலிகையின் தோற்றத்தை எடுத்துரைக்க வரும் அவர், மின்னலே பெண்ணுருக் கொண்டதாகக் கற்பனை செய்கிறார். மின்னல் பெண் எனில் மின்னலைச் சூழ்ந்துள்ள மேகமே கருங்கூந்தலாகிறது (பா.48). மின்னலும், மேகமும் வானத்தியற்கை. அவற்றைப் பெண்ணுரு எனக் கற்பனை செய்வது கவிஞரின் தனித்திறம்.

கௌதம முனிவரது ஆசிரமத்தைச் சிறப்பித்துப் பாடுகையில், அங்குள்ள மரக்கொம்புகளும், கொடிகளும் தங்கள் தளிர்க் கைகளால் வந்தாரை வரவேற்கும் என்று பாடுகிறார் (பா. 89). இயற்கைச் சித்திரிப்புகளில் நூலாசிரியர் கற்பனைத்திறன் வெளிப்படுவதைக் காணலாம்.

## வருணனைத்திறன்

கவிதைக்கு உயிரூட்டுவது வருணனையாகும். வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்புகளில் அகலிகை வெண்பா,

கோம்பி விருத்தம் ஆகிய நூல்களில் வருணனைகள் காணப்படுகின்றன. அகலிகை வெண்பாவில் காடு, மரம், செடி, கொடிகளின் வருணனைகள் காணப்படுகின்றன. கோம்பி விருத்தத்தில் பாலை நிலம், சோலை, தடாகம், தென்றல் ஆகியவற்றைப் பற்றிய வருணனைகள் இடம் பெறுகின்றன. பாலை நிலக் கொடுமையை வருணிக்கப்புகும் ஆசிரியர்,

> **பெரியவர் கோபத்திற் பிறந்த சாபத்தீ**
> **அரிவையர் கற்புத்தீ, அன்பர் துன்புறப்**
> **புரிதகு பிரிவுத்தீ பொறமைத்தீ இவை**
> **ஒருவழித் தொக்கென உளதப் பாலையே**

என்று பாடுகிறார். பாலைநிலத்தின் வெம்மையைப் பாட்டிற் கொணரும் படைப்பாளியின் புனைதிறம் இப்பாடலில் நன்கு வெளிப்படுகிறது.

இலைகளிலிருந்து சொட்டும் நீர் அருக்கியமாக அமைய, பூக்கள் வடிக்கும் தேன் ஆசமனீயமாக, உதிர்ந்து கிடக்கும் பூப்பரப்பு ஆசனமாக விளங்குவதாக மரத்தைப் பற்றி அகலிகை வெண்பாவில் வருணிக்கிறார் (பா.85).

**உவமை நலம்**

கவிதைக்கு உயிர் தருவது உவமை. வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பாவில் அவரது உவமைகள் சுவைபட அமைந்துள்ளன. கோம்பி விருத்தத்தில் காணப்படும் உவமை நலத்தை 'ஞானபோதினி' என்னும் இதழ் பாராட்டி எழுதியுள்ளது.[22]

> **மதிமானும் மாதின் வதனம் மதியுள்**
> **வதிமான நேரும் மழைக்கண் – மதிமேவு**
> **தெள்ளமுதொப்பாகும் திருவாய்மொழி மதியின்**
> **உள்ளொளிர் முத்தாம் பல்லொழுங்கு (52)**

என்னும் பாடல் முழுவதும் உவமைகளே. அகலிகையின் தோற்றத்தை இந்திரன் எண்ணிப்பார்ப்பதாக ஆசிரியர் புனைந்திருக்கும் இக்கவிதையில் பெண்ணின் முகம் நிலவு, கண்கள் நிலவின் களங்கமாகிய மான், அவள் சொல் நிலவிலுண்டாகும் அமுதம், அவள் பல் நிலவிலிருந்து பிறக்கும் முத்து என்றவாறு உவமைகளை அடுக்கியுள்ளார். தனக்குக் கிடைக்காத அகலிகை கௌதமனுக்குக் கிடைத்தாள் என்பதை, 'மேகம் தோயும்படி

உயர்ந்த கொம்பிலுள்ள தேன் ஒரு முடவனுக்கு, வாய்க்கு நேராக வந்து வடிதலினை ஒத்தது '(பா. 46) என்று இந்திரன் எண்ணுவதாக எழுதுகிறார். அகலிகையைப் பெறுவதில் நடந்த போட்டியில் இந்திரன் இருமுறை தோற்றதைக் கொடிய தீயிலிருந்து சுடப்பட்டு எழுந்தோர் மீள அத்தீயில் விழுந்தது போலாயிற்று என்று விளக்குகிறார் (பா. 47). எல்லாவற்றையும் விடப் பலவந்தத்திற்கு இந்திரன் கூற்றாகப் புலவர் தரும் உவமம் கருதத்தக்கது. கரும்பை வன்மையாக ஆலையில் இட்டு அரைப்பதே அதன் இரசத்தைப் பெறுதற்குத் தக்கவழி. கரிய அகிற் கட்டையின் இனிய வாசமுள்ள புகையைப் பெறுதற்கு அக்கட்டையை நெய்யிலிட்டுக் கருக்கலே ஏற்ற முறையாம். இரந்தும் பெறக் கூடாத பெண்களின் இன்பத்தைப் பெறுவதற்குப் பலவந்தமே வழியாகும் என்பது அது (பா. 219).

கோம்பி விருத்தத்தில் பச்சோந்தி பல நிறங்களை மாறி மாறிக் காட்டுவதற்குப் பல உவமைகளைப் படைத்துள்ளார். கடல், ஆறு, குளம் போன்ற நீர்நிலைகளில் உள்ள நீர் கதிரவன் வெப்பத்தால் நீராவியாகிப் பின்பு மேகமாகி, மழையாகி, ஆலங்கட்டியாகி, மூடுபனியாகி விடுவதைப் போலப் பச்சோந்தி பல நிறங்களில் மாறும் என்பது அவர் படைத்துள்ள உவமையாகும்.

பாரில் ஆர் கலி நதி பட்டமாதியில்
சேரும் நீராவியாய்த் திரிந்து மேகமாய்
மாரியாய் ஆவியாய் மற்றும் பல்லுரு
ஆகுமால் அதனையும் அன்னதின்னதே

என்பது அப்பாடல். தாம் கூறுவதே உண்மை என்று நிறுவும் சமயவாதிகளையும் உவமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

**சந்த நயம்**

வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்புகளில் இனிய சந்த நயம் புலப்படுகிறது. இந்திரனின் காமத்தைப் புலப்படுத்தும் இடத்தில்,

அவன் உருவே நோக்க அவன் குரலே கேட்க
அவன் அருகே எப்போதும் ஆர (62)

என்ற விடத்தும், பலவந்தமாகவும், திருட்டுத் தனமாகவும் அகலிகையை அடைந்த பின்னர்க் கௌதமர் அவ்விடம் வர அவரை நோக்கிய இந்திரனை,

உட்கி அடங்கி ஒடுங்கி நடுநடுங்கி
வெட்கி மெலிந்து வெளிறி ஒளி - மட்கி
உரைந்தான் குலைந்தான் உடைந்தான்
அலைந்தான் மலைந்தான் அவன் (229)

என்ற விடத்தும் காணும் சந்த நயம் சிறப்புடையது.

'சருவசனசெபம்' என்ற பகுதியில்

நல்லோர் இணக்கமே நான் இணங்கிடுக
நல்லோர் நினைவே நான் நினைந்திடுக
நல்லோர் உரையே நான் உரைத்திடுக
நல்லோர் நடையே நான் நடத்திடுக (21-24)

என்ற வரிகளில் காணும் சந்தநயம் நீரோடை போன்றது.

## சிலேடை

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் நெல்லைச் சிலேடை வெண்பா என்ற தனி நூலையே இயற்றியிருப்பதிலிருந்து சிலேடை பாடுவதில் அவருக்கிருந்த திறமை தெரியவரும். சிலேடை வெண்பா முழுவதிலும் பல சிலேடைகளை அமைத்துப் பாராட்டுப் பெற்றுள்ளார். கூர்ந்து நோக்கினாலன்றி அவற்றின் பொருள் புலப்பாடு அரியதே.

தேறு சைவருங் கணவர்த் தீர்ந்தோரும் வெண்ணிலவில்
நீறு புனைந்திடுஉ நெல்லையே

என்ற வரிகளில் 'வெண்ணிலவின்று புனைந்திடும்' என்றும் 'வெண்ணிலவின் நீறுபுனைந்திடும்' என்றும் பிரித்துப் பொருள் காணல் கவி இன்பந்தரும். இதே போல 'முன்னிலையில் நீலவன நேர்வை' என்னும் தொடரை நீல வண்ணனை நேர்வாய் என்றும் 'முன் இலையில் நீலவனம் நேர்வை' என்றும் பிரித்துப் பார்ப்பது சிறப்புறுகிறது[24].

## திரிபு

திரிபு என்னும் மற்றொரு சிறப்பும் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்புகளில் காணப்படுகிறது.

மாறன்
அடிச்சுவடு வேய்ந்தார் அடியார் சிரமேல்
அடிச்சுவடு வேய்தாரகம்

என்ற பகுதியில் காணும் திரிபினைச் சுட்டலாம். இதனை 'மாறன் அடிச்சுவடு ஏய்ந்தார்' என்றும், அடியார் சிரமேல் அடிச்சுவட்டை அணிந்தார் என்றும் பொருள் காணலாம். மேலும்,

நாலிரண்டாத்
தொக்கவிருந்தோடிரண்டார் தூமுகமொவ்வெயின்றனினும்
மிக்கவிருந்தோடிரண்டார் வீடு

என்ற வரிகளில் எட்டுத்திக்கும் திரண்ட தோள்களையுடைய நெல்லையப்பர் அன்றலர்ந்த தாமரை போன்ற இதழ்கள் இரண்டு உடையவர் (மிக்கு அவிரும் தோடு இரண்டார்) எனப் பொருள் கொள்ளல் கவிச்சிறப்பாம்.

**யமகம்**

பல்லோரும் அரிதெனக் கருதும் யமகம் வெ.ப. சுப்பிரமணிய முதலியாருக்குக் கைவந்த கலை. சான்றாகத் தனிக்கவித்திரட்டின் கவிதை ஒன்றைக் காணலாம். இதில் 'குமாரசுவாமித்திர' (பா. 160) என்பது யமகமாக்கப்பட்டுள்ளது.

1. கு - பூமி, மார - மன்மதன், சுவா - சுபம், மி - மி எனும் எழுத்து, திரயம் மூன்று - மித்திரயம், மூன்று - மி மும்மி -- மூன்றில் ஒருபங்கு இம்மி.

2. தேன்மொய்க்கும் ஆர.

   சுவாமித்திரள் முன்பு வ உற்றோன் - விசுவாமித்திரன் என்று அவற்றின் பொருள் விரிவு பெறுகிறது.

**பிறசிறப்புகள்**

**நகைச்சுவை**

வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் கவிதைகளில் நகைச்சுவை இழையோடுவதைக் காணலாம். தனிக்கவித்திரட்டுப் பாடலொன்றில்,

**தம்மது மின்னார்கள் கற்பைக் காக்கச் செய்து**
**தம் கற்பைக் காவாது தாமொழுகல்**
**உம்மது நம்மது நம்மது வேற வேற என்று**
**ஊற்றைப் பற் காட்டிடல் ஒத்திடுமே** (70)

என்று பாடுகின்றார். 'மூடன்' என்பதற்கான விளக்கம் தர முனையும் அவர்,

ஏட பஞ்சபண்டவர்களை யறிதியோ என்றவற்கு
யானஃதறியா
மூடனோ? சொல்வென் மகள் கட்டிற் கால்கள் போல்
மூவரேபார் என்று
நீடு கைவிரலிரண்டினைக் காட்டிப்பின் நிலத்தெழுதிக்
காட்டிப்
பேர்டுவேன் என்றொன்றினை வரைந்தழித்தவன்
போல் பவர்புவியினிற் பலரே

என்பதும் நகைச்சுவை பயக்கும் பகுதியாகும்.

## புராணக் கருத்துகள்

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் தன் நூல்களில் புராணக் கருத்துகளைக் கையாண்டுள்ளார். நளாயினி, சாவித்திரி, அனுசூயை, மார்க்கண்டேயன் போன்றோரைப் பற்றிய கருத்துகள் அவர் கவிதைகளில் காணப்படுகின்றன.[25]

## முன்னோர் மொழி போற்றல்

'கோம்பி விருத்தம்' எனும் நூலில் திருக்குறள் கருத்தினைப் புலவர் எடுத்தாண்டுள்ளார்.

எப்பொருள் எவரெவர் இடத்துக் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் அறிதல் மெய்யறிவு

என்ற வரிகளில் வள்ளுவர் குறளைக் காணலாம்.[26]

## எழுதுதல்

பிற நூல்களில் காணும் கருத்துகளையும், பிறர் கூறக் கேட்கும் கருத்துகளையும் எழுதுவதென்பது தனித்திறமையாகும். கம்பராமாயணத்தைக் கற்று, சில கவிகளைத் தொகுத்துத் திரட்டி, உரைநலம் பாராட்டி, எழுதிய பகுதிகள் புலவரின் எழுத்துத் திறனுக்குச் சான்று பகர்கின்றன. இவருடைய உரை பகரும் திறனுக்குச் சான்றாகச் சுந்தர காண்டப் பகுதியொன்றினைக் குறிப்பிடலாம். அனுமனை அசோகவனத்தில் வாழ்த்தும் சீதை,

ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி

என்கிறாள். இதில் 'இன்றென இருத்தி' என்ற தொடருக்கு, ஆசிரியர், 'ஒருவர் கூனாய், நொண்டியாய், குருடு, செவிடு,

ஊமையாய், குட்டம், குன்மம் முதலிய கொடிய நோய்கள் பலவற்றின் வாய்ப்பட்டுத் தளர்ச்சி மிகுந்து முதிர்ச்சியடைந்து பொறுக்க முடியாது வருத்தம் வளர அதனால் ஒரு நாள், ஒரு யுகம் போல நீள இருத்தலினின்றும் இறத்தல் நன்றென்னும்படி வாழ்நாட்களைத் தள்ளிக் கொண்டு சிரஞ்சீவியாக வாழலாம். அப்படிப்பட்ட வாழ்விலுள்ள கேடுகள் அனைத்தையும் விலக்கவும், இப்போது அனுமானிடத்துள்ள நலங்களெல்லாம் நிலைக்கவும் அவனைச் சீதை 'இன்றென இருத்தி' என்று வாழ்த்தினாள் என்று நயம் பாராட்டுகிறார்.

புலவர் ஆராய்ச்சி அறிவிற்கு வாலி வதையில் வாலி இராமன் செயலை ஒத்துக் கொண்டதற்கான காரண விளக்கத்தைச் சான்றாக்கலாம். இராமனை வாலி தன் ஞானக் கண் கொண்டு பரம்பொருள் என்று உணர்கின்றான். தன்னை இராமன் மறைந்து நின்று கொன்றமை, 'உயிர்கள் செய்யும் வினைக்கும் வினை செய் விதத்துக்கும் தக்கவாறு பலனூட்டும் பரம்' எனப் பொருள் தருமாறு 'சாரமாகச் செய்த நீதிச்செயலென்று அனுமானமாகவன்றிப் பரத்தியமாகத் தெரிந்ததுதான்' என்று விளக்கம் தருகிறார். 'கம்பராமாயணத்தை விரிவஞ்சி முழுதும்படியாத கற்றோரும் கற்று அறிவதற்காக' இவர் எழுதிய இந்நூல் வெறும் நூல் தொகுப்பாக மட்டுமின்றி விளக்கவுரையாகவும் அமைந்திருத்தல் இதன் தனிச்சிறப்பாகும். இதனைத் தலைப்பு, பாட்டு, கொண்டுகூட்டு, பொருள், குறிப்பு, கதைத் தொடர்ச்சி என ஆறுபகுதிகளாகப் பிரித்து எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

## மொழிபெயர்த்தல்

வெ.ப. சுப்பிரமணிய முதலியார் படைத்த பதின்மூன்று நூல்களுள் ஆறு நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டவையாகும். மொழிபெயர்ப்புத் தவிர எஞ்சி இருப்பனவற்றுள்ளும் ஆங்கிலக் கவிதைகளின் தாக்கம் இருப்பதை நூலாசிரியரே குறிப்பிடுகிறார். ஒக்கிரிசின் புலாத்காரம் என்ற ஆங்கிலக் கவிதையின் தாக்கம் உள்ளது. 'கோம்பி விருத்தத்திற்கான' கருப்பொருளை வழங்கியதும் ஆங்கிலப் படைப்பே. புலவரின் தனிக்கவித்திரட்டிலும் மொழிபெயர்ப்புக் கவிதைகளைக் காண முடிகிறது. இவரது படைப்புகளில் மொழிபெயர்ப்பு முக்கிய இடம் பெறுகிறது.

'பாரடைஸ் லாஸ்ட்' என்ற மில்டனின் ஆங்கிலப் படைப்பின் மொழிபெயர்ப்பாகிய சுவர்க்க நீக்கம் முதற்காண்டம்

பல பாராட்டுகளைப் பெற்றுள்ளது. 'மொழிபெயர்த்தவர் தாம் செய்யப் புகுந்த அரிய வேலையைச் செய்யத் தகுதியுள்ளவர்' என்று மொழிபெயர்ப்பாளரை ஜி.யு. போப் பாராட்டுகிறார். இந்த மொழிபெயர்ப்பை, 'நடை விசேடத்தால் நூதனமாகச் செய்யப்பட்ட மூல நூல் போல விளங்கின பொருளை வருத்தமின்றி நன்கு புலப்படுத்துகின்றது' என்று உ.வே.சா. பாராட்டுகின்றார். விருத்தப்பாக்களால் அமைந்த இந்த மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்புடன் கவிதைப் புனைவும் இணைந்துள்ளது. ' Is this the region' என்று நரகத்தில் தள்ளப்பட்ட சாத்தானின் இருப்பிடத்தைப் பற்றித் தொடங்கும் பாடலை,

இன்ன நாடோ இந்நிலமோ இவ்வெங் குளிரும் வெப்பும் உறும்
இன்ன இடங்கொல்லோ துறக்கத் திடாயாம் ஏற்றிடக் கடவேம்
இன்னல் தரும் இவ் இருளோ அவ் எல்லுக்கிணையா ஏற்பதும்
என்று
இன்ன காலை அழிந்துள்ள தூது வர்கோன் இயம்பிப்பினும்
இசைப்பான்

என்று மொழிபெயர்த்துள்ளார். இன்னும் சில சான்றுகளாக,

| | | |
|---|---|---|
| the clime | - | வெங்குளிரும் வெப்பும் |
| Mournful groom | - | இன்னல் தரும் இருள் |
| Supreme | - | இறை |
| Profoundest hell | - | அரிய ஆழநரகு |
| Almighty | - | எல்லாம் வல்லான் |

என்பனவற்றைக் குறிப்பிடலாம். "In itself can make a heaven of hell a hell of heaven" என்ற தொடரை மனம் தன்னுள்ளே பவர்க்கத்தைத் துனுவான் சுவர்க்கமது வாக்கச் சுவர்க்கம் பவர்க்கம் ஆக்கவல்லும் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதையொத்து "Better foreign in hell than to serve in heaven" என்பதை 'நரகின் எனினும் இறைமை நயத்தகும்' என்று மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு களில் மூலநூல் கருத்துகள் அப்படியே மொழிபெயர்க்கப் பட்டிருப்பதால் இவருடைய மொழியாக்கம் உண்மையானது என்றுணர முடிகிறது.

'கல்வி விளக்கம்' என்பதில் "What knowledge is most worth?" என்பது, சிறந்த உபயோகமுள்ள அறிவு யாது? என்றும், "Science" என்பது 'சாஸ்திரம்' என்றும், "Self preservation" என்பது நேரான

தற்காப்பு" என்றும், "life" என்பது பிராணன் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புகளில் வடசொற் கலப்பு மிகுதி.

கால்நடை பற்றிய நூல்கள் மிக எளிய தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றிக் கூற வருகையில் இதனைப் படித்துப் பயன் பெற வேண்டியவர்கள் நம் நாட்டு விவசாயிகளும் பண்ணை வேலை செய்வோரும், அவர்களிடம் நேரில் பேசுவதாக மனதில் பாவனை செய்து கொண்டு எழுதியதனால் இவ்வளவு எளிய நடையில் அமைந்துள்ளது. 'ஒவ்வொரு புத்தகம் எழுதும் போதும் நான் என் மனக்கண்முன் ஒரு கூட்டத்தாரை வைத்துக் கொண்டு எழுதத் தொடங்குவேன்' என்று குறிப்பிடும் புலவர் கால்நடை பற்றிய மொழிபெயர்ப்புகளை விவசாயிகளும் புரிந்து கொள்ளும் வகையில் எழுதியுள்ளார். ஜேம்ஸ் மில்ஸ் என்னும் கால்நடை ஆய்வாளர் தன்னுடைய நூலை மிகச் சிறந்த முறையில் வெளியிட்டமைக்காக மொழிபெயர்ப் பாளரைப் பாராட்டி நன்றி கூறியுள்ளார்.

## முடிவுகள்

1. முதுபெரும் புலவர் ராவ் சாகிப் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறந்த தேர்ச்சியும் புலமையும் ஒருங்கிணையப் பெற்றவர்.
2. இவர் தமிழுலகிற்குச் சில நூல்களை இயற்றியும், எழுதியும், மொழிபெயர்த்தும் தம் பங்களிப்பைச் செய்துள்ளார். இவருடைய படைப்புகளை, சிலரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும், கு. அருணாசலக் கவுண்டரும் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர்.
3. வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்புகளில் கவிதைப்புனைவு மிகுதி.
4. வெ.ப சுப்பிரமணிய முதலியார் கவிதைகளில் கற்பனை, வருணனைப்புலப்பாட்டை விடச் சிலேடை, யமகம், திரிபு என்ற சொல்லணிகள் முதன்மை பெறுகின்றன. அவற்றைப் படைப்பதில்தான் அவருக்கு ஆர்வம் மிகுதி. இதனால் கருத்துகளைச் செய்யுள்களாக்குவதை விடச் செய்யுளை நோக்கிக் கருத்துகளை அமைக்கும் முயற்சியே இவரிடம் மிகுதி.

5. வெ.ப. சுப்பிரமணிய முதலியார் வசன நடைத்திறன், ஆராய்ச்சி மனப்பான்மை, கவிதையை ஆழ்ந்து கற்கும் ஆர்வம் ஒருங்கே அமையப் பெற்றவர்.

6. வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் படைப்புகளில் ஆங்கிலத் தாக்கம் காணப்படுகின்றது.

7. ஆங்கிலத்திலிருந்து கட்டுரைகள், கவிதைகளை மொழி பெயர்க்கும் வல்லமை இவரிடம் மிகுதியும் காணப்படுகிறது.

8. மொழிபெயர்ப்புகளில் உரைநடை, கவிதை ஆகிய இருவகைகளும் காணப்படுவது இவருடைய இருமொழி அறிவுத்திறத்தை நன்கு வெளிப்படுத்துகிறது.

9. சமகாலத்தில் வாழ்ந்த பிற அனைத்துத் தமிழ் அறிஞர்களும் இவரது தமிழார்வத்தையும் படைப்புத் திறனையும் அங்கீகரித்துள்ளனர்.

10. வளர்ந்து வரும் ஒப்பிலக்கியத் துறைக்கு வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் பங்களிப்பிற்கான வாய்ப்புகள் உள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. வாழ்வியற் களஞ்சியம்.
2. மேலது.
3. கு. அருணாசலக் கவுண்டர், கம்பராமாயணசாரம் - யுத்தகாண்டம் ப. 1.
4. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் முதலியார் அவர்களும், அவர்களுடைய நூல்களும், ப. 13.
5. கம்பராமாயணசாரம், ஆரண்யகாண்டம், பின்னிணைப்பு, ப. 9.
6. உ.வே. சாமிநாதையர், அகலிகை வெண்பா மூன்றாம் பதிப்பு, பின்னிணைப்பு, ப. 128.
7. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், மேலது, ப. 120.
8. மேலது, ப. 23.
9. மேலது, ப. 86.
10. உ.வே.சா. அகலிகை வெண்பா, மேலது, ப. 129.
11. மேலது.
12. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் மேலது, ப. 49.

13. மேலது.

14. மேலது, ப. 113.

15. டி.கே.சி. அகலிகை வெண்பா, பரிசுப்பதிப்பு, முன்னுரை.

16. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் மேலது, ப. 100.

17. வெ.ப.சு. கம்பராமாயணசாரம், பாலகாண்டம், முன்னுரை, ப. 33.

18. ரா. ராகவையங்கார், அகலிகை வெண்பா, முகவுரை.

19. Rape of the Lucrece.

20. T. Merric, The Chameleon.

21. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் மேலது, ப. 93.

22. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ப. 89.

23. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ப. 95.

24. அகலிகை வெண்பா, பா. 251, 252, 253.

25. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ப. 89.

26. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான், ப. 123.

❄❄❄❄❄

# அகலிகை வெண்பா

பு. பாலாஜி

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளிவந்த சிறந்த காப்பியங்களில் வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா ஒன்றாகத் திகழ்கிறது. 1914இல் வெளிவந்தது. காப்பியங்களின் சில பகுதி ஆசிரியரின் நோக்கத்திற்கேற்ப மீட்டுருவாக்கம் செய்யப்பெற்று வெண்பா வடிவில் வெளியிடப்படுவது இலக்கிய உலகின் வழக்கம். அவ்வகையில் அகலிகை வெண்பா பாத்திர நோக்கிலும் தற்காலச் சமூக ஏற்பு வேண்டியும் காப்பிய நிலையிலும் உருவாக்கப்பட்டுள்ளதா என நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

## நூல் எழுந்த காரணம்

"கற்புடைய ஒருத்தி கற்பழிய நேர்ந்த சமயத்தில் பெறுதற்கரிய மனவருத்தமடையும் அதிபரிதாபமான கட்டத்தை வருணிக்கவும் கருதியே இயற்றினேன்" என ஆசிரியர் கூற்று நூல்எழுந்த காரணத்தை நிறுவுகிறது. "கற்புடைய பெண்டிரே இனி கற்பிழக்காமல் இருக்க என் கதை ஒரு எச்சரிக்கை" (பா.எண். 254) என அகலிகை கூற்று நூலில் அமைவதன் வழி நூலின் நோக்கம் தெளிவாகிறது.

## நூலின் அமைப்பு

இந்நூல் 109 பாடல்கள் கொண்ட இந்திரகாண்டத்தையும், 110 பாடல்கள் கொண்ட அகலிகை காண்டத்தையும், 72 பாடல்களைக் கொண்ட கௌதம காண்டத்தையும் உடையது. ஆக மொத்தம் 293 பாடல்களை உள்ளடக்கியுள்ளது. வெண்பாக்களாய் செய்யுட்கள் அமைந்து எளிய நடையில் பயணிக்கிறது.

## தொடக்கமும் முடிவும்

கடவுள் வாழ்த்திற்கும் அவையடக்கத்திற்கும் அடுத்து இந்திரன் தேவர்கள் திரண்டிருக்கின்ற சபைக்குத் தலைவனாகத் திகழ்கிறான். வளமான ஒரு சூழலுடன் காப்பியம் தொடங்குகிறது. இந்திரன் சிரசுக்கு மேல் வெண்கொற்றக் குடை ஒளிவெளிப்படுத்த, இருபுறத்தும் தேவமாதர்கள் நின்று வெண்சாமரம் வீச, கின்னரர்கள் யாழ் இசைத்துப் பாட, எதிரே தேவ நடனமாதர் நர்த்தனம் செய்யச் சிங்காதனத்திலே இந்திராணி உடன் வீற்றிருந்தாள். கந்தருவர்கள் முதலான தேவர்கள் அந்தச் சபையில் வந்து நெருங்கி இருந்தார்கள். இந்திரன் இச்சூழலில் அனைவருக்கும் குறை தீர்த்து மகிழ்வித்துக் கொண்டிருந்த பொழுது, பாற்கடலில் தோன்றிய அழகுப் பெண் அகலிகையைப் பெறமுடியவில்லையே என்ற கவலை தொடர்ந்தது எனக் கதைத் தொடக்கம் அமைகிறது. உலகினரில் உயர்ந்த தேவர்கட்குத் தலைவனாகத் திகழ்பவன், அகலிகை, பிறன் மனையாளாய் இருந்த நிலையில் அவளிடம் வலுக்கட்டாயமாகத் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்கிறான். அகலிகை தன் சுய உருவத்தை இராமபிரான் கால்படப் பெற்று இராமபிரானாலும் விசுவாமித்திரராலும் கௌதமரிடம் சேர்ப்பிக்கப்பெற்று முன்னைவிட அதிக அன்புடையவராய் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர் எனக் கதையின் இறுதிப்பகுதி இன்பியல் முடிவாக அமைகிறது.

## கதைநோக்கு

"கதை கூறுவது காப்பியத்தின் அடிப்படை நோக்கமன்று. கதையை அடிப்படையாக வைத்துக்கொண்டு காப்பிய ஆசிரியர் சில எண்ணங்களை வெளியிடுகின்றார். அவருடைய நோக்கம் அல்லது குறிக்கோள் அவர் வாழ்ந்த காலத்துக்கும், சார்ந்த சூழலுக்கும் தக மாறுபட்டிருக்கலாம். சமுதாயச் சிந்தனைகள் மட்டுமன்றித் தனிப்பட்ட சிந்தனைகள் அவர் காப்பிய ஆக்கத்தில் உதவி இருக்கலாம்" (ச.வே.சு. காப்பியப்புனைதிறன், ப.64). சமுதாயத்தை மையமாகக் கொண்டு எதிர்கால நோக்கிலும் நடைமுறைக்கு உகந்த நிலையிலும் காப்பிய அமைப்பு உள்ளது. ஒரு பெண் எந்த நிலையில் பாதிக்கப்பட்டாலும் சரணாகதித் தத்துவத்தின் வழிப் புனிதத் தன்மையுடன் மதிக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறது.

## கம்பன்—வெ.ப.சு. கதை ஒப்புநோக்கு

கம்பனுக்கும் வெ.ப. சுப்பிரமணிய முதலியாருக்கும் அகலிகைக் கதையின் நோக்கம் பெரும்பான்மை ஒன்றுபடுகிறது. சரணாகதிப்படி அவள் மன்னிக்கப்பட்டு முனிவரால் ஏற்கப்படுகிறாள். முனிவரல்லாத நேரத்தில் இந்திரன் அவரில்லம் சேர்வது, குற்றம் செய்து சாபம் பெறுவது, தேவர்களின் வேண்டுதலால் சாபம் மீண்டும் பரிசீலிக்கப்படுதல், அகலிகை கல்லாதல், இராமன் புகழப்படுதல் என்பன அமைகின்றன. கம்பன் படைத்த காப்பிய உத்திகளில் வெபசுப்பிரமணிய முதலியார் தம் படைப்பையும் உருவாக்க முயன்றிருப்பது தெரிகிறது. அவ்வகையில் இயற்கை இறந்த நிகழ்வுகள், மந்திரம், உருமாறல், சாபம், பிரிவு, புனலாட்டு, கற்பனை, வெளியீட்டு உத்தி, முன் நிகழ்வைப் பின்வைத்தல், கால, இட, எல்லை, சமுதாய நிலை என்பன இருவருக்கும் ஒன்றுபட்டு அமைந்து சிறக்கின்றன.

கம்பனிடமிருந்து வெபசுப்பிரமணிய முதலியார் மாறுபடும் இடங்களும் உள்ளன. குறிப்பாக வெ.ப.சுப்பிரமணிய முதலியார் கதையின் மையக் கருத்தில் இந்திரன் வலுக்கட்டாயமாக அகலிகையைக் கவர்கிறான். பல எச்சரிக்கைகள், பேச்சுக்கள், அறிவுறுத்தல்கள், எதிர்காலச் சமூக அவமதிப்புகள், மனைவியின் வெறுப்பை நினைவூட்டல் என்ற நிலைகளில் அகலிகை பேசுகிறாள். இந்திரன் அவற்றிற்கு உடன்படாதவனாய் அவளைக் கட்டாயப் படுத்த அவள் மயங்கி உணர்வின்றிக் கிடக்கும் போது தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்கிறான். கம்பனில் இந்திரன் என்று தெரிந்தும் உடன்படுகிறாள். இதனை

புக்கவ னோ்டும் காமப் புதுமண மதுவின் றேறல்
ஒக்கவுண் டிருத்த லோடு முணர்ந்தன ளுணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன வோரா டாழ்ந்தன ளிருப்பத் தாழா
முக்கண னனைய வாற்றன் முனிவனு முடுகி வந்தான்

என்று விளம்புகிறார் கவி. இங்கு இத்தீச்செயல் தனக்குத் தகுதி இல்லை என்று அதனை விலக்க எண்ணாமல் அச்செயலில் அவள் மனம் கவிந்திருந்தது எண்ணத்தக்கது. வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அகலிகையை மிகத் தூய்மையாகக் காட்ட எண்ணி மனச்சாட்சிக்குத் தவறு செய்யாதவளாகக் காட்டுகிறார்.

அடுத்து இந்திரனுக்குச் சாபமளிக்கப்படுவது இருகாப்பியங்களிலும் நிகழ்ந்தாலும், இந்திரனுக்கும்

அகலிகைக்கும் சாபவிமோசனத்தில் ஏற்றத் தாழ்வு காட்டப்படுவது இக்காலத்து நோக்கில் அநீதி. இந்திரனின் சாபம் கம்பனில் முற்றிலும் நீக்கப்பட்டு ஆயிரம் கண்கள் பெறுதல் என்ற இரட்டிப்பு மகிழ்ச்சியாகிறது. ஆனால் வெப.சுப்பிரமணிய முதலியார் சாபத்தின் கொடுமை குறைக்கப்பட்டு சமூக அளவின்றித் தன் அளவில் மட்டும் சாபத்தின் விளைவு அமைகிறது.

கௌதமர் அகலிகைக்குச் சாபமிடுமுன் மயக்கம் தெளிவித்து, கருணையுடன் முதலுதவி செய்கிறார். சமூகப் பார்வையில் அகலிகைக்கு நிகழ்ந்த குற்றம் நீக்க வேண்டிச் சாபமிடுவதாக அவளிடம் கூறிய பின் சாபமிடுகிறார் என வெப.சுப்பிரமணிய முதலியார் அமைக்கிறார். வான்மீகியிடமிருந்து கதை பெற்ற கம்பன் தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப, கதைபடைத்தான். வெ.ப.சுப்பிரமணிய முதலியார் இன்றைய சமுதாயச் சூழலுக்கு ஏற்ப நடைமுறைக்கு உகந்ததாய் மெருகூட்டிக் கதை அமைத்திருக்கிறார்.

கம்பனின் அகலிகைப் படலத்தில் இந்திரன் செய்யும் பல தவறுகளைக் காண முடிகின்றது. துருவாசமுனிவர் அளித்த மாலையை இந்திரன் யானை மீது வைத்து அவமதித்ததால் செல்வங்கள் இழத்தல் எனும் சாபம் பெறுகிறான். திதி என்பவளின் தவத்தின்போது கருப்பத்தைச் சிதைத்தது; அசுவமேதயாகம் செய்ய சகரனுக்குத் தேவைப்படும் வேள்விக் குதிரையை மறைத்து வைத்திருந்தது என்பன போன்ற குற்றங்களைச் செய்தவன் பிறனில் விழைதலை மட்டும் செய்யச் சிந்திக்க மாட்டாதவனே. ஒரு பிழை பாத்திரமாக இன்றைய நோக்கில் கம்பனில் இந்திரன் இடம்பெறுகிறான். அதே நிலைதான் வெப.சுப்பிரமணிய முதலியார் இடத்தும்.

**அகலிகை**

தலைமைப் பாத்திரமாகத் திகழ்பவள் அகலிகை. வெப.சுப்பிரமணிய முதலியார் அகலிகையின் பெயர்க் காரணமாக "விரூபம் இல்லாதவள் எனும் பொருள்படுகின்ற அஹல்யை என்ற பெயரை அவளுக்கு இட்டது மாதர்களுள் அவளைப்போல் வடிவத்தில் ஒரு சிறிதும் குற்றமில்லாதவள் வேறு ஒருத்தி இல்லை எனும் உண்மையை யாவரும் தெரிந்து கொள்ளத்தான்" என்கிறார்.

தேவர்கள் அமுதம் பெறுவதற்குக் கடலைக் கடைந்த பொழுது அமுதத்துடன் பெண்ணமுதாம் அகலிகை தோன்றினாள்.

இவளைப் பற்றி வெண்பாவில் பாடுவதால் அகலிகை வெண்பா என இவள் பெயருடன் யாப்புப் பெயர் சேர்ந்து நூல் பெயரானது.

மேகத்தைப் போன்ற கூந்தலினள். திருமகளும் விரும்பும் அழகினள். ஒளிக்கு நிழல் இல்லாதது போல இவளழகிற்கு நிகரில்லை. பூவிலுள்ள மலர்ச்சி, அழகு, வாசனை, மிருதுத் தன்மை, குளிர்ச்சி ஆகிய இவையெல்லாம் அவளின் முகத்திலும் அமைந்திருக்கின்றன. தேன் அவளுடைய சொல்லாகும். அவள் முகம் சந்திரனையும் அவள் கண்கள் சந்திரனது களங்கமாகிய மானையும், அவள் சொல் சந்திரனில் உண்டாகிற அமுதத்தையும் போன்றன. காதலாகிய அலைகள் புரளுகின்ற அந்தக் கண்களாகிய சமுத்திரங்கள் வருத்தம் செய்யும் பார்வையாகிய நஞ்சையும் அவ்வருத்தத்தை நீக்கும் பார்வையாகிய அமுதத்தையும், மிகவும் கொடுப்பனவாகும் எனக் கவி அகலிகையை வருணனையுடன் அறிமுகப்படுத்துகிறார்.

அகலிகை, மகா முனிவர் கௌதமரின் மனைவி என நல்ல சமூக மதிப்பைப் பெற்றிருந்தாலும், பிறனில் விழைதல் என்ற நிகழ்வுக்கு ஆளானது சமூகக் குற்றமாகும். அகலிகையின் போராட்டம், கவலை, துடிப்பு, தவிப்பு என்பன அகலிகை காண்டத்திலும், கௌதம காண்டத்திலும் காட்டப்படுகின்றன. கணவன் வடிவத்தில் வரும் இந்திரனைத் தன் கணவன் என்றெண்ணி வணங்கி வரவேற்று நின்றாள். அவன் கௌதமரல்லன் என்று தெரிந்ததும் "கௌதமரால் கேடுவிளையும்" என இந்திரனுக்கு எச்சரித்தும் அவன் தன் காமம் அதைவிடப் பெரிதென்கிறான். சமூகம் தூற்றும், பல கேடுவிளையும் எனப் பல அறிவுரைகளை மொழிகிறாள். பெண்ணிடம் வலி செலுத்தல் தகாது என்றும் அவன் கூறிய போலி நியாயங்களை மறுத்தும் உரைத்தனள். இவளின் கூற்றுகளை நோக்குகையில் சுய அறிவும், சமூக அறிவும், உலகியல் அறிவும், எதிர்காலப் பார்வையும் இவளிடம் நன்கு வெளிப்படுகின்றன. நீதியுடன் செயல்பட வேண்டியவனுக்கு நீதி கற்பிக்கின்ற அறிவு உளியாகத் திகழ்கிறாள்.

பிறப்பால் பல மொழிபேசியவள் அவனையும் மீறி அவன் இயங்க முற்படும்போது அச்சம் அவளை மயக்கத்தில் ஆழ்த்தி உணர்விழந்தவளாக்குகின்றது. கௌதமர் வந்து மயக்கம் தெளிவிக்க உணர்வு வந்து கற்பழிந்தோம் என்ற நினைவு மேலிட்டால் மீண்டும் மயக்கத்திற்கு ஆளாகிறாள். முனிவரின்

கூற்றால் அகலிகையின் ஒழுக்க உணர்வு மனசாட்சியுடன் மாசில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. "உணர்வற்ற நிலையிலிருந்த உன்னைத் துய்த்த இந்திரன் தான் பெருங்குற்றம் புரிந்தான்" என முதலில் இந்திரனுக்குச் சாபம் அளிக்கிறார். குடும்பத்திற்கும் அவமானம், தனக்கும் இழப்பு என்பதால் முனிவர் முதலில் குற்றத்தின் நாயகனான இந்திரனுக்குச் சாபம் அளிக்கிறார். பிறகு சமூகமதிப்பு காக்கவும் சமூகக் குற்றம் நீக்கவும் அகலிகையைப் பிறர் தூற்றக் கூடாது என்ற காரணத்தாலும் கல்லாகுமாறு சாபமிடுகிறார். சாபமிட்ட பிறகு மனைவி சாபவிமோசனம் வேண்டியதால் "இராமன் கால்பட்டுச் சுயஉருவம் பெறுக, மீண்டும் என் மனைவியாக வந்து சேர்க" என்கிறார். 'சாபமிடுபவர், மனைவியாக மீண்டும் வருக' எனும் கூற்றால் அகலிகை சமூகத்திற்காக மட்டுமே சாபம் பெறுகிறாள் என்பது தெளிவாகிறது. சாபச் சூழலையும் "அகலிகை கற்புடைய பெண்டிற்கு என் கதை ஒரு எச்சரிக்கை" எனக் கூறிச் சமூகப் பயன்பாட்டு நிகழ்வாக்குகிறாள்.

இராமனின் திருவடிபட்டு சுயஉருவம் பெற்ற அகலிகையை இராமன் பத்தினி எனப் பெருமதிப்பளிக்கிறார். ஆகவேதான் கௌதமர் இல்லம் வரை செல்கிறார் இராமன். கௌதமர் இன்முகமுடன் இன்ப அதிர்ச்சியுடன் கூடிய பக்திப் பெருமிதத்துடன் வரவேற்று விருந்தளிக்கிறார். இராமனால் கௌதமரும் அகலிகையும் சேருகின்றனர். அகலிகையும் காதல் குறைவுபடாத கௌதமரும் ஒருமனப்பட்டு இரண்டு கண்களும் ஒரு பொருளைத் தனித்தனியாக நோக்காமல் ஒரு மித்து நோக்குதல் போல முன்போல் இல்வாழ்வை ஒற்றுமையுடன் நடத்துவராயினர் (ப.293). இப்பாத்திரத்தின் வழிக் கணவன் மனைவியின் ஒற்றுமை உணர்த்தப்படுகிறது. வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அகலிகையைத் தவறிழைக்காதவளாகவும் விபத்திற்குப் பரிகாரமே கல்லாதல் என்ற நிலையிலும் மதிக்கின்றாள். இவ்வாறு தலைமைப் பாத்திரம் மிகச் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இவளின் முன்னைத் தேகம் பிரம்மாவால் செய்யப்பெற்றது. இத்தேகமோ இராமனின் திருப்பாதத்தால் அருளப்பட்டது. இத்தேகம் அகத்தும் அடைவதும் அழிவதும் எக்காலத்தும் இல்லை. பெரியோர் தினந்தோறும் காலையில் தூக்கம் நீங்கி எழும்பொழுது இவளைத் தமது நெஞ்சிலே தியானித்து எழுவார்கள் எனும் உயர்வினை இராமனால் பெறுகிறாள்.

### கௌதமர்

மகாமுனிவரான கௌதமர் நீண்டகாலமாய் இல்லறம் தவிர்த்திருந்தவர். அமுதம் கடைந்த பொழுது தோன்றிய அகலிகையைப் பெறப் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்று இந்திரனுக்கு அவள் கிட்டாமல் செய்தவர். இவர் மனைவியை வெறுக்கவோ, ஒதுக்கவோ இல்லாமல் சிறப்புடன் நல்ல கணவன் எனப் பெருமை மிக்க பாத்திரமாகக் காட்டப்படுகிறார். மயங்கிக் கிடந்த மனைவியின் மயக்கத்தைத் தெளிவிக்கும் பொழுது இவரின் கருணை வெளிப்படுகிறது. குறைவுபடாத காதலும், ஒத்த மன உணர்வும் மனைவியிடம் கொண்டவராகச் சிறப்பாகக் காட்டப்பெற்றிருக்கிறார்.

### இந்திரன்

தேவலோகத்தில் பல வசதிகளுடன் அழகியர் சூழ வாழுமிவன் அகலிகை மீது அவளுக்கான போட்டியில் தோல்வியுற்று மனம் வருந்துகிறான். நீதி காத்து உலகோர் குறை தீர்க்க வேண்டிய இவன் பிறன் மனைவியைத் துய்த்துச் சாபம் பெற்று இறுதிவரை துன்புறுவதாகக் காட்டப்பட்டிருக்கிறான். காமத்தின் கொடுமையால் தவறு இழைக்கும் பாத்திரமாக, காமத்திற்கு நீதி தெரியாது என்பதைத் தெரிவிப்பதாக இவன் படைப்பு அமைந்துள்ளது.

> அடைவுற் றேன் வெங்காம அங்கி பெருகி
> வடவைத் தீ நேர்ந்தென் மனத்தின் – இடையுற்ற
> நீதிநெறிப் பேராழி நீர் ஓர் துளியுமின்றிச்
> சேதமறச் செய்த தந்தோ! தீத்து (67)

என்பது இதனைக் காட்டும். அவள் கன்னியாக இருந்த போது காதல் கொண்டது சரி, மனைவியான பிறகு காமுறுவது குற்றம். தொடக்கத்திலேயே தடை செய்திருக்க வேண்டிய உள்ளத்தை வளர்த்துத் தவிக்கிறேன் என இந்திரன் கூற்றாக இச் செய்தி இடம் பெறுகிறது. தன் குற்றம் உணர்ந்த பின்னும் பெரிய சமூக அவமானத்தை ஆக்கியதும் ஒருத்தியின் அழிவைச் செய்ததும் மறுக்கமுடியாத குற்றம். அகலிகை அறிவுறுத்தியும் எச்சரித்தும் தவறு செய்தது ஒருபுறம் உலகில் தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருந்து கொண்டு தவறுசெய்தது மாபெருங்குற்றம். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இந்திரனுக்குச் சாபம்

மாற்றி யமைத்து அகலிகைக்குச் சாபமாற்றம் எதுவுமின்றிக் காட்டியிருப்பது காப்பியத்தில் ஆணாதிக்கச் சமூகத்தின் நிலை என்று கூடச் சொல்லலாம்.

### காப்பியக் கூறுகள்

"மீவியல்பு ஆற்றலுடைய மாந்தரும், மீவியல்பு உடைய தேவர் அரக்கர் போன்ற பாத்திரங்களும் பயிலும் இலக்கியங்கள் இயற்கை இறந்த செயல்களை, இயல்புகளை, அப்பாற்பட்ட நிகழ்வுகளைத் தாங்கி அமைகின்றன. அறிவியல் வளர்ந்து விட்ட தற்காலத்தில் இலக்கியங்கள் எந்த அளவு நிகழ்வை அடிப்படையாக்கி இயல்பு மீறாது அமைகின்றனவோ, அந்த அளவு பழம் இலக்கியங்கள் இயல்புக்கு எதிரான பண்புகள் பொருந்திக் காணப்படுகின்றன. மீவியல்பில் மக்கள் கொண்ட நம்பிக்கையையும் மரபையும் வெளியிடவும் கற்போரைக் கவரவும் மக்கள் மன உணர்வுக் கேற்ப இவ் இலக்கியக் கூற்றைத் தருகிறார்" என்பர் தமிழ் ஐயா, ச.வே.சு.

தேவர்கள் பாற் கடலில் அமிர்தம் கடைவதும் அமுதுடன் அகலிகை தோன்றியதும் (10) வானத்திலே நெடுந்தூரத்தில் ஒரு சோதி வடிவாய் நாரதர் தோன்றியதும் (27), இந்திரன் கௌதமர் உருவில் அகலிகையிடம் சென்றதும் (ப.எண்.112), கௌதமரின் சாபத்தால் இந்திரன் உடல் முழுவதும் அவன் விரும்பிய உறுப்பே ஆயிரமாய்த் தோன்றியதும் (232) சாபத்தால் அகலிகை கல் ஆனதும் (273), இராமன் கால் பட்டுக் கல்லுருவம் தொல்லுருவமாகி அகலிகையாக ஆனதும் (279) இந்திரனின் சாப உருவம் உலகோர் கண்ணுக்குத் தெரியாமல் இந்திரன் கண்ணுக்கு மட்டும் தெரிவதும் (274) வெபசுப்பிரமணிய முதலியார் படைப்பில் இயற்கை இறந்த நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்கனவாகும். இவை கதையின் திருப்பு முனைக்கும், பாத்திரங்களின் வலிமை மெலிவுகளைக் காண்பதற்கும் பயன்படுவதாயுள்ளன.

### மந்திரம்

தமிழ்ச் சமுதாயம் மந்திர ஆற்றலில் நம்பிக்கையுடையது. தொல்காப்பியம் 'மறைமொழி கிளந்த மந்திரத்தான' (தொல். 1421) எனவும், 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப' (தொல். 1434) எனவும் கருத்தளிக்கிறது. இயற்கை இறந்த நிகழ்ச்சியும், மீவியல்புக் கூறுகளும், மிகையாற்றல் மாந்தரும் கதையின் திருப்பங்கட்குப்

பயன்படுவதாக அமைவது காப்பிய இயல்பு. கௌதமரின் மந்திரத்தால் இந்திரன், அகலிகை சபிக்கப்படுதல் எண்ணத்தக்கதாகும்.

**உருமாறல்**

உருமாறல் என்பது உயர்திணை உயர்திணையாவதும் உயர்திணை அஃறிணையாவதும் ஆகும். இவ் உருமாற்றம் என்பது காப்பியத்தில் திருப்புமுனைகளுக்கும், பாத்திரங்களின் வலிமைகாட்டவும் அநீதிக்கும் நீதிக்கும் துணைபோவதாகவும் அமைகிறது. அகலிகை கல்லாவதும் கல் அகலிகை ஆவதும், இந்திரன் கௌதமராய் உருமாறுவதும் சான்றாகக் குறிப்பிடத்தக்கன. இங்கு இந்திரனின் உருமாற்றம் அநீதிக்குத் துணை செய்வதாகவும் உயர்திணை உயர்திணையாக மாறுவதாகவும் உள்ளது. இவ்வுரு மாற்றம் இந்திரன் எனும் பாத்திரத்தின் தாழ்வுக்கு அமைகிறது. இவ்வுருமாற்றத்தையும் கற்புடைய அகலிகை உணர்ந்ததனால் உருமாற்றத்தின் நோக்கம் தொடக்கத்தில் வெற்றி பெற்றாலும் இறுதியில் தோல்வியுறுகிறது.

அகலிகை கல்லானது உயர்திணையிலிருந்து அஃறிணையாவதாகும். இவ் உருமாற்றம் சமூகத்தில் ஒருத்தி வாழ்வில் குற்றம் நீக்க வேண்டி அமைகிறது. அகலிகை நீண்ட நாள் கல்லாக இருந்தாள் என்பது இங்கு நினைக்கத்தக்கது. இராமபிரான் கால்பட்டு மீண்டும் சுயஉருவம் பெற்றவள், இனி மாசுபட முடியாத உடல் பெற்றது, உருமாற்றத்தின் பயன்பாட்டை உணர்த்துகிறது. இராமபிரானின் திருவடியருள் பெற்ற அகலிகை குற்றம் நீங்கியதுடன் சமூக மதிப்புப் பெற்றதும் தெளிவாக்கப்படுகிறது.

**சாபம்**

"மீவியல்பாற்றலும் சமுதாய நம்பிக்கையும் சாபத்திலும் இணைகின்றன. காப்பிய நிகழ் ஓட்டத்தில் சாபத்தின் செல்வாக்கையும் ஆசிரியர் காட்டிச் செல்கின்றார். பிறப்பு அல்லது ஒரு துயர நிகழ்வு ஏற்படும் பொழுது, அது சாபத்தின் விளைவாகக் காட்டப்படுகிறது. தெரிந்தோ தெரியாமலோ செய்த பிழை, பிறிதொருவருக்கு உற்ற துன்பம் இவை ஏற்படுத்திய ஆற்றாமையும் கோபமும் சாபமாக வெளிப்படுகின்றன. பிறருக்கு உறுத்திய துன்பம் தானும் உறும் நிலையில் இப்பிறப்பிலோ முற்பிறப்பிலோ இட்ட சாபம் சுட்டுகின்றதையும் காப்பியம் காட்டுகிறது. காப்பியக்கதை

ஓட்டத்திற்கு இவை துணை புரிவதாலும் சில நிகழ்வுகளுக்குக் காரணமாக அமைவதாலும் முதன்மை பெறும் கூறாக அமைகிறது (ச.வே.சு, காப்பியப் புனைதிறன், பக்.182-183) என்பர்.

காப்பியத்தில் இடம்பெறும் சாபம் இரண்டு. முதலாவது பிழை செய்த இந்திரன் பெற்றது. இவன் குற்றத்தால் ஒரு கணவன் மனைவி உறவுக்கும், ஒரு பெண்ணிற்கும், குடும்பத்திற்கும், தனிமனித மரியாதைக்கும் பாதிப்பு நிகழ்கிறது. இத்தகைய விளைவுக்குக் காரணமானவனுக்கு உடன் தண்டனை அளிக்க வேண்டிச் சாபம் அளிக்கப்படுகிறது. இங்குச் சாபம் அளிப்பவர் பாதிக்கப்பட்டவரின் உறவினராகவும் மறைமுகமாகச் சமூக மதிப்பில் பாதிக்கப்படுபவராகவும் உள்ளார். உடல் முழுவதும் தாம் விரும்பிய உறுப்பு தோன்றுவது சாபம். இதனால் உலகோர் கண்களில் பட்டால் அவமானம் என இந்திரன் மறைந்துறைய இந்திர உலகப் பணிகள் தடைப்படுகின்றன. தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவமான உருவம் அவன் கண்ணுக்கு மட்டுமே தெரியும் என மாற்றியமைக்கப்படுகிறது. சாபத்தின் கடுமை ஓரளவு குறைந்தாலும் இதன் முடிவு சுட்டப்பெறவில்லை. அடுத்து அமையும் சாபம் அகலிகைக்கு அளிக்கப்பெற்றது. சமூக மதிப்பு வேண்டி, தவறு இழைக்கப் பெற்ற அகலிகையின் குற்றம் தீரவேண்டிப் பரிகாரம் எனக் கருதத்தக்க வகையில் இச்சாபம் அமைகிறது. சாபம் நெடுநாள் நீடித்துப் பிறகு நிரந்தரமாக அகன்றது. இனி எப்போதுமே குற்றம் நிகழாவகையில் இராமனால் புனித உடல் பெற்றது சாபவிமோசனத்தின் மற்றொரு சிறப்புப் பயனாகும். வெளிப்படையாக நோக்கும் பொழுது இந்திரன் சாபம் மாற்றியது ஆணுக்குரிய சலுகையாகத் தோன்றினாலும், நுணுகி நோக்கின் நிரந்தரமாகச் சாபத்திலிருந்து விடுபட்டுப் புனிதமாகச் சிறப்புத் தன்மை பெறும் அகலிகை சாபம் பயனுடையதாக உள்ளது.

## பிரிவு

காப்பியத்தில் அகப் பொருட் பிரிவு நிகழ்வது உண்டு. இலக்கணத்திற்கு உட்படாத வகையில் சாபத்தால் அகலிகை கௌதமரைப் பிரிகிறாள். பொதுவாகக் காதலர் பிரிவதை விரும்பமாட்டார்கள். எனினும் கௌதமர் எனும் தலைவன் அகலிகை எனும் தலைவியைச் சாபமிட்டுப் பிரிகிறான். இப்பிரிவு

தலைவி பிரிந்தவர் வாழ்விற்குக் குறை நீக்கவும் சிறப்பு நோக்கவும் அமைகிறது.

## புனலாட்டு

கௌதமர் விடியற்காலை எழவேண்டியவர். இந்திரனின் சூழ்ச்சியால் நடுஇரவில் எழுந்து நீராடச் செல்கிறார். புனலாடக் கங்கைக்குச் சென்றவர் உறங்குகின்ற கங்கையைத் தீண்டாமல் ஏதோ நிகழ்ந்துள்ளது என உணர்ந்து நீராடாமல் திரும்புகிறார். புனலாட முயற்சி மட்டுமே காட்டப்படுகிறது. புனலாட்டு நிகழவில்லை.

## இலக்கிய நயம்

### கற்பனை

கலைக்கு ஆதாரமே கற்பனைதான். இலக்கியக் கலை கற்பனைக்கு மிகுந்த சிறந்த தனித்த இடம் அளிக்கிறது. கற்பனை கலைஞனுக்குக் கற்பகத்தரு; கேட்டதை எல்லாம் நினைத்ததை எல்லாம் வரையாது வழங்கும் வளமையுடைய இக்கற்பனை இலக்கியக் கூறுகளான பொருள், அமைப்பு, வெளியீடு இவற்றில் பொருந்தி அமைகிறது. இலக்கியங்கள் அனைத்துமே பொது நிலையில் கவிஞர்களின் கட்டுரைக்கும் கற்பனை ஆற்றலால் தோன்றியவை . . . . . இலக்கியத்தின் பொருட்கருவே முழுமையாகவோ, ஒரு கூறாகவோ கற்பனையாக இருக்கலாம். கவிதை சுவைக்கும் நயத்திற்கும் கற்பனை மிக இன்றியமையாத துணையாக அமைவதே இதன் பயற்சியின் அடிப்படைக் காரணம் என்பர் (ச.வே.சு. காப்பியப் புனைதிறன், பக் 293-294).

### பாத்திர வருணனை

உலகெங்கும் உள்ள பல பொருட்களிடத்தும் காணப்படும் சகல பேரழகுகளும் ஒருங்கே கூடித் திரண்டு ஒரு பெண் உருவெடுத்தது போன்றவள் அகலிகை (6). மேகம் போன்ற கூந்தலை உடையவள். திருமகளும் விரும்பும்அழகினள். முகத்திற்குக் கூந்தல் அழகு; கூந்தலுக்கு முகம் அழகு என வருணனை அகலிகைப் பாத்திரத்திற்கு அமைந்து சிறக்கிறது.

### பொருள் வருணனை

பொருட்களை வருணித்தல் பொருள் வருணனை ஆகிறது. இலைப் பகுதியே பூவாகப் பரிணமித்துப் பின்புக் காயாகிப்

பழமாகிறதென்று தாவர நூல் வல்லார் சொல்வார்கள். அவ்வாறே இந்த வனம், இருண்ட பச்சிலையாகிய இரும்பைச் சிவந்த பூவாகிய செம்பாகச் செய்து மீண்டும் மஞ்சள் வருணமுள்ள பழமாகிய தங்கமாகச் செய்து, இரும்பைச் செம்பாக்கித் திரும்பப் பொன்னாக்கும் இரசவாதியரைப் போல் இருக்கும். காற்றடிப்பதால் இந்திரன் முன் அவ்வனம் தலை வணங்கியது. இங்கு இயற்கை பொருளாகக் கருதத்தக்கது.

**உவமை வருணனை**

உவமையுடன் விளக்கும் கருத்து உவமை வருணனையில் வைத்து எண்ணத்தக்கது. ஆடை அவிழ்ந்தவன் தன்கை அவன் கூறாமலே அதனை உடனே கட்டி உதவுதல் போல, கௌதமர் போட்டிக்காகப் பசுவைத் தேடிக் கிட்டாமல் அடைந்த கவலை போக்க வேண்டாமலே உடனே உதவி செய்ததால் மேகம் மீதேறி எங்குத்தேடியும் இந்திரனுக்குக் கிட்டாத பசு கௌதமருக்கு மட்டும் கிட்டியது. இது எவ்வாறிருந்ததெனில் மேகம் தோயும்படி உயர்ந்த கொம்பிலுள்ள தேன் ஒரு முடவனுடைய வாய்க்கு நேராக வாய்ந்து வடிதலைப் போன்றது.

இரண்டு போட்டியிலும் தோற்ற இந்திரன் கொடிய தீயிலே விழுந்து சுடப்பட்டெழுந்தோர் மீண்டும் அத்தீயிலே விழுந்தார் போலவும், ஒருமுறை மாண்டார் மறுமுறை மண்டார் போலவும் வருந்தினான். இங்குத் தீயும் மரணமும் வாழ்வில் மிகக் கொடியன எனும் கருத்து உணர்த்தப் பெற்றுள்ளது. போட்டியில் தோற்றபின்பும் திசைகாட்டும் காந்த ஊசி போல மனம் அவளையே காட்டி நின்றது. அவள் நிழல் போல அவன்மனம் அவளுடன் சென்றது (61,62). வீட்டுத்தீயைத் தொடக்கத்தில் அவிப்பது எளிது அதுபோலக் காமத்தீயையும் தொடக்கத்திலேயே அவித்துவிடுவது மிகவும் எளியது (ப.எண். 69). இங்கு இடம்பெறும் உவமைகள் கருத்துத் தெளிவிற்கும் சுவைகூட்டவும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இன்னும் எண்ணற்றவை உள்ளன.

**உருவக வருணனை**

பூவானது தன் வாசனையே தூபமாகவும் தானே தீபமாகவும், தன்தேனே நிவேதனமாகவும், சிவ பூசை செய்யும் மலரில் வெளியே உள்ள புற அக இதழ்கள் கண்ணைப் போலவும், அதன் தேனை உண்ண வரும் வண்டு நடுவில் இருக்கும் வண்டு கண் மணியைப் போலவும் இருத்தலால் முன்னோர் கண் மலர்

ஒக்கும் என்றார்கள். கண்டு கேட்டு உண்டு மோந்து பரிசித்து அனுபவிக்கும் ஐம்புல இன்பங்களும் ஒரு சேரப் பெண்ணிடத்து மாத்திரம் உண்டென்போர், மலரிடத்தும் அழகு, (வண்டின்) இனிய தொனி, தேன், மணம், மென்மை ஆகிய ஐம்புல நுகர்ச்சிக்குரிய பொருள்களும் ஒரு சேர இருப்பதைத் தெரியாதவர்கள் (பா.எண். 94,95) இங்குக் கண்ணையும் பெண்ணையும் மலராக உருவகித்திருப்பது உய்த்துணர்ந்து இன்புறத்தக்கது. இவைபோல இன்னும் பல்வேறு வருணனை அமைந்து நூலுக்குச் சிறப்புச் செய்கின்றன.

## காப்பிய அமைப்பும் போக்கும்

இந்திரன் இந்திர உலகத்தில் இருக்கின்ற காட்சி முதலில் வருணிக்கப்பட்டுக் கவிக் கூற்றாகத் தொடங்குகிறது. இந்திரன் கூற்றாகப் பிறகு செய்திகள் இடம்பெறுகின்றன. அடுத்து இந்திரனும் அகலிகையும் உரையாடிக் கொள்வதாக அமைகிறது. கௌதம காண்டத்தில் ஆசிரியர் கூற்றாகவும் அகலிகையும் கௌதமரும் உரையாடிக் கொள்வது போலவும் கருத்து வெளிப்படுகிறது. இறுதியில் கவிக்கூற்றாகக் காப்பியம் நிறைவு அடைகிறது. கூற்றாகவும், பாத்திரங்கள் தானாகப் பேசிக் கொள்வது, நினைத்துக் கொள்வது போலவும், பாத்திரங்கள் தொடர்புடைய பாத்திரங்களுடன் பேசிக் கொள்வதாகவும் காப்பிய நிகழ்ச்சிகள் அமைகின்றன.

## முன்நிகழ்வைப் பின் வைத்தல்

முன் நிகழ்வைப் பின் வைத்தல் இரண்டு இடங்களில் அமைகிறது. முதலாவது இந்திரன் பிறர் குறைகளைப் போக்கிக் கொண்டிருந்த பொழுது ஒரு கவலை நினைவிற்கு வந்தது. அமுதம் கடையும் போது அமுதுடன் வந்த அகலிகை தனக்குக் கிடைக்காதது தான் அது. இரண்டாவதாக இராமனும் விசுவாமித்திரரும் வரும்பொழுது இராமன் கால்பட்ட கல் பெண்ணாக உருமாறியது. அந்நிகழ்வு கண்டு யார் இவள் எனக்கேட்டான் இராமன். விசுவாமித்திரன் அகலிகை சாபம்பெற்ற வரலாறு பற்றிக் கூறினார். காப்பிய அமைப்பிற்கு இவ்வுத்தி மிக்க பயனுடையதாக உள்ளது.

## கால, இட, எல்லை

காப்பியம் மூன்று காலத்தையும் இரண்டிடத்தையும் உள்ளடக்குகிறது. இந்திரனுக்கு அகலிகை நினைவு இறந்த

காலத்தின் நிகழ்வை நினைவூட்டும் நிகழ்காலச் செயலாக அமைகிறது. இந்திரன் உடனே கௌதம முனிவர் இல்லமுள்ள வனம் சேர்தல் முதலான நிகழ்வுகள் அமைக்கப்படுகின்றன. முன் இந்திரன் சபையும் பின் கௌதமர் இல்லமும், இடமாக உள்ளன. இந்நிலையில், கௌதமருக்கும், இந்திரனுக்கும் போட்டி நிகழ்ந்த இறந்தகாலச் செய்தியை, நிகழ்காலப் பயன்பாட்டிற்காகக் கதையின் உரிய இடத்தில் வைத்துச் சொல்வது சிறப்புடைத்து. இராமனுக்கு விசுவாமித்திரர் அகலிகை கதையை, இறந்த காலத்தை நிகழ்காலத்துச் செயல்பாட்டிற்கு ஒருங்கிணைத்துச் சொல்லிச் செல்வதும் இடம் சார்ந்த சரியான பயனாகும்.

### கருத்துரைகள்

காப்பியச் செய்திகளுக்குச் சுவை கூட்டவும், தெளிவுபடுத்தவும் பல கருத்துரைகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில:

நண்பனிடம் கூறுவதால் துன்பம் பாதிகுறையும்; மகிழ்ச்சி இரட்டிப்பாகும் (30); அரசன் எப்படியோ அப்படியே குடிகள். நல்லார்க்குத் தீய எண்ணம் நெஞ்சில் தோன்றினால் உடனே நீக்கி விடுவார்கள். தீயோர் அந்த எண்ணத்தை விருப்பத்தோடு ஆதரித்துத் தம் நெஞ்சில் வளர விடுவார்கள் (68, 69). நாம் நம் அருமைக் குழந்தையை எடுக்க விரும்பி, அதன் அருகே செல்லும்போது அடையும் நம்முடைய மன நிலையானது வேறொரு பிள்ளை, தானாய் வந்து நம்மை அணையும்போது உள்ள மனநிலையைவிட அதிக இனிமை அளிக்கும் (8). களவு கொடுத்தவர்கள் களவு கொண்டவர்களைப் பிடித்துக் கட்டல் குற்றமில்லை (149). பிறர் பொருளைக் கவர்தல், பிறர் உயிரைக் கவர்தல் அதனினும் மிகத் தியது. உயிரினும் சிறந்த மாதர்கள் கற்பைக் கவர்தல் அவ்விரண்டினும் மிகத்தியது (145). நல்வழியில் செல்வோர் துன்பம் அடையும்படி நேரிட்டாலும் அந்தத் துன்பமும் நிலையாததாய்ப் பின்பு நிலையான இன்பத்தைத் தருதலால் இன்பம்தான் உண்டு. அவ்வழியில் செல்வோர் இன்பம் அடைந்தாலும் அந்த இன்பமும் தான் நிலையாததாய்ப் பின்பு நிலையான துன்பத்தையும் தருதலால் துன்பமே ஆகும். நல்வழியைக் கடைபிடித்தோரின் தோல்வியும், தோற்றத்தில் தற்சமயத்தில் தோல்வியே யாயினும், உண்மையில் நிலைத்த வெற்றியே (190).

பெண்கள் மனத்திலே காமக்கருத்து சிறிதும் அணுகாமல் அவர்கள் கற்பு நிலை திரியாதிருக்கும் வரை அவர்கள் உடலில்

பிற ஆடவர் துணி பட்டாலும், உடல் பட்டாலும் யாதொரு குற்றமும் இல்லை (210).

**யாப்பு**

அனைத்துப் பாடல்களிலும் எதுகைகள் முழுவதும் சந்த ஒற்றுமையுடையனவாகவும், மோனைகள் ஒவ்வோர் அடியிலும் மூன்றாம் சீரில் அமைந்தனவாகவும் உள்ளன. கருத்துடைய அடைகள் அமைய இசை நிரப்புதலே பயனாக உடைய அடை மொழிகள் இல்லாது விளச்சீர்கள் மிகக் குறைவாகவும் நெடிலீறு உடையனவாகவும் உள்ளன.

தென்றல் உலவுதலும் திங்கள் நிலவுதலும்
மன்றல் மலர்கள் மலர்தலும் -துன்றெழில்கூர்
வான்மயில்கள் ஆடுதலும் மாங்குயில்கள் பாடுதலும்
யான்மகிழச் செய்யா இனி (124)

இங்கு மோனை முதலிரண்டடியில் குறிலாகவும், அடுத்த இரண்டடியில் நெடிலாகவும் அமைகிறது. எதுகை நான்கு அடியிலும் ஒரெழுத்து அமைந்து சிறக்கிறது. எளிமையான இனிமையான சொற்கள் அமைந்து சுவை கூட்டுகின்றன.

செய்யுள் இலக்கணத்திற் கிணங்க தளை சிதையாமல் பொருள் நன்கு புலப்படும்படி சந்தி பிரித்தும் நிறுத்திப் படிக்க வேண்டிய இடங்களையும் குறிப்பிட்டுள்ளது. இனிய எளிய நடையும், சொல்நயமும் கொண்டதாய்ப் பாடல்கள் அமைகின்றன.

நின்னழகே, உண்ணாமல், நித்திரையே கொள்ளாமல்
இன்னுயிரை, ஓர் பொருளா எண்ணாமல், 'என்னை
உன்பால்
அன்னமே சேர்த்துரைத்தால் அவ்வழகை நோவாமல்
என்னைநீ நோவ தெவன்? (147)

என்பதைச் சான்றாக்கலாம்.

**உரைநடை**

செய்யுள் பயிற்சி இல்லாதவரும் எளிதாகப் புரிந்துகொள்ள குறிப்புப் பொருள்களை விளக்கி விரிவாக எழுதிய அகலிகை வெண்பா உரைநடை நூலின் அடுத்த பகுதியாக அமைகிறது. **சான்று:** பொருளைக் காட்டிலும் அதிகமாகப் பேணுதற்கரிய

சிறப்புடையது உடம்பு; அவருக்கு நாணத்திலும் சிறந்தது கற்பு. அவ்வளவு அத்தியந்தமான சிறப்புடைய கற்பைப் பேணாதவள் பெண்ணன்று; பேயே (பக். 103). கட்டுரைக்குள் ஆங்காங்கு எடுத்தாண்ட நூற்கருத்து ஆசிரியரின் உரைநடையை அப்படியே பயன்படுத்தியுள்ளது.

இத்தகைய உரைநடை மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. செய்யுள் பாகத்தில் ஒரு செய்தியைத் தொடர்ந்து பல பாடல்கள் ஒரு தலைப்பின்கீழ்ப் பதிப்பிக்கப் பட்டிருப்பது போல அந்தப் பல பாடல்களுக்குரிய உரைநடைப் பகுதியும் ஒன்று சேர்ந்து அந்தந்தத் தலைப்புடன் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு காண்டத்தில் பல பாடல்களுக்குரிய உரைநடையைத் தனித்தனியாகப் பகுத்துத் தெரிந்து கொள்ளும்படி அந்தந்தப் பாடல் எண்கள் அதனதன் உரைநடைத் தொடக்கத்தில் இடப்பக்கத்தில் இடது ஓரமும் வலப்பக்கத்தில் வலது ஓரமும் அமைகின்றன.

**உரைச்சிறப்பு**

> தென்திசைக்கோ மாற்கும் – செயலரிதே
> மாறாத மையலை என் மானா உயிரினின்றும்
> வேறாக நீக்கும் வினை (73)

என்றது வீடுபெறுவாரைத் தவிர மற்றவராலும் ஆசை தவிர்த்தல் முடியாது. கன்னியரைக் கூற்று என்றும் ஆவி என்றும் குறிப்பிடுகிறது. அருளாத போது கூற்றமும், அருளும் போது ஆவியும் ஆதல் காட்ட வேண்டிக் கூற்றினை அருளில் வெங்கூற்றம் என்று சிறப்பான நயம் அமைந்து அழகு செய்கிறது. இங்கும் பொருள் நயம் சுவையுடன் அமைகிறது.

**நிறைவுரை**

இக்கால மக்கட்கு உதவும் வகையில் உருவாக்கப் பட்டிருக்கும் இக்காப்பியம் வெற்றிபெற்றுள்ளது என்றே கூறவேண்டும். காப்பியத்தின் தொடக்கம் எதிர்நிலைப் பாத்திரமான இந்திரனை அறிமுகப்படுத்தி இறுதியில் கௌதமரும் அகலிகையும் ஒத்த மனதுடன் அன்பாயினர் என இன்பியல் முடிவாய் அமைகிறது. கதையமைப்பில் சமூகப் பயன்பாட்டுச் செய்திகளை ஆங்காங்கு வைத்து, ஆசிரியர் தம் நோக்கத்தை

நிறைவேற்றியிருக்கிறார். கதையில் கம்பனை ஒப்பிடும்போது வெ.ப.சுப்பிரமணிய முதலியார் தற்காலத் தமிழ் மக்கட்கு நடைமுறைக் கேற்ற சமூகப் பயன்பாட்டுச் செய்திகளை அளித்தது மட்டுமின்றிப் பண்பாட்டுப் பாங்கையும் மிகச்சிறப்பாகக் காத்திருக்கிறார். பாத்திர நிலையில் அகலிகை தன் சிக்கலைச் சமாளித்து இறுதியில் எப்பாத்திரத்திற்கும் இல்லாத உயர்ந்த நிலையைப் பெற்றுச் சமூகத்தில் வெற்றியுடன் வாழ்வது போற்றத்தக்கது. கௌதமர் அதற்குத் துணை நிற்பது அருமை. எதிர்நிலைப் பாத்திரமான இந்திரன் இறுதிவரை சாபவிமோசனமின்றி இருப்பது ஆசிரியர் அளித்த தண்டனையாகக் கருத முடிகிறது. எளிமை, நயம், நுட்பம் என்பன சுவைக்கத் தக்கனவாகும். இந்நூல் வழி வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் தமிழறிவு ஆழம், அழுத்தம், நுணுக்கம், சமூக நோக்கு என்பன நன்கு வெளிப்பட்டுள்ளன.

# கம்பராமாயண சாரம்

க. ஜெயந்தி

*தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந் தார்* (குறள். 399)

எனும் வகையில் கம்பராமாயணம் மூலம் தான் பெற்ற இன்ப உணர்வைக் "கம்பராமாயண சாரம்" வழி படிப்பவர் அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார்.

## கம்பராமாயண சாரம்

இது கம்பராமாயணத்தின் சுருக்கமான பதிப்பு. ஆயினும் மூன்று பாகங்களாக உள்ளது. "செந்தமிழ்" நூலில் தொடராக வெளிவந்து பின்னர் நூல் வடிவங் கொண்டது. பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உள்ளடக்கியது. நூலின் நோக்கம் குறித்து வெ.ப.சுப்பிரமணிய முதலியார்.

> **அளவிறந்த சிறப்புடையதாய் அரிய இனிய அறிவாகரமான கருத்துக்கள் நிரம்பிய கம்பராமாயணம் மற்றெந்தத் தமிழ் நூலினும் விரிவாயிருத்தலால், கற்றோருள்ளேயே மிகப் பலர் அதனை முழுவதும் படியாராய் அதனிற் சிறந்த பகுதிகளென்று பிறர் சொல்லக்கேட்ட சில பகுதிகளை மட்டும் படித்து விட்டுவிடுவதும், மேற்கொண்டு படித்தால், அப்பகுதிகளையே திரும்பத் திரும்பப் படிப்பதும் வழக்கமென்பது தெரிந்த விஷயம். ஆதலால், கம்பராமாயணத்தை விரிவஞ்சி முழுதும் படியாத கற்றோரும் மற்றோரும் அதன் இனிமையான பகுதிகள்**

> முழுவதையும் கற்று அறிந்து ஆனந்தித்துப் பயனடையும்படி கருதினேன் (முன்னுரை)

என்று கூறியுள்ளார். நூலிற்கு உ.வே.சா. முகவுரையும், விபுலானந்த சுவாமிகள் அறிமுக உரையும் அளித்துள்ளனர். உ.வே.சா. இந்நூல் குறித்துக் கூறும்போது, "பலகாலம் தேர்ந்து தேர்ந்து இன்புற்று வெளியிடப்படுவதாதலின் இப்புத்தகம் முதலியாரவர்களுடைய பலவகை ஆற்றல்களையும் ஆராய்ச்சி முறைகளையும் தெரிவிக்கிறது'' (முகவுரை) என்று கூறியுள்ளார். அவர் கூறியதற்கிணங்க "கம்பராமாயண சாரம்" வெ.ப.சுப்பிரமணிய முதலியாரை உரையாசிரியர் மற்றும் ஆய்வாளராக, நெறியாளராகக் காட்டுகிறது.

**உரையாசிரியராக வெ.ப.சு.**

"உரையாசிரியர்கள், கவிதையைச் சுவைக்கும் முறை, தாம் சுவைத்த முறை, சுவைத்தபோது தமக்கு ஏற்பட்ட இலக்கிய அனுபவம் ஆகியவற்றைத் தம் உரைகளில் கூறியுள்ளனர்"[1] என்ற மு.வை. அரவிந்தனின் கருத்திற்கிணங்க வெ.ப.சுப்பிரமணிய முதலியார் கம்பராமாயண சாரத்தைப் படைத்துள்ளார். அவ்வகையில் அவர் பல உத்திகளைக் கையாண்டுள்ளார். அவையாவன:

1. **கொண்டு கூட்டு**

படிப்பவர் மூல நூலை நேரடியாகப் படித்து இன்புறும் வகையில், வெ.ப.சு. பாடல்களை அடுத்துக் 'கொண்டு கூட்டு' என்ற பகுதியை அமைத்துள்ளார். மூல பாடத்தில் உள்ளபடியே, கருத்து விளங்கும் வகையில் ஆங்காங்குச் சொற்களை இணைத்தும், பிரித்தும், தொடர்களை மாற்றியும் கொடுத்துப் படிப்பவருக்கு உதவி புரிகிறார்.

> **போவா தொழியா னென்றான் புதல்வன் றன்னை கணவன்**
> **சாவா தொழியா னென்று என்று உன்னந் தன்னுற் றயர்வான்**
> **காவா யென்றான் மகனை கணவன் புகழுக் கழிவான்**
> **ஆஆ வுயர்கோ சலையா மன்ன மென்னுற் றனளே**
>
> **(நகர் நீங்கு படலம்: 50)**

---

1. உரையாசிரியர்கள், மு.வை. அரவிந்தன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1995, ப.128.

என்ற பாடலுக்கு "உயர் கோசலை யாம் அன்னம், 'புதல்வன் போவாது ஒழியான்' என்றாள் : (அதனால்) கண்வன் சாவாது ஒழியான் "என்று என்று உள்ளம் தள்ளுற்று அயர்வாள்; மகனை '(உன் தந்தையைக்) காவாய்' என்றாள்; (காப்பானாயின்) கணவன் புகழுக்கு அழிவாள்; (இவ்வாறு கோசலை) ஆ! ஆ! என் உற்றனள்!" என்று வெ.ப.சு. விளக்கியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

## 2. பொருள்

இப்பகுதியில் பாடல் கூறும் பொருளை நேரடியாகக் கொடுத்துள்ளார். மேலும் கருத்து முழுவதற்கும் விளக்கம் தரும் பொருட்டு அடைப்புக் குறிக்குள் பாட்டில் இடம் பெறாத-உய்த்துணரக் கூடிய கருத்துக்களைக் கொடுத்துள்ளார். மேற்கூறிய பாடலில் இறுதியடிகளுக்குப் பொருள் கூறுமிடத்து,

இவ்வாறாக ஒருபுறம் மகன் நிலைமை வருந்தாநிற்க, மற்றொருபுறம் கணவன் நிலைமை வருந்தா நிற்க, இருதலைக் கொல்லி எறும்பு போலக் கோசலை, ஆ! ஆ! என்ன கொடிய துன்பம் அடைந்தாள்! அந்தோ! (நகர் நீங்கு படலம்: 50) என்று கூறியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

## 3. அருஞ்சொற்பொருள்

கடினமான சொற்களுக்குப் பொருள் கூறிச் சென்றுள்ளார். மேலும், சில சொற்களுக்குப் பொருளும் கூறி, அதே பொருளில் அச்சொல் பிற தமிழ் இலக்கியங்களிலும் வழங்கியுள்ளமையையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சில சொற்களுக்குத் தன்னுடைய விளக்கத்தைக் கூறி, அவ்விளக்கத்தோடு முரண்பாடுடைய விளக்கம் கூறியுள்ள பிற உரையாசிரியர்களின் விளக்கத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எனின்-என்னின்-என்னால். இதற்கு 'என்றால்' என்று முந்திய உரைகாரர்கள் உரை செய்தனர் - சோ.சு., திரு.ச. (அயோத்தியா காண்டம், ப7) என்று கூறியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

அருஞ்சொற்பொருள் கூறுவதோடமையாது, சில இடங்களில் இலக்கண விளக்கமும் கூறியுள்ளார். "அளகம் (-கூந்தல்)

ஆளகம் எனத் தொடை நோக்கி முதலெழுத்து நீட்டப்பெற்றது" (அயோத்தியா காண்டம், ப12) என்ற அவர்தம் விளக்கம் இதற்குச் சான்றாகும்.

கம்பராமாயணத்தின் கதைப்போக்கை இடையூறின்றிப் படிப்பவர் தொடரும் வகையில் எளிய உரைநடையில் விடுபட்ட பாடல்களின் பொருட் சுருக்கத்தைக் கூறிச் செல்கிறார். மேலும் கதை நிகழ்விற்கேற்பப் பாடல்களுக்கும், கதைச் சுருக்கங்களுக்கும் பொருத்தமான சிறு தலைப்புகள் இட்டுச் செல்கிறார். யுத்த காண்டத்தில் யுத்த நிகழ்வுகள் இடம்பெறும் பகுதிகளைப் பெரும்பாலும் உரைநடையாக, சிறு தலைப்புகளிட்டு விவரித்துள்ளார். மேலும் பாடபேதங்கள் உள்ள இடங்களை எல்லாம் எண்களிட்டுச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடல்களுக்குப் பொருள் கூறுவதோடமையாமல் ஆய்வு நோக்கிலும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் கம்பராமாயணத்தை அணுகியுள்ளார். இதன் விளைவாக, "கம்பராமாயண சாரம்" கம்பராமாயணத்தைப் பல கோணங்களில் படித்து இன்புற வழிவகுக்கிறது. ஆய்வாளராக வெ.ப.சு.வைக் காட்டும் பகுதிகள் பின்வருமாறு:

1. அடிக்குறிப்புகள்

வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அடிக்குறிப்புகளில்தன் ஆய்வுப் பார்வையை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். சொற்கள், தொடர்களுக்கு விளக்கம் கூறுவதற்கும் அச்சொற்கள், தொடர்களின் பயன்பாடு பிற இலக்கியங்களில் காணப்படும் இடம், பொருள் கூறுவதற்கும் அடிகுறிப்புப் பகுதியைப் பயன்படுத்தியுள்ளார்.

மேலும், தவறான உரை கூறியுள்ள உரையாசிரியரின் உரையைச் சுட்டுவதற்கும், கதை நிகழ்வோடு தொடர்புடைய புராணச் செய்திகளைச் சுட்டுவதற்கும், ஆங்கில நூலிலிருந்து மேற்கோள் சான்றாகக் காட்டுமிடத்து ஆங்கிலத் தொடர்களை உள்ளபடி அளிப்பதற்கும், ஏற்புடைய இடங்களில் எல்லாம் பிற உரையாசிரியர் தம் உரைகளைச் சுட்டிக் காட்டுவதற்கும், பிற நூல்களிலிருந்து சான்று காட்டுவதற்கும், கதை நிகழ்ச்சி குறித்த தம் எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும், உரைநடையாகக் கதைச்

சுருக்கம் கூறுமிடத்துச் சில (படிப்பவர் தவறவிட்டுவிடக்கூடாது) பாடல் எண்களைச் சுட்டுவதற்கும், பாடலடிகளைத் தருவதற்கும், மேலும் விளக்கம் தேவைப்படும் பகுதிகளை விளக்குவதற்கும் பாடல் கருத்தோடு தொடர்புடைய பிற சான்றுகளைத் (இலக்கிய, சொற்பொழிவு) தருவதற்கும், மொழிபெயர்த்த சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களைத் தருவதற்கும் (தூர உணர்வு -Telepathy), ஒப்பிடத்தகுந்த பகுதிகளைச் சுட்டுவதற்கும், ஆய்விற்குட்படுத்தப் படவேண்டிய பகுதிகளைச் சுட்டுவதற்கும், ஏட்டுப்பிரதியில் இடம்பெற்றுள்ள செய்திகளைச் சுட்டுவதற்கும் இப்பகுதியைப் பயன்படுத்தியுள்ளார்.

அடிக்குறிப்பில் இடம்பெற்றுள்ள செய்திகள் கம்பராமாயணத்தை விரிவாகப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் படிப்பவர் மனதில் ஏற்படுத்தும் வகையில் இருக்கின்றன.

நயம் பாராட்டல்

படிப்பவரோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களை வழிநடத்தும் வகையில் கம்பரையும், அவர்தம் கவிச்சிறப்பையும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஆங்காங்குப் பாராட்டிச் செல்கிறார்.

மீண்டும் மீண்டும் படித்து இன்புறத்தக்க பகுதிகளை, அப்பகுதிகளின் சிறப்புக் கூறி, தானும் மகிழ்ந்து படிப்பவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறார். மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் கைகேகியின் துயரக்கோலம் குறித்து வரும் பாடல்களை விளக்கிய பிறகு,

> இப்பாட்டிலும் இதற்கு முந்திய மூன்று பாட்டுக்களிலும் கைகேயி தசரதனோடு இணக்கமில் பிணக்கத்துக்கு யத்தனஞ்செய்து முடித்த ஊடற்கோலக் காட்சியை, நிகழ்ந்த முறையே நம் கண்ணெதிர் காட்டினாற்போல வருணித்திருக்கும் வருணனை, மனமகிழ்ச்சியை மிக விளைப்பதாம். அவ்வருணனையில், கூந்தலுட் சொருகியிருந்த மாலையைப் பிடுங்குதலுக்கு மேகத்துள் நுழைந்திருந்த சந்திரனை வெளிப்படுத்தலும், கலன்களைக் கழித்த கைகேயிக்குப் பூக்களை நீக்கிய பூங்கொம்பும்,

தரையிற் கிடந்த அத்தையலுக்குக் கிடைகொண்ட மானுடன் துயில்கின்ற மயிலும் மிகப் பொருத்தமாகவும் தொடர்பாகவும் வரவர ஏற்றமாகவும் உவமானங்கள் கூறி அவையாவற்றுக்கும் சிறந்த தலையலங்காரமாகச் 'சனகியாம் கடிகமழ் கமலத்-தவ்வை நீங்குமென் றயோத்தி வந்தடைந்த அம்மடந்தை-தவ்வையாமெனக் கிடந்தனள் கைகயன் தனையை' என்ற உவமை கூறி முடித்த முடிபு நெஞ்சுள் நெடிது நீங்காது நின்று நிலவி அளப்பருங் களிப்பினை யளிப்பதுவாம் (அயோத்தியா காண்டம், ப.43)

என அவர் கூறும் விளக்கம் இதற்குச் சான்றாகும். மேலும் படிப்பவரோடு நேரடியாக உரையாடும் வகையில் இந்த உரையை அவர் அமைத்துள்ளதும் நோக்கத்தக்கது.

தன் உள்ளத்தைக் கவர்ந்த பாடல்களைச் சுட்டி, அப்பாடல்கள், அவரைக் கவர்வதற்குக் காரணமான சிறப்புக் கூறுகளைச் சுட்டியுள்ளார். "அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய" எனத் தொடங்கும் மந்தரை சூழ்ச்சிப் படலப் பாடல் (26) குறித்துக் கூறுமிடத்து,

இக்கவி, தெய்வம் சில சமயங்களில் தீமையினின்று
நன்மை விளைவிப்பதைத் தெரிவிப்பதாய்,
மிக வெறுக்கப்பட்ட பொருள் மிக விரும்பப் பெற்ற
பொருளுக்குக் காரணமா யிருந்ததை விளக்குவதாய்,
உண்மையை உள்ளவாறே உரைத்து உவப்பும்
வியப்பும் ஒருங்கே நிகழ்விப்பதாய்ச் சுவையுணர்வார்
உள்ளத்தைச் சூரையாடித் தொண்டு கொள்வதாய்
உள்ள நனியினிய அதி அற்புத கவியாம்
(அயோத்தியா காண்டம், ப.39)

என்று அவர் கூறியுள்ளமை இதற்குச் சான்றாகும்

கம்பரின் கவி உத்திகளைப் பாராட்டி, அதன்வழிக் கம்பரின் கவிச்சிறப்பைப் படிப்பவர் உணரச் செய்கிறார். அவ்வகையில் வருணனைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள கம்பரின் கற்பனைத் திறனையும், கவித்துவ முறையையும் இயன்றவிடங்களில் எல்லாம் பாராட்டிச் செல்கிறார். அவ்வகையில் கம்பரின் குறைந்த சொற்பயன்பாட்டையும், பல்வேறு

அமைப்புடன் கூடிய (கேள்வி-பதில், மெய்ப்பாடுகள் வெளிப்பட அமைந்த) கவிதைகளைச் சுட்டி, அப்பாடல்களின் வழித் தமக்குக் கம்பர் குறித்துத் தோன்றிய உணர்வுகளைப் படிப்பவருக்கு உணர்த்துகிறார். "தைலமாட்டுப் படலத்தில்" இடம்பெற்றுள்ள "ஏவிய குரிசில்பின்" (73) என்ற பாடலுக்கு,

> அயோத்தி நகர மாந்தர் ஒரு சில ரொழிய அனைவரும் இராமனைப் பின்தொடர்ந்து காட்டுக் கேகின ரென்பதை, அவ்வாறே கூறாமல், 'இராமன் பின் யாவர் ஏகிலர்?' என ஒரு வினா எழுப்பி, அதற்கு விடையாக, சாமதசையி லிருந்த தசரதனைப் பிரிய வொண்ணாமையால் தேவியர்களும், உயிரில்லாமையால் ஓவியங்களும் ஏகா திருந்தமை கூறி, ஏகச் சாத்திய முடையாரா யிருந்தா ரெல்லாரும் ஏகின ரென்று கொள்ளக் கூறிய கவி சாதுரியம் கவனிக்கத் தக்கது
>
> (அயோத்தியா காண்டம், ப.112)

என்று கூறியுள்ள விரிந்த பொருள் மற்றும் கருத்து இதற்குச் சான்றாகும். மேலும் உவமைகளின் பொருத்தம் பாடல்களின் ஓசை நயம், இலக்கணக் குறிப்புத் தருதல் என இலக்கண உத்திகளின் பயன்பாடு குறித்த ஆய்வும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் மேற்கொண்டுள்ளார்.

நாடக உத்தியைக் கம்பர் பயன்படுத்தியுள்ள திறத்தையும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் சுட்டியுள்ளார். "தைலமாட்டும் படலத்தின் அவலச் சுவையை விவரித்த பின் அவர் கூறும் கருத்து இங்குக் கருதத்தக்கது.

> சோக வருணனையை நெடிது துய்த்துச் சோர்வடைந் துள்ளார்க்குச் சோர்வு தவிர்ந்து கிளர்ச்சி யுண்டாகும் வண்ணம் அடுத்த மூன்று படலங்களிற் களிப்பு விளைக்கும் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் இனிது வருணித்துச் செல்கிறார். சோக நிகழ்ச்சிகளுக் கிடையே களிப்பு நிகழ்ச்சிகளைக் கூறும் இம்முறை, ஆங்கில மகாகவியாகிய ஷேக்ஸ்பியரது நாடகங்கள் முதலிய சிறந்த கிரந்தங்களில் அவல நிகழ்ச்சிகளுக் கிடையே ஆசிய நகைச்சுவை நிகழ்ச்சிகள் வருதலை நினைவு கூரச் செய்கின்றது.
>
> அயோத்தியா காண்டம், ப.124

என்பது அந்தப் பகுதியாகும்.

## கம்பர் குறித்த சிந்தனைகள்

கம்பராமாயணத்தின்வழிக் கம்பரின் சிந்தனைகளை, கருத்தோட்டங்களை உய்த்துணர்த்த முயன்றுள்ளார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார், இரணியன் வதைப் படலத்தில்.

பேரை யொருபொருட்கே பல்வகையாற் (29)

எனத் தொடங்கும் பாடலின் விளக்கவுரையில்,

> பிரபஞ்சத்தையும் பிரபஞ்சம் காரணமான பரம்பொருளையும் பற்றிய கம்பர் கருத்துக்கள், கம்பராமாயண சாரம் பாலகாண்டம் முதற் பாட்டுரையில் கம்பர் 'கடவுட்கொள்கை' என்ற தலைப்பின் கீழும் அயோத்தியா காண்டம் 'கரிய மாலினும்' என்ற பாட்டுரையிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. கம்பர் சமயவாதிகளுள் ஒருவரல்லரென்பதும், அவர் சமயாதீதக் கொள்கையினரென்பதும், அந்த விவரணங்களில் நிலைநாட்டப்பட்டிருக்கின்றன. (யுத்தகாண்டம், ப.30)

எனக் கம்பரின் கடவுட்கொள்கை குறித்து ஆய்வு செய்துள்ளார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார்.

குகப் படலத்தில் குகனுக்கு இராமன் தன் தாயாரை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியை விளக்கிய வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அதன்வழி, "கம்பர், அரசர் பலரோடும் அவர்களுடைய குடும்பத்தார் சுற்றத்தாரோடும் நீண்ட காலம் நெருங்கிப் பழகி, அவர்களுடைய பழக்க வழக்க ஒழுக்கம் அனைத்தும் நன்கறிந்தவர்" (அயோத்தியா காண்டம், ப.198) என்ற முடிவிற்கு வருகிறார்.

இவ்வாறு இவர் ஆய்ந்து கூறியுள்ள கருத்துகள், படிப்பவர் இலக்கியத்தைப் படிப்பதோடமையாது இலக்கியத்தை உருவாக்கியவர், அவர்தம் பின்னணி குறித்து முழுமையாக அறிந்து கொள்வதற்கும் வழிவகுக்கின்றன. மேலும் அவர்தம் படிக்கும், சிந்திக்கும் திறனையும் விரிவுபடுத்துகின்றன.

## பிற உரைகளைப் பயன்படுத்தியுள்ள தன்மை

பாடல்களுக்குப் பொருள் கூறுமிடத்துத் தன் கருத்தை மட்டும் கூறுவதோடமையாது, தனக்கு முன் தோன்றியுள்ள

உரைகளின் வன்மை மென்மைகளையும் ஏற்புடைய இடங்களில் எல்லாம் சுட்டிச் செல்கிறார்.

பாடலுக்குப் பொருத்தமாக உரிய பொருளை விளக்கிய பின்னரும் 'இவ்விதம் பொருள் கொள்வதும் ஏற்புடையது' என்று மற்றோர் உரையாசிரியரின் உரையைச் சுட்டியுள்ளார். தசரதன் மரணக் காட்சியைக் கூறும் பாடலில் "நல்லவன் முகமே நம்பி நடந்தன னென்னு மாற்றம்" (தைலமாட்டுப் படலம், 81) என்ற பாடலடிகளில் 'நல்லவன்' என்பதற்கு வசிட்ட முனிவர் எனக் கொண்டு பொருள் கூறிய வெ.ப.சுப்பிரமணிய முதலியார் பின்னர்,

> ஓர் உரையாசிரியர் (-திரு.ச) நல்லவன் என்பதற்குத் தேர்ப்பாகனான சுமந்திர னென்று பொருள் கொண்டார். அப்பொருள் கொள்ளுதற்கு, முனிவன் மறுமொழி கூறமாட்டாமல் வாளா நிற்க, அரசன், நிகழ்ந்த உண்மையைச் சுமந்திரனாற் தெரியக் கருதி, அவனை நோக்க, 'அந்த நல்லவன் முகமே நம்பி நடந்தன னென்னும் மாற்றம்-சொல்லலும், அரசன் சோர்ந்தான்' எனக் கொள்ளுதல் பொருந்தும். மேற்கூறிய பொருள் கொள்ளுதற்கு, மேலும் பொருத்தமாக, இதற்கடுத்த பாட்டில் 'நாயகன் பின்னுந் தன்தேர்ப் பாகனை நோக்கி' என வருவதுளது. (அயோத்தியா காண்டம், ப. 122)

என்று கூறியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

பிற உரையாசிரியரோடு கருத்து முரண்படுமிடத்து, அவர்கள் கூறிய கருத்துகளை உள்ளபடிக் கூறி, பின் தக்க சான்றுகளுடன் மறுக்கிறார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார். கரன்வதைப் படலத்தில் "அயில் வேல் வீரவாட்கொடு வேல்மடுத்து உழுதிரோ" (25) என்பதற்குக் "கூர்மை பொருந்திய வேலையும் வலிய வாளினையும் கொண்டு வேல்களிற் பொருத்தி உழுவீர்களோ" என்று ஓர் உரையாசிரியரும் 'கூர்மையுடைய வேலாயுதத்தையும் வலிமையுடைய வாளாயுதத்தையும் கொண்டு விளை நிலத்தில் ஊன்ற வைத்து உழுது வாழ்வீர்களோ'' என்று மற்றோர் உரையாசிரியரும் கூறியுள்ள கருத்தை "ஆலும் வேலும்" எனத் தொடங்கும் பழமொழி கொண்டு வேல் என்பதற்கு வேல மரம் என்பதே சரியான பொருள் எனத் தெளிவித்து வேல மரத்தினால்

செய்யப்பட்ட கலப்பை என்ற பொருளே ஏற்புடையது என்று நிறுவுகிறார் (ஆரண்ய காண்டம், ப.88).

பழைய உரைகளில் உள்ள குற்றங்களையும் சுட்டிச் செல்கிறார். சடாயு உயிர் நீத்த படலத்தில் "மண்ணொடு மறைத்தனர் வாரி" என்ற தொடரில் இடம்பெற்றுள்ள "மண்ணொடு" என்பதற்கு மண்ணோடு என்றே பழைய உரைகளில் கூறப்பட்டுள்ளன என்பதைச் சுட்டி "மண் பாத்திரத்தோடு" என்பதே சரியான பொருள் என்பதைப் பல சான்றுகள் காட்டி நிறுவுகிறார் (ஆரண்ய காண்டம், ப.168).

இப்பகுதிகளில் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் பரந்துபட்ட பார்வையும், ஆய்வு நோக்கும் வெளிப்பட்டு நிற்கின்றன.

## ஒப்பீடு செய்தல்

வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஒப்பீட்டுக் கருத்துகளைக் கூறுவதில் பல்வகை உத்திகளைப் பயன்படுத்தியுள்ளார்.

பாடல் கருத்துகளை விளக்கும் பொழுது மூல நூலாகிய வான்மீகி இராமாயணத்துடன் ஒப்பிட்டுள்ளார். குகப் படலத்தில் இடம்பெற்றுள்ள பரதன் குகனுக்கு அன்னையரை அறிமுகப்படுத்தும் பகுதி கம்பரின் படைப்போ என்ற ஐயம் வெ.ப.சுப்பிரமணிய முதலியாருக்குத் தோன்றுகிறது. "கம்பசிருட்டியோ, வான்மீகி கூறியுள்ளதோ வென்று யான் விசாரித்தபோது, இதன் மூலம் வான்மீகி இராமாயணத்தின் 92ம் சருக்கத்தில், பரத்துவாச முனிவனது வினாவுக்கு விடையாக, அவனுக்குப் பரதன் தாயார் மூவரையும் இன்னவின்னாளெனக் கூறிய பகுதியென்று தெரியலானேன்" (அயோத்தியா காண்டம், ப.193) என்று மூல நூலின் கருத்தோடு ஒப்பிட்டுத் தானும் தெளிவு பெறுகிறார். படிப்பவருக்கும் ஐயம் தோன்றாவண்ணம் விளக்கிவிடுகிறார்.

மாரீசன் வதைப் படலத்தில் சீதையைக் காணும் சூர்ப்பநகை, அவள் அழகைப் பாராட்டுவதையும், இதற்கு முன் உள்ள படலங்களில் கம்பர் கூறியுள்ள சீதை அழகு நலன்களையும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஒப்பிட்டுப் பார்க்கிறார் (ஆரண்ய காண்டம், பக். 116-117).

ஒத்த கருத்துடைய, அமைப்புடைய பாடல்களை இயன்றவிடத்தெல்லாம் ஒப்பிட்டுக் காட்டிப் படிப்பவரின் ஆர்வத்தை விரிவுபடுத்துகிறார். மருத்துமலைப் படலத்தில் குணமடைந்த இலக்குமணனைக் கண்டு மகிழ்ந்து அனுமனுக்கு நன்றி கூறும் பாடலுக்கு ஒப்பாக, முத்திரை மோதிரம் கண்டு மகிழ்ந்து அனுமனுக்குச் சீதை நன்றி கூறுவதாக வரும் பாடலை ஒப்பிட்டுக் காட்டுகிறார் (யுத்த காண்டம், ப.357).

மூல நூலில் இடம்பெற்றுள்ள கருத்துகள் பற்றியும் ஒத்த கருத்துடைய பாடல்கள் குறித்தும் படிப்பவர் அறிந்து கொள்ளும் வகையில் இந்த உத்திகளை வெ.ப.சுப்பிரமணிய முதலியார் பயன்படுத்தியுள்ளார்.

## தொடர்புடைய பிற செய்திகளைச் சுட்டுதல்

இன்றியமையாத இடங்களில் எல்லாம் இலக்கண, இலக்கியச் சான்றுகளையும், பத்திரிகைச் செய்திகளையும் சுட்டியுள்ளார். பாடல்களில் புராண, வரலாற்றுச் செய்திகள் சுட்டப்படும்போது, விளக்கப்பகுதியில் அக்குறிப்பிட்ட புராண, வரலாற்றுச் செய்திகளை முழுமையாக அளித்துள்ளார்.

## வழுவமைதி கூறுதல்

கம்பர் பாடல்களில் இடம்பெற்றுள்ள சில நெருடலான பகுதிகளைச் சுட்டிக்காட்டி, அதற்கு வழுவமைதி கூறியுள்ளார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார். சடாயு உயிர் நீத்த படலத்தில், 'தன்(னை) நோக்கிய நெஞ்சுடை யோகியர்' என்பதில் 'தன்' நெஞ்சைக் குறித்ததாகக் கொண்டால் ஒருமை பன்மை மயங்காத வழா நிலையாம்; யோகியரைச் சுட்டுவதாகக் கொண்டால் அம் மயக்கமுடைய வழு நிலையாம்; அதனை ஒவ்வொரு யோகியும் தன்னைத் தனித்தனி நோக்கிய யோகியரெனப் பொருள் செய்து வழுவமைதியாகக் கொள்ள வேண்டும்" என வெ.ப.சுப்பிரமணிய முதலியார் விளக்கியுள்ளமை இதற்குச் சான்றாகும்.

படிப்பவருக்கு ஐயம் தோன்றினால், தொடர்ந்து படிப்பதில் இடையூறு ஏற்படும் என்பதை உணர்ந்தவராக வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஒரு மாணவரின் நிலையிலிருந்து உணர்ந்து- ஐயம் தோன்றும் இடங்களை அறிந்து ஐயம் தீர்த்ததற்குரிய விளக்கமும் தருகிறார்.

## கதையில் இடம்பெறும் நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கூறுதல்

வெ.ப.சுப்பிரமணிய முதலியார் காப்பியத்துள் இடம்பெற்றுள்ள பல நிகழ்ச்சிகளுக்கு, அந்த நிகழ்ச்சி நிகழ்தற்குக் காரணமான கூறுகளை விளக்கியுள்ளார். குகப் படலத்தில் குகன் பாதங்களில் பரதன் விழுந்து வணங்கிய நிகழ்ச்சிக்குப் பின்வருமாறு காரணம் கூறுகிறார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார்; "மூத்த வேட்டுவக் குகன் காலில் இளையகோபரதன் வீழ்ந்தது வேளாண்குலத்து முதிய அப்பமூர்த்தி காலில் விப்பிரகுலத்துப் பிள்ளைப் பருவச் சம்பந்தமூர்த்தி வீழ்ந்தது போலத் தக்க செயலேயா மென்க" (அயோத்தியா காண்டம், ப.182) என்பது அந்தப் பகுதியாகும்.

கதை மாந்தர்களின் செயல்களுக்கும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் பல இடங்களில் காரணம் கூறிச் செல்கிறார். குகப் படலத்தில் குகன், பரதன் தன் தாயாரை அறிமுகப்படுத்தியபோது மற்ற இரு தாயரை வணங்கியது போல் கைகேயியையும் வணங்கினான் என்ற இடத்தில் "அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்", "தாயின் சிறந்ததோர் கோயிலும் இல்லை" ஆதலால், எத்துணைக் குற்றங்களை யுடையாளெனினும் தாயைப் போற்றுதல் விலக்கொணாக் கடமை" என்று வெ.ப.சுப்பிரமணிய முதலியார் தரும் விளக்கம் இதற்குச் சான்றாகும்.

வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் இத்தகு விளக்கங்கள், கதையின் நிகழ்ச்சிகள் காரணமாகக் குறிப்பிட்ட சில கதை மாந்தர் மீது வெறுப்புற்று இருக்கும் வாசகர்கள் அதன் காரணமாகக் கதையின் வழிக் கவி கூற முற்பட்டுள்ள மெய்ப்பொருளைத் தவறவிடாதிருக்க வழிவகுக்கின்றன.

## ஆய்விற்குட்படுத்தப்படவேண்டிய பகுதிகளைச் சுட்டுதல்

மேலும் பல கோணங்களில் ஆய்வு செய்தால், பல அரிய கருத்துகள் வெளிப்படும் என்று தோன்றிய பகுதிகளை வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ஆய்விற்குரிய பகுதிகள் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

மகுடபங்கப் படலத்தில் இராவணன் - சுக்கிரீவன் போர் குறித்துக் கூறுமிடத்தில் 'அழுந்தினர், அழுந்திலர்' (34) என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. அந்த இடத்தில் விளக்கம் கூறியுள்ள வெ.ப.சுப்பிரமணிய முதலியார் "முந்திய சொற்பொருளைப் பிந்திய சொற்பொருள் அழிக்கும்படியாக உடன்பட்டும் எதிர்மறையுமான, 'அழுந்தினர், அழுந்திலர்' என்றற்றொடக்கத்த இரட்டைச் சொற்றொடர்கள் இப்பாட்டிற் பல வருகின்றன. அவைகள், இவ்வாறு வரும்படி தொடுக்கப்பட்டிருப்பதன் காரணம் ஆராயத்தக்கது". (யுத்த காண்டம், ப.88) என்று சுட்டியுள்ளார்.

படிப்பவரின் அறிவிற்கு வேலை கொடுக்கும் பொருட்டு வெ.ப.சுப்பிரமணிய முதலியார் சுட்டியுள்ள இத்தகு இடங்கள் கம்பராமாயணம் குறித்துப் பல ஆய்வு நூல்கள் தோன்ற வழிவகுக்கக்கூடியவை.

## நெறியாளராக வெ.ப.சு.

கம்பராமாயணத்தைப் படிப்பவர்கள், ஆய்வு செய்ய விருப்புடையவர்கள் என இரண்டு பிரிவினருக்கும் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் நெறியாளராக இருந்து நெறிப்படுத்துகிறார்.

கம்பராமாயணத்தைப் படிப்பவர்களுக்கு வழிகாட்டும் வகையில் கொண்டு கூட்டு, பொருள், அருஞ்சொற் பொருள், குறிப்புகள், பாடபேதம் என வகுத்து விளக்கியுள்ள வெ.ப.சுப்பிரமணிய முதலியார் படிப்பவர்களுக்கு மேலும் வழிகாட்ட பொருள் கொள்ளும் வகையையும் கூறுகிறார்.

> "சுழிக்கும்" என்பதற்குச் "சுற்றி வாங்கும்" என்றும் "வினை" என்பதற்கு "ஊழ்வினை" என்றும் பொருள்கொண்டு, "சுழிக்கும் வினையால்" என்பதற்கு அபாயமான நீர்ச்சுழி போன்று தன்னுள்ளே என்னை யிழுத்துச் சுற்றி வாங்கும் என் ஊழ்வினை காரணமாக' என்றும் உரை கூறலாம்
> (அயோத்தியா காண்டம், ப.73)

என்ற அவர்தம் கருத்து இதற்குச் சான்றாகும்.

ஆங்கில அறிவுபடைத்த தமிழார்வலர்களை மனத்துட்கொண்டு சேக்ஸ்பியர், மில்ட்டன் படைப்புகள்,

விவிலியம் ஆகிய நூல்களில் இருந்து சான்று காட்டி விளக்கியுள்ளார் வெ.ப.சுப்பிரமணிய முதலியார்.

கூறும் கருத்து எளிதில் படிப்பவரால் உணரப்பட வேண்டும் என்ற நோக்கில் பழமொழிகளையும் பயன்படுத்தியுள்ளார்.

கூறும் கருத்தைத் தெளிவாகக் கூறுதல், எந்தக் கருத்தையும் சான்றுகளுடன் நிறுவுதல், ஒப்பிடுதல், மேற்கோள் காட்டுதல், அடிக்குறிப்பிடுதல், ஐயம் தோன்றும் இடங்களில் எல்லாம் விளக்குதல் என வெ.ப.சுப்பிரமணிய முதலியார் பின்பற்றியுள்ள ஆய்வு நெறிமுறைகள் ஆய்வாளர்களால் பின்பற்றப்படவேண்டியது இன்றியமையாததாகும்.

## தொகுப்புரை

"உரையும் திறனாய்வே" என்ற கருத்து வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் கம்பராமாயண சாரத்திற்குப் பொருத்தமானது.

தமிழார்வம் உள்ள அனைவரும் கம்பராமாயணத்தைப் படிக்க வேண்டும் என்று அவர்கொண்டிருந்த எண்ணம், அவர்தம் உரைவிளக்கம் கூறும் பாங்கில் வெளிப்பட்டு நிற்கிறது.

கம்பராமாயண சாரத்தை முழுமையாகப் படித்தவர் மூல நூலைத் (கம்பராமாயணத்தை) தாமே உரைகளேதுமின்றிப் படித்தின்புற இயலும் என்பது திண்ணம். வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் "கொண்டு கூட்டு" என்ற பகுதி படிப்பவர்களுக்கு அத்தகைய பயிற்சியை அளிக்கும் வகையில் இருக்கிறது.

கம்பர் குறித்து இவர் ஆராய்ந்து கூறியுள்ள கருத்துகள் கம்பராமாயணம் வழிக் கம்பர் பின்னணியைப் படிப்பவர் உணர வழிவகுக்கிறது.

இவரது ஒப்பீட்டாய்வுகள் மூல நூல் குறித்தும், ஒத்த கருத்துடைய பாடல்கள் குறித்தும் படிப்பவர் அறிவதற்கு வழிவகுக்கின்றன.

கம்பர் கூறும் மெய்ப்பொருட்களை ஐயம் எதும் தோன்றாவண்ணம் படிப்பவர் உணரவேண்டும் என்ற எண்ணத்தில் வழுவமைதி காட்டல், கதையில் இடம்பெறும் நிகழ்ச்சிகளுக்குக்

காரணம் கூறுதல் ஆகிய உத்திகளை வெ.ப.சுப்பிரமணிய முதலியார் பயன்படுத்தி உள்ளார்.

கம்பராமாயணம் குறித்துப் பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் தோன்ற வேண்டும் என்ற நோக்கத்தில் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் தமிழார்வலர்களுக்குக் கம்பராமாயண சாரத்தை அளித்துள்ளார் என்பதை அவரது கருத்து வெளிப்பாட்டுத் திறன் வெளிப்படுத்தி நிற்கிறது.

## மூல நூல்கள்

1. சுப்பிரமணிய முதலியார் வெ.ப., கம்பராமாயண சாரம், (அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம்)

2. சுப்பிரமணிய முதலியார், வெ.ப., கம்பராமாயண சாரம் (யுத்த காண்டம்), தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1953.

## துணை நூல்கள்

1. உரையாசிரியர்கள், அரவிந்தன், மு.வை. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1995.

2. திருக்குறள் பரிமேலழகர் உரை, புலியூர்க் கேசிகன் (பதிப்பு), பூம்புகார் பதிப்பகம், சென்னை, ஐ.ப. 1993.

# மொழிபெயர்ப்புப் பணி

நா. சந்திரசேகரன்

*முன்னுரை*

மொழிபெயர்ப்பு என்பது இரண்டு மொழிகளில் இடம்பெறும் ஒரே கூறு என்றமைந்திடாது செயல்பாடுகள், சிந்தனைகள், கருத்துருவாக்கங்கள் என்பனவற்றைப் பிறிதொரு பண்பாட்டுத்தளத்திற்குப் பரிமாற்றம் செய்யப்படும் உன்னதமானதொரு பணியாகும் மொழிபெயர்ப்பு அடிப்படையில் வேற்றுமொழி ஒலிபெயர்ப்பாகவும் (Transliteration), முழுமையான மொழிபெயர்ப்பாகவும் (True Translation), தழுவல் பெயர்ப்பாகவும் (Adaptation) மூன்று நிலைகளில் தனித்தனியாகவும், மூன்றும் கலந்தும் காலந்தோறும் வெளியாகி வருகின்றன ஒரு மொழிபெயர்ப்பாளர் தன்னைத்தானே அறிவு நிலையில் வளப்படுத்திக் கொள்வதோடு சமூகத்திற்கும் பணிசெய்திடும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்கிறார். எந்த ஒரு மொழிபெயர்ப்பின் பரவலும், வீச்சும், தாக்கமும், அந்த மொழிபெயர்ப்பாளரின் நோக்கத்தைப் பொறுத்தே குறுகிய எல்லைகளைக் கடந்து விரிவடைகிறது. இந்த வகையில் மொழிபெயர்ப்பு என்பது ஒரு சமூகப்பணி என்பதோடு அந்த மொழிபெயர்ப்பாளரின் மறுபடைப்பாக்கமாகவும் அமைகிறது.

காலத்தாலும், பண்பாட்டாலும், நடைமுறைச் சாத்தியத்தாலும் தமிழில் வளமான, ஏராளமான இலக்கியச் செல்வங்கள் நிறைந்துள்ளன. அவற்றை, நம்மொழி பேசாத மக்களுக்கு, அவர்கள் பேசும் மொழியில் மொழிபெயர்த்து வழங்குவது சிறந்த இலக்கியப்பணியாகும். இலக்கியங்களைத் தாய்மொழியில் படைத்துக்கொண்டே தாகூர் போன்று வேறுமொழியில் பெயர்த்து அளித்தலும் முதன்மையான இலக்கியப்பணியாகும். மொழிபெயர்ப்பின் முதன்மையான நோக்கம் பற்றிப் பாரதியார்,

*சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள்*
*யாவும் கொணர்ந்து இங்குச் சேர்ப்பீர்*

என்றார்.

மொழிபெயர்ப்பில் ஈடுபடும் ஒரு மொழிபெயர்ப்பாளர் முதன்மைமொழி, பெறும்மொழி ஆகியவற்றில் சிறந்த புலமை பெற்றிருக்க வேண்டும். அத்தகைய புலமை என்பது, இருமொழிகளின் சமூகப்பண்பாட்டு வாழ்முறைகளையும் அறிந்த புலமையாகப் போற்றப்படுகிறது. ஏனென்றால் மொழி என்பது சமூகப் பண்பாட்டு, வாழ்முறையின் உன்னதமான வெளிப்பாடாகத் திகழ்கிறது.

அறிவியல் என்ற துறை தனித்துறையாக, உரைநடை வளர்ச்சி கண்ட 19ஆம் நூற்றாண்டில் வளர்ந்த குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதில் பொது அறிவியல், துறைசார்ந்த நூல்களால் இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற நூல்கள் ஆங்கிலமொழியிலிருந்து மொழிபெயர்த்துத் தமிழில் தருவிக்கப்பட்டு வந்த காலம் வெ.ப.சு.வின் காலமாகும். நேரடியாக ஆங்கிலத்தில் அறிவியல் நூல்களைப் படிப்பதைக் காட்டிலும், தமிழில் படிப்பது எளிதாகப் புரியும் என்ற தன்மையின் காரணமாக, கல்வித்துறையில், 1830களில் தாய்மொழியில் கல்விகற்றல் என்ற கோட்பாட்டைப் பின்பற்றித் தமிழ்ப்பயிற்சி மொழித்திட்டம் உருவாக்கப்பட்டது. 1831இல் 'தமிழ் மேகசின்' என்ற தமிழ்மாத இதழ் தமிழில் அறிவியலைச் சொல்ல முடியும் என்று காட்டியது.

இருமொழிகளான தமிழையும், ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்றுத் துறைபோகிய அறிஞர் வெ.ப.சு. மொழிபெயர்த்துள்ள இலக்கியங்களான கோம்பி விருத்தம், சர்வசன செபம், சுவர்க்க நீக்கம் - முதற்காண்டம் முதலியன ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு வந்தவை. கம்பராமாயணச் சுருக்கம் தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட ஒன்று. கல்லூரிப் படிப்பின்போது, பின்வரும் கோட்பாடுகளை வெ.ப.சு. வாழ்வு நெறியாகத் திட்டமிட்டுக் கொண்டார். அவை,

1. To be sexually pure.
2. Not to touch liquor.
3. To avoid flesh (not on principle but on convention)
4. Not to be behind anybody in understanding English.
5. Not to be behind anybody in writing as well as understanding Tamil.

இத்தகைய தன்னம்பிக்கைக் குறிக்கோள்கள் வகுக்கும் எந்த ஒரு இளம் வயது அறிஞனும் அதன்படி நடந்தால் வரலாற்றில் இடம்பெறுவது உறுதி என்பது வெ.ப.சு. வாழ்வு வெளிப்படுத்தும் சான்றாகும். இத்தகைய குறிக்கோளை அவர் கல்வி கற்கும் போதே அமைத்துக் கொண்டார் என்பதை இன்றைய மாணவர்கள் உணர்ந்து இயல்பானதொரு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

இயல்பிலேயே தாமே முயன்று நல்ல புலமையாற்றல் பெற அயராது உழைத்த அவர், தமிழ் இலக்கிய வரலாற்றில் மொழிபெயர்ப்புப் பணி பங்கில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளார்.

### கால்நடை மருத்துவ நூல்கள்

வெ.ப.சு. வாழ்க்கையில் ஆங்கில மொழியறிவு இயல்பாக அவரது கல்வி கற்கும் காலத்திலும் தொடர்ந்து கால்நடை மருத்துவரான காலத்திலும் கிடைக்கப் பெற்றுள்ளார். தொழில்முறைத் தேவையாகவும் அமைந்துவிட்ட சூழலில் தமிழகத்தில் பயிற்சி கொள்ளும் பிறருக்கும் இன்றளவு பயன்படும் வகையில் கால்நடை மருத்துவச் செய்திகளை விரிவான இலக்கியங்களாகப் படைத்துள்ளார்.

Indian Stock Owner's Manual என்ற நூலை "இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புஸ்தகம்" என்று மொழி பெயர்த்துள்ளார். "The more deadly forms of cattle diseases in India" என்ற நூலை "இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகின்ற அதிக பிராணாபாயமான வியாதிகளைப் பற்றிய புஸ்தகம்" என்ற

தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலை அன்றைய அரசாங்கமே அதன் பயன்பாட்டுத் தேவை கருதிப் பிரசுரித்துள்ளது. "Preventive Inoculation and its uses" என்ற நூலை, "கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்துதலும் அதன் உபயோகங்களும்" என்று மொழிபெயர்த்துள்ளார். "Improvement of the local cattle" என்ற "உள்நாட்டுக் கால்நடைகளின் மேம்பாடு" குறித்த நூலையும் மொழிபெயர்த்துள்ளார். தமிழக மருத்துவப் பாரம்பரியத்தில் சித்த மருத்துவ முறைக்கு நிலைத்த இடமுண்டு. மனிதர்களுக்கான சித்தமருத்துவ அறிவியல், செய்யுள் நடையைக் கொண்டிருத்தலையும் இளம்பருவத்திலேயே பல்வேறு இலக்கிய-இலக்கண நூல்களைக் கற்று வளர்த்துள்ள பயிற்சியினையும் கொண்டு வெ.ப.சு. தமது கால்நடை மருத்துவ நூல்களில்

ஏர்கொண்ட மாட்டுக்கு இலக்கணம் யாதென்னில்
எழில்பெறும் உடும்புத்தலை
இனியதாய்க் கறுத்துத் திரண்டொளிரு கின்றகண்
இணைத்துச் சிறுத்தகற்கொம்
பிசைபெறும் முயற்செவி இரட்டைக் கழுத்ததில்
இசைந்தொட்டி யுள்ளதாடி
இலகிரட் டைச்சிமிழொ டுட்கூன லூற்றுயர்
இரட்டைமுது கிருபுறத்தும்

என்று தொடங்கும் இருபத்துநான்கு சீர் விருத்த அடி போல்வன வெ.ப.சு. வின் கால்நடை மருத்துவ அறிவையும் தமிழில் விருத்தம் பாடும் அழகியலையும் ஒரு சேர வாசகர்க்குத் தெரிவிப்பனவாகும்.

வெ.ப.சு. கால்நடை மருத்துவ வல்லுனராய்ப் பெரும்புகழ் அடைந்த நிலையிலேயே கம்பராமாயண ஈடுபாட்டையும் சிற்றிலக்கிய ஈடுபாட்டையும் தம் சமகாலத்தவர்க்கு உணர்த்திக்கொண்டு ஆங்கிலக் காப்பியப் பகுதிகள் மற்றும் தனிப்பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**கல்வி விளக்கம் (1899)**

வெ.ப.சு. அடிப்படையில் தமிழ்மொழி-இலக்கிய அறிவைப் பெற்றுப் பின்னர்க் கிறித்தவக் கலாசாலையில் அறிவியல் பாட

அறிவைப் பெற்றவர். பம்பாய் (மும்பை) சென்று கால்நடை மருத்துவ அறிவைப் பெற்று அத்தொழிலிலே ஈடுபட்டவர். மொழிபெயர்ப்பில் அவருடைய அறிவுக்கல்வி ஈடுபாடு கலப்புத்தன்மையைப் பெற்றுள்ளதை அவர் 'கல்வி விளக்கம்' என்ற நூலை S.V. கள்ளபிரான் பிள்ளை மற்றும் C. அப்பாவு பிள்ளையவர்களுடன் இணைந்து மொழிபெயர்த்துள்ளமை வெளிப்படுத்துகிறது. Herbert Spencer என்ற அறிஞர் வெளியிட்ட 'Education' என்ற அறிவு நூல் ஆங்கில மொழி - இலக்கிய அறிஞர்களிலும் மிகக் குறைவானவர்களாலேயே நேரடியாகக் கற்கப்பட்டு ஏனையோருக்குக் கற்பிக்கப்படும் மூலத்தரவு நூலாகும்.

இந்நூல்

1. சிறந்த உபயோகமுள்ள அறிவு யாது?
2. அறிவுப் பயிற்சி
3. நன்னெறிப் பயிற்சி
4. சரீரப் பயிற்சி

என நான்கு இயல்களைக் கொண்டமைந்தது. முதலிரண்டு இயல்களே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அந்த அறிவு நூலைக் கோம்பி விருத்தம் போன்று தழுவலாகவோ, சுவர்க்க நீக்கம் போன்று விருத்தக்காப்பியமாகவோ தன்னுடைய ஆளுமைக் குரியதாய்க் கைக்கொள்ளாது, அறிவுநூல் அப்படியே முழுமையாக வாசகர்க்குப் போய்ச் சேரவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் நேரடியான மொழிபெயர்ப்பாக (True Translation) மாற்றினார். வெ.ப.சு.வின் சமகாலத்தவர்களில் (வாசகர்களில்) பலரும் (தனித்தமிழ் நடைக்கான எழுச்சி தொடங்கிய காலத்திலும்) மூலநூல் பொருளை அப்படியே அளித்திடும் நோக்கில் மொழிபெயர்ப்பு நடையில் பொதுவழக்கிலில்லாத தனித்தமிழ் நடையைக் கொள்ளாது, சமஸ்கிருதச் சொற்களைக் கலந்து வெளியிட்டனர். "சிறந்த உபயோகமுள்ள அறிவு யாது? என்று நாம் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு, மாறாக ஒரே உத்தரம் சாஸ்திரம் என்பது. இதுவே சகல விவாதமான சங்கங்களுக்கும் தீர்ந்த முடிவு நேரான தற்காப்புக்கு அதாவது பிராணனையும் சுகத்தையும்

பேணுவதற்குச் சர்வ முக்கிய ஞானம் சாஸ்திரம். . ." என்றவாறு வெ.ப.சு. நடை இந்நூலில் செல்கிறது.

சுதந்திரம் பெற்ற பின்னர், வேலையில்லாப் பட்டதாரிகள் இலட்சக்கணக்கில் பெருக்கெடுத்த பின்னர் நாம் அங்கும் இங்கும் கேட்பது 'மெக்காலே' கல்வித்திட்டத்தால் மோசமடைந்து போனதாக எழும் அங்கலாய்ப்பு. ஆனால் மேலைநாடுகளில் கவுரவத்திற்காக வேறுமொழிகள் கற்றல் என்ற அக்கல்வி முறை புகுத்தப்பட்ட அக்காலத்திலேயே 'ஸ்பென்சர்' போன்ற அறிவுஜீவிகளால் கடிந்துரைக்கப்பட்ட அந்தக் கருத்துருவாக்கம் அப்போதே நம்நாட்டுக்கும் அறிவிக்கப்பட வேண்டும் என்ற நோக்கமும், அந்நூலின் கருத்துக்களை அறியும்போது தெரிய வருகிறது. "பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு வெளி அலங்காரம் செய்தல் போலவே அவர்கள் உள்ளத்திற்கும் செய்கின்றார்கள் என்றும், தன் உடலில் வர்ணம் பூசிக் கொள்வதால் பயன் ஒன்றும் ஏற்படாது என்று தெரிந்தும் அவ்வர்ணப் பூச்சில்லாமல் தான் வெளியில் சென்றால் பிறர்கண்டு நகைப்பார்களே என்று கருதும் ஓரினாகோ இந்தியன் போல, இலத்தீன், கிரேக்க பாஷைகளில் தம் மக்களுக்குப் பயிற்சி ஏற்படுவதால் ஒரு பயனும் அடைய மாட்டார்கள் என்று தெரிந்த பெற்றோர்களும் அந்தப் பாஷைகளைத் தெரிந்திருத்தலே கவுரவம் என்று பிறர் கருதுவார்கள் என்று எண்ணி அப்பாஷைப் பயிற்சிக்காகப் பள்ளிக்குத் தம் பிள்ளைகளை அனுப்புகிறார்கள்" என்று மூலநூலில் வரும் செய்திகளை அதே மனநிலையில்தான் ஆங்கிலத்தைப் பலரும் கவுரவத்திற்காகக் கற்பதை மறைமுகமாக உணர்த்தும் பாங்கில் வெளிப்படுத்துகிறார்.

ஹெர்பெர்ட் ஸ்பென்சர், வெ.ப.சு. வாழும் காலத்திலேயே வாழ்ந்து வந்ததால் சென்னை சர்வகலா சங்கத்தின் வைஸ்சான்சலர் (துணைவேந்தர்) டங்கன் துரை (D. Duncan M.A., B.Sc., LLD) மூலம் மூலநூலாசிரியரிடம் தொடர்பு கொண்டு அனுமதி பெற்ற கடினப்பாட்டையும், அறிவியல் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை வைத்தலில் ஏற்பட்ட தடுமாற்றத்தையும் மொழிபெயர்ப்பாளர் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

### சருவசன செபம்

வெ.ப.சு. இந்துதர்ம முறைப்படி வளர்ந்திருந்தாலும் வேற்றுமதத்தவரின் வாழ்வியல் முறைகளிலுள்ள நல்ல கோட்பாடுகளையும் அங்கீகரிக்கும் மனத்தெளிவு பெற்றுத் தாம் பயின்ற கலாசாலையில் மதமாச்சரியம் கடந்த நடைமுறைவாழ்வு செயல்முறைப்படுத்தப் படாததை மனத்தில் கொண்டார். அந்தச் சூழலில் தமக்குப் படிக்கக் கிடைத்த சம்பத் ராய் ஜெயின் என்பவர் எழுதிய Conpluence of opposites என்ற நூலின் இறுதிப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு 'எதிரிடைகள் இசைவுறுதல்' என்ற பாங்கில் இந்நூலை எழுதியுள்ளார். நாயன்மார்கள் பாடலில் அமைந்திருக்கும் சித்தாந்தமும், வள்ளலார் திருவருட்பாக்களின் சாரமும், திருக்குறளில் காணலாகும் அனைத்து உயிர்பேணல் வலியுறுத்தல்களும் வெறும் நூற்றுமுப்பத்தேழு அடிகளால் இயற்றப் பெற்று இந்நூலில் சுருக்கமாகவும், தெளிவாகவும் வெளிப்படுகின்றன.

**எவ்வெந் நாட்டினர் எவ்வெவ்வினத்தினர்**
**எவ்வெவ் மதத்தினர் எனினும் ஆண்பெண்ணெனும்**
**இருபாலினர்க்கும் ஏற்ற பிராத்தனை**

என்று வெ.ப.சு. தம் நூலின் தன்மை-நோக்கம் குறித்து முன்னுரையில் கூறுகிறார்.

நூலில் நல்லோரின் நட்பையும், நினைவையும், உரையையும், நடையையும் கொண்டிடும் தன்மையை வேண்டுகிறார்.

**உயிர்களை வருத்தல் ஒழிவேனாக**
**உயிர்ப்போமெனினும் மெய் உரைப்பேனாக**
**களவினைக் கனவிலும் கருதேனாக**

என்று பிறஉயிர்களைத் துன்புறுத்தாது, சாகும் தறுவாயிலும் உண்மை பேசி, கனவில் கூட களவு மனம் கொள்ளாத வாழ்வை வேண்டுகிறார்.

**வாழ்வு வரின் இறுமாந்திடேனாக**
**தாழ்வுறு மெனின் மனம் தளர்ந்திடேனாக**

செய்தற்குரிய சிறிய கடனையும்
எய்தற்குரிய பயனை எண்ணாமல்
அப்பயன் அடைந்திட அவாவுவார் யாரினும்
விருப்பொடு செய்யும் விழுமியேனாக

என்று பயனை எதிர்பாராது கடமையைச் செய்யும் பண்பினை நாடுகிறார். தன்னைப் பகைத்துக் கொள்வோர் மீது பேரன்பு காட்டும் பண்புடையன் ஆகிடத் துடிக்கிறார்.

மண் முழுவதும் ஒரு மனையா, மண்வாழ்
மக்கள் தொகுதி அம் மனைவளர் குடியாக்
குனிப்பரு நாடா அக்குடியில் உள்ளரா,
ஒரு குடி உள்ளவர் ஒருவரோடொருவர்
போராடிடல் ஒரு போது மின்று
அன் பொடு வாழ்தல் அறவழி ஆதல் போல்
ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டினரொடு
அமர்புரிவதை ஒழித்து அன்பராய் வாழ்தல்
அறநெறியென அறிந் தடைக நல்வாழ்வே

என்று தனது சருவசன செபத்தை நூல்தலைப்புக்கேற்ற ஒருங்கிணைப்புக் கருத்துக்களால் வலியுறுத்தி முடிக்கிறார்.

## கோம்பி விருத்தம்

வெ.ப.சு. வாழும் காலத்தில் சமஸ்கிருத நூல்களை ஆதாரமாகக் கொண்டவைதான் பெரும்பாலும் தமிழில் படைக்கப்பட்டு வந்தன. அவ்வாறன்றியும் ஏதேனும் தமிழ்மொழியில் சிறப்புடையனவாய், வேறொரு பண்பாட்டுக்களம் உடையதாய் ஒரு நூல் வெளியானால் அது சமஸ்கிருத நூல் ஒன்றின் அடிப்படையாகத் தான் இருக்க வேண்டும் என்று வாதிடுவோரும் இருந்த காலக்கட்டம். அக்காலத்தில் நூலுக்கான பாடுபொருளாக அமைந்தனவெல்லாம் பெரும்பாலும் ஏதேனும் ஒரு காப்பிய/புராண பாத்திரங்களை அடியொற்றியனவாகத்தான் வெளியாயின. அவரது 'அகலிகைவெண்பா'வும் ஓர் எடுத்துக்காட்டாகும். அன்றைக்கு -இந்தியாவிலிருந்த ஆங்கிலவழிப் பாடத்திட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருந்த ஒன்று டிமெர்ரிக் (T.Merric) என்ற ஆங்கிலக் கவிஞர் படைத்திருந்த "The Chameleon"

என்ற உருவகப் பாடல். தமிழகம் உள்ளிட்ட இந்தியாவில் இராமாயணம் - குரங்கு-பருந்து-அணில் என்று கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் பொதுவாகப் பெரியவர்களாலும் (குறிப்பாக எல்லாச் சிறுவர்களாலும்) வெறுத்து ஒதுக்கப்பட்ட ஓணான், பச்சோந்தி பிராணியைப் பாடுபொருளாகக் கொண்டிருந்தது அந்த ஆங்கிலவழிப் பாடல்.

ஆங்கிலப் பாடலான கோம்பியின் கதைக்கும் வெ.ப.க. மொழிபெயர்த்த கோம்பிவிருத்தத்திற்கும் இடையே கிட்டத்தட்ட வான்மீகி இராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் உள்ள வேறுபாடு உண்டு. இந்நூலை உ.வே.சா.வும், சுவாமி விபுலானந்த அடிகளும் கற்றுப் பாராட்டியுள்ளனர்.

இப்பாடல் அக்கால ஆங்கிலவழிக் கல்வியில் பள்ளிப்பாடமாக அமைந்ததில் இருந்த ஈர்ப்புக் காரணமாக மொழிபெயர்த்தார் என்றாலும் தன் படைப்பு முத்திரையைப் பதிக்கும் வண்ணம் தழுவலாக அமைத்தார் என்பதும் பொருந்தும். அதில் அற இலக்கியமான திருக்குறள் ஆட்சியைக் காணமுடிகிறது.

எப்பொருள் எவரெவர் இடத்துக் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் அறிதல் மெய்யறி(வு)
இப்புவிதனில் என எண்ணிடாது யாம்
தப்புறு கலாஞ் செய்து தாழ்வை யுற்றனம்

என்ற பாடலில் வள்ளுவரின்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (423)

என்ற குறளை அப்படியே பயன்படுத்தியுள்ளார்.

மேலும், பச்சோந்தி நிறம் மாறி மாறிக் காட்டும் நிலையை விளக்கக் கடல், ஆறு, குளம் ஆகிய நீர்நிலைகளில் உள்ள தண்ணீர் சூரிய வெப்பத்தால் நீராவியாகி, பின்பு மேகமாகி, மழையாகி, ஆலங்கட்டியாகவும் விழுவதன்றி மூடுபனியாகவும் உருவெடுப்பது போன்றது என்று வருணித்து உவமை கூறுகின்றார்.

பாரில் ஆர்கலி நதி பட்ட மாதியில்
சேரும் நீராவியாய்த் திரிந்து மேகமாய்
மாரியாய் ஆவியாய் மற்றும் பல்லுரு
ஆருமால் அதனையும் அன்ன(து) இன்னதே

என்ற பாடலில் பயன்பட்டுள்ள உவமை மகிழ்ந்து இன்புறத்தக்கது ஆகும்.

பச்சோந்தியைக் கிட்டத்தட்ட பரம்பொருள் நிலையில் பார்க்கிறார் வெ.ப.சு. தெய்வம் ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு சமயவாதிகள் தாம் அறிந்தது மட்டுமே உண்மை என்று வாதிடுவதை எண்ணிப் பார்க்கும் அதே வேளையில் அப்பரம்பொருள் ஒன்றே என்பதை அறிய மாட்டாதவர்களாகச் சமயவாதிகள் இருப்பது போலப் பச்சோந்தியைப் பார்ப்பவர்களும் அவ்வாறே காண்கிறார்கள். பச்சோந்தியை அப்பெயர் வைத்து அழைத்ததும் அவசியமற்றது என்று கூறுகிறார். அப்பாடல் வருமாறு:

பரம்பொருள் ஒன்றையே பற்றிப் பேசுறும்
தரம்தரமானபல் சமயத் தர்க்கர் தாம்
தெரிந்தது தான்உண்மை என்பர் செப்பெலாம்
பொருந்தும் அஃ(து) என்றெணார் அவரும்போன்றனர்.

## கதையமைப்பு

கோம்பி விருத்தக்கதையில் ஒரு பாலைவனம் விரிவாக வருணிக்கப்படுகின்றது. இப்பாலைவனத்தில் பயணம் செய்த இரு பயணிகள் ஒரு சோலை (Oasis)யைக் காண்கின்றனர். அச்சோலையில் உள்ள தடாகத்தில் நீருண்டு, களைப்பு நீங்கிய பயணிகளுக்குக் கவித்துவம் உண்டானது. தெளிந்த நீரையுடைய தடாகத்தில் தோன்றும் நீலவானம், தான் முன்கண்ட கோம்பியின் நீலநிறத்தைப் போன்று இருந்தது என்று ஒருவன் கூறுகிறான். அவன் சொன்ன உவமை பொருத்தமற்றது. ஏனென்றால் கோம்பியின் நிறம் பச்சையே என்று வாதிக்கத் தலைப்படுகிறான் மற்றொருவன். "இன்று காலை சூரிய வெளிச்சத்தில் பார்த்தேன்" என்கிறான் ஒருவன். "நானும் அதனை ஒரு சோலையின் நிழலில் பார்த்தேன்" என்கிறான் மற்றொருவன். இவ்வாறான சொற்போர்

கைக்கலப்பாகிறது. அப்போது மூன்றாவதாக ஒரு பயணி வருகிறான். அவன் இவர்கள் வாதத்தைக் கேட்கிறான். தான் கண்ட ஓந்தி கருநிறமுடையது என்பது அவன் வாதம். இதனை நிரூபிக்கத் தன்னிடம் உள்ள ஓந்தியை வெளியில் விடுகிறான்.

'கண்ணெதிர் விடுக்கவும் காமரூபியும்-வெண்ணிற மாயுற' வெளிப்பட்ட விந்தையைக் கண்டு மூவரும் அதிசயிக்கிறார்கள். யானையைக் கண்ட குருடர் போல நிற்கிறார்கள் மூவரும்.

## பாலை வருணனை

தமிழ் இலக்கியங்களில் பாலை வருணனையைப் பலவாகக் காண முடிகிறது. 'நெருப்புத் தகடு' போன்றது என்பார் செயங்கொண்டார். நெருப்புக் கடவுளாகிய சிவன் கருதினால் நெஞ்சம் வெந்துவிடும். கண்டால் கண் வெந்து போகும் என்பார் கம்பர். ஆனால் வெ.ப.சு. தம் கோம்பி விருத்தத்தில்,

> **பெரியவர் கோபத்தில் பிறந்த சாபத்தீ**
> **அரிவையர் கற்புத்தீ, அன்பர் துன்புறப்**
> **புரிதரு பிரிவுத்தீ, பொறாமைத்தீ இவை**
> **ஒருவழித் தொக்கென உளதப் பாலையே**

என்று பாலையை வருணிக்கிறார். இத்தகைய சிறப்பு மிக்க இந்நூலைப் படித்து, உடுமலைப்பேட்டை கந்தசாமிக் கவிராயர் இலங்கைக் கவர்னரின் தமிழாசிரியர் குமாரசிங் ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

பாராட்டுரையில் சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் இந்நூலைப் பற்றி,

> **கோம்பி விருத்தம், குமைந்து நரியெலிகள்**
> **தேம்பி யிறும்புஞ் சிறைவளையும்–போம்படிவந்**
> **தூனா முகில்விதா னத்து ளரியணைவீற்**
> **றீனாய மின்றிருந்த தே**

என்று பாடி மேலும் "கோம்பி விருத்தம் மெய்யாகவே என் மனதுக்கு விருந்தாகியது. அது நரிவிருத்தத்தையும் எலி விருத்தத்தையும் காடுகளிலும் வளைகளிலும் மறைவிடந்தேடி ஓடச்செய்து, பூவாகிய வயிரங்களாலும், காயாகிய மரகதங்களாலும்

அலங்கரிக்கப் பெற்ற உயர்ந்த பைந்தருச் சிங்காசனத்தின் மேல் உடுமணிகளிழைந்த அகல் விசும்பு விதானத்தின் கீழ்க் கெம்பீரமாக அரசு வீற்றிருக்கும் போலும். கோம்பி விருத்தத்தின் நடை மிகவும் மனோகரமானது. அதன் உரை அதனை வாசிக்கும் பண்டிதரும் வித்தியார்த்திகளும் ஒரு நிகராக இன்பம் அனுபவிக்கும்படி உதவுகின்றது. இந்நூலாசிரியருக்கு (இது போன்ற நூல்கள் இயற்றுதலில்) ஊக்கமுண்டாகும்படி தமிழறிந்த சகலரும் உதவி புரிவாரென நம்புகிறேன் என்று போற்றியுள்ளார்.

**சுவர்க்க நீக்கம்**

ஆங்கில இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க பதிவை ஏற்படுத்தியவை மில்டன் படைத்தளித்த Paradise Lost, Paradise Regained என்ற காப்பியங்கள் ஆகும். ஆங்கில மொழி கற்க வாய்ப்படைந்தோரில் மில்டன் காப்பியங்களைக் கற்காதவர்களே கிடையாது. அதனைக் கற்ற பலருள்ளும் பாராட்டுமுறை விமர்சனம் செய்வதையே பெருவிருப்பாகக் (Passion) கொண்டிருந்தனர். வெ.ப.சு. தான் கற்று இன்புற்ற மில்டனின் படைப்பு இரசனையை, நல்ல சந்த நயமுடைய விருத்தப்பாக்களால் இயற்றிச் "சுவர்க்க நீக்கம்" எனப் பெயரிட்டு வெளியிட்டார்.

இலியட், ஒடிசி என்ற மாபெரும் காப்பியங்களின் படைப்பாளியான கிரேக்கம் தந்த ஹோமரின் தாக்கத்தையும், வெர்ஜில் என்ற இத்தாலி நாட்டுக் கவியின் பாதிப்பையும் ஒருங்கே கொண்டு தனக்கான பாணியில் இங்கிலாந்து நாட்டுக்கவி மில்டன் தனது காப்பியங்களைப் படைத்துள்ளமையை வெ.ப.சு. தன் மொழிபெயர்ப்பு நூலின் முகப்பில் விதந்து பாராட்டியுள்ளார். பாயிரம் எழுதும் போது,

> *காதை நாயகன் கடவுளே; கதைநிகழ் களனோ*
> *மீத லத்தொடு பாதலம் பூதலம்; விடயம்*
> *பேதம் இறிமாந் தருக்கெல்லாம் உரித்து என*

மில்டன் காப்பியத்தின் பெருமையோடு தான் படைத்ததன் உள்ளார்வத்தையும் ஒருசேர வெளிப்படுத்துகிறார். மில்டன் போன்ற மாபெரும் கவிஞர்களின் படைப்புகளை மொழிபெயர்க்கும் அவர் மிகுந்த அவையடக்கம் கொண்டவராக,

மில்டனை ஒளிபரப்பும் கதிரவனுக்கும், தன்னை கதிரொளி பெற்று இரவில் ஒளிரும் சந்திரனுக்கும் உவமைப்படுத்திக் கொள்கிறார். வெ.ப.சு. தம் மொழிபெயர்ப்பு நடைக்கு விருத்தப்பா வகையினைத் தேர்ந்தெடுத்துள்ள துணிவு அக்காலத்து அறிஞர்களால் பரவலானப் பாராட்டைப் பெற்றுள்ளது. அவரது விருத்தப்பா நடையானது திருத்தக்கத் தேவர், சேக்கிழார் போன்ற விருத்தப்பா வேந்தர்களின் மரபை அடியொற்றியும், சமகாலத்துக்கான எளிமையான சொல்லாட்சிகளையும் கொண்டமைகிறது.

இன்ன நாடோ, இந்நிலமோ, இவ்வெங்குளிரும் வெப்பும் உறும்
இன்ன இடங்கொல் லோ துறக்கத் திடா யாம் ஏற்றிடக்
கடவேம்
இன்னல் தரும் இவ் இருளோ அவ் எல்லுக் கிணையா ஏற்பதும்
என்று
இன்ன காலை அழிந்துள தூதுவர்கோன் இயம்பிப் பினும்
இசைப்பான்

என்ற இம்மொழிபெயர்ப்பு விருத்தத்தைச் சாத்தான் தான் வந்தடைந்த நரகத்தைப் பற்றிய ஐயங்களை வினவுவதாய் வெ.ப.சு. எளிய சொற்களால் அதே சமயம் சந்தநயமுடையதாய்க் கட்டமைத்துள்ளார்.

Is this the region, this the soil, the clime
said then the lost Archangel. this the seat
That we must change for heav'n? this mournful gloom
For that celestrial light? be it so. . . .

என்றவாறு மில்டன் எழுதிச் செல்கிறார்.

மனமே தனக்கு வாழிடமாம்: மனந்தன் னுள்ளே பவர்க்கத்தைத்
துனுவான் சுவர்க்க மதுவாக்கச் சுவர்க்கம் பவர்க்கம்
ஆக்கவல்லும்
தனிவான் உருமின் எனின் உயர்ந்தோன் தனக்குத் தாழ்வாம்
தாழ்வொழிவு
எவ்வாற்றானும் குறைவில்லா இருக்கும் முறையே உளன்
என்னில்

என்று மனத்தடுமாற்றம் பற்றிய மில்டனின் வரிகளுக்கு, வெ.ப.சு. தன் விருத்தத்தில் சுவர்க்கம், பவர்க்கம் போன்ற சொல்லாட்சிகளின் கலப்புடன் படைத்துள்ள நடையில் அழகியல் உணர்வு மேலிட்டு நேரடியான படைப்பாகத் தோற்றம் பொலிகிறது. வெ.ப.சு.வின் மொழிபெயர்ப்புத் திறனையும் தமிழ்ச்செய்யுள் படைப் பாற்றலையும் முத்துஐயர், சூரியநாராயண சாஸ்திரியார் போன்ற தமிழறிஞர்கள் மட்டுமன்றி வாக்கையர் (Rev. T.Walker), G.U. போப் போன்ற மேலைநாட்டிலிருந்து வந்து திறம்பெற்ற தமிழறிஞர்களும் விதந்து பாராட்டியுள்ளனர். போப் தம் பாராட்டுரையில் வெ.ப.சு. அவர்களின் மதம் கடந்த காப்பிய இரசனையையும், நடை கடந்த வெளிப்பாட்டுப் புலமையினையும், சுட்டிக் காட்டியதோடு அவரது மொழிபெயர்ப்பு முறைமையானது வெறும் வாசகத்தன்மையோடு நின்று விடாது பின்னைய சந்ததிகளுக்குப் பாடமாகும் தன்மையையும் கொண்டிருத்தலைக் கூறிப் பாராட்டுகிறார்.

### இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்

வெ.ப.சு. தாம் பெரிதும் மதித்துப் போற்றிய 'மனோன்மணீயம்' பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை, தம் சமகாலத்து அறிஞர்களிடம் இராமாயணம் குறித்து உரையாடிக் கொண்டிருந்த செய்திகளைப் பேராசிரியர் தாமே வெளியிடாததும், அவரது நண்பர்கள் வெளியிடாததுமான சூழலில் அச்செய்திகளால் தாக்கம் பெற்றிருந்த வகையில் இந்நூலை வெளியிட்டுள்ளார். இந்நூலில் தென்னிந்தியாவில் பூர்வீகப் பழங்குடியினர் என்று கூறப்பட்டோர் திராவிட மக்கள் என்றும், வடநாட்டில் இருந்து பல்வேறு வாழ்வியல் காரணங்களாலும் வந்தவர்கள் ஆரியர்கள் என்றும் இவ்விரு இனத்தவருக்கும் பூமியில் வாழ நிலைகொள்ளலுக்கான உரிமைப் போராட்டமே இராமாயணம் என்றும் இந்நூல் கருத்துரைக்கின்றது. இராமன் ஆரிய அரசன் எனவும், வாலி, இராவணன் திராவிட அரசர்கள் எனவும் கருத்துரைக்கின்றது.

இக்கட்டுரை நூல் முதன்முதலில் தமிழில் எழுதப்பட்டு Tamilian Antiquary என்ற பத்திரிக்கையின் 2ஆவது இதழில் வெளியாகிப் பின்னர் ஆங்கில மொழிபெயர்ப்பாக 7ஆவது இதழில்

வெளிவந்துள்ளது. இந்நூல் ஒரு வகையான பண்பாட்டு மானுடவியல் தன்மை பெற்ற நூலாகும்.

இந்நூலை நான்கு இயல்கள் கொண்டமைத்துள்ளார். Condition of South Indian People at the time of Ramayana என்ற முதல் இயலில் தென்னிந்தியாவின் அரசப் பிரதிநிதிகளான வாலியும், இராவணனும் தத்தம் அரசியல் தர்ம முறைப்படி நடந்து கொண்டனரே அன்றி அவர்கள் செயல்பாடுகளை இழித்துக் கூறத் தேவையில்லை என்பதாகக் கூறுகிறார்.

Condition of South Indian People before the time of Ramayana என்ற இரண்டாவது இயலில் அக்காலத் தென்னிந்தியாவில் நிலப்பாகுபாட்டுத் தன்மையைக் கொண்டு அதாவது மருதநிலத்தில் வாழ்ந்த மள்ளர், பள்ளர் மற்றும் உழவர்கள் வேளாண்தொழிலையும், முல்லைநில மேய்ச்சல் காடுகளில் இடையர்கள் கால்நடை போற்றலையும், நெய்தல் நிலக் கடலோரங்களில் வாழ்ந்த குறவர், மறவர் மற்றும் பரவர்கள் தத்தம் தொழிலையும் செய்துகொண்டிருந்ததாகக் கூறுகிறார் "Condition of South Indian People after the time of Ramayana" என்ற மூன்றாம் இயலில் ஆரியர்கள் தென்னிந்திய மக்களிடம் தமது வர்ணப்பாகுபாட்டு முறையைப் புகுத்தியதாகக் கூறுகிறார் "Caste defined" என்ற நான்காவது இயலில் ஆரியர்கள் வலிந்து புகுத்திய நால்வர்ண முறை தென்னிந்திய மக்களின் சாதி அடையாளங்களை மேலும் மேலும் பிளவுபடுத்த மக்களிடையே ஒற்றுமைக் குறைவுக்கு வழிவகுத்ததாகக் கூறுகிறார்.

இந்நூலின் அடிப்படைக் கருத்துகள் தன்னைப் பாதித்ததால் பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை அவர்களுடைய கருத்துகள் என்ற வகையில் நூலாக்கினார்; ஆனால் பின்னாளில் அக்கருத்தியலில் இருந்து விலகிக் கம்பராமாயணத்தின் மீதுள்ள முழுமையான ஈடுபாட்டு இரசனை காரணமாக 'வாலிவதை நியாயம்' என்ற நூலை எழுதியுள்ளமையும் இங்குச் சிந்திக்கத்தக்கது. வெ.ப.சு. கருத்தியலில் மாற்றம் ஏற்பட்ட போதிலும், ஆரிய-திராவிட முரண்பாடுகள் பற்றிய பதிவுகள் திராவிட இயக்கத்தாருக்கு ஆதாரங்களாக அமைந்தன. கம்பரசம், இராவண காவியம் போன்றவை எழுதப்படுவதற்கான முன்னோடிச் சிந்தனையாளராக இந்நூல் அறிஞர் திகழ்ந்துள்ளார்

வெ.ப.சு. வாழ்ந்த காலத்தில் அவரையொத்த அறிஞர்கள் (ஆங்கிலம் கற்றவர்களும் கற்பவர்களும்) ஆங்கில மொழிவழி வெளியானவற்றைப் புரிந்து கொள்வதையே ஒரு தேவையான அறிவுச் செயல்பாடாய்க் கொண்டிருந்தனர். அதிலும் சிலர்தம் ஆங்கில அறிவை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தோ, தழுவல் செய்தோ வெளியிடும் வாய்ப்பைக் கொண்டிருந்தனர். வெ.ப.சு. ஒருபடி மேலே போய், தமிழில் தாம் படைத்தளித்த "கம்பராமாயணசாரம்" போன்று எளிமையான ஆங்கில நடையில் 'Kambaramayanam' என்றொரு நூலைப் படைத்துள்ளார். இவர் ஆங்கிலத்தில் வெளியிட்ட முறைமை பெரும்தாக்கத்தைப் பின்னாளில் பலருக்கும் ஏற்படுத்தியுள்ளதை அம்மொழி பெயர்ப்பாளர்கள் பழந்தமிழ்ப் பாடல்களில் தத்தம் மனம் கவர்ந்தவற்றைத் தெரிவு செய்து மொழிபெயர்த்துள்ளமை கொண்டு உய்த்துணரலாம்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் எழுதிப் (1178-1185 AD) படைத்த இராமகாதை காப்பியமானது 96 வகையான பாவினங்களைக் கொண்ட 10500 பாடல்கள், ஆறு காண்டங்களாக்கப்பட்டுள்ளது. அந்த மாபெரும் காலகற்பனை-இலக்கியப்பெட்டகத்தை வெ.ப.சு. தமிழறியாதோர் கம்பராமாயணத்தைக் கற்கவும், தமிழறிந்தோரில் ஆங்கிலப்பயிற்சி விரும்புவோர் கூடவே இராமாயணத்தை அறிந்திடக் கூடிய வாய்ப்பாகவும் அமைந்திடும் நோக்கில் எளிய முறையில் சுருங்கிய நூலாக (335 பக்கங்களில்) வெளியிட்டுள்ளார்.

காண்டங்களின் பெயருக்குப் பக்கத்தில் அதன் மையக்கருத்தை அடைப்புக்குறிக்குள் ஒவ்வொரு வரியில் கூறியுள்ளார்.

இந்நூல் ஆங்கிலச் செய்யுள்மரபும் (Verse Tradition), தொழிற்புரட்சிக்காலத்தில உருவான உரைநடை மரபும் (Prose Style) கலந்த ஒன்றாகப் படைக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பண்பாட்டுச் சொல்லாட்சிகளுக்கு ஏற்றம் கொடுக்கும் வகையில் ஐந்நிலப் பெயர்கள், வேள்வி, முனி, புகழ், வறுமை, வண்மை போன்ற சொற்களை அதே ஒலியில் எழுதியுள்ளார்.

*வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்*
*(ஆற்றுப்படலம், 53)*

என்று தொடங்கும் பாடலுக்குத் தன் நூலில் வெ.ப.சு.

Since there is no 'VARUMAI' -Poverty and want there is no 'VANMAI' - the quality என்று முதலடியில் தமிழ்ச்சொற்கள் கலந்து எழுதித் தமிழ்வாசகர்களும் நூலோடு இயைபு கொள்ளச் செய்துவிட்டுப் பின்னர் வரும் அடிகளுக்கு நேரடியான ஆங்கில மொழிபெயர்ப்பைத் தருகிறார். சில இடங்களில் ஆங்கிலச் செய்யுள் நடையைப் பின்பற்றுகிறார்.

"Thy father hath something"

"Thou art my father and mother"

என்பன போன்று எளிய, அதேநேரம் அன்றைய பயிற்சிச் சொற்களுடன் பாடல் அடிகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

காப்பியத்தில் பாத்திரங்கள் உரையாடுவதாய் வரும் நாடகப்பாங்குக் காட்சிகளின் செய்யுள் நடை, உரையாடல் தன்மையிலும், கம்பரின் காட்சி விளக்க வர்ணனைகள் எளிய உரைநடைத் தன்மையிலும் நூலில் அமைந்துள்ளன. வெ.ப.சு. தன் மனம் கவர்ந்த பகுதியான வாலிவதைப் படலத்தில் மட்டும் 60-க்கும் மேற்பட்ட பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். அதில் விவாத உரையாடல் அதிகம் இடம்பெற்றமையும் ஒரு காரணமாகும். கம்பர் 1000 பாடல்களுக்கு ஒருமுறை பாராட்டும் தன் சடையப்ப வள்ளல் பற்றிய செய்தி சுருங்கிய வடிவமான இந்நூலில் கடைசி முடியும்போது ஒருமுறை சுட்டப்பட்டு வாசகர்க்கு உணர்த்தப்படுகிறது.

### நிறைவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் வெபசு.வின் மொழிபெயர்ப்புப் பணி பற்றிய செய்திகள் சுட்டிக் காட்டப்பட்டன.

வெ.ப.சு.மொழிபெயர்ப்பில் பொது நீரோட்டத் தன்மையாக அமைந்திருப்பது மிகவும் எளிமையான சுருக்கமான வெளிப்பாட்டு முறையாகும். நூல்களின் தலைப்புகளை Chamaleon

என்ற ஓசைக்கேற்ப 'கோம்பி' என்ற தூய- தமிழ்ச் சொல்லைப் பொருத்தமாக எடுத்தாண்டதைப் போல், 'Confluence of opposites' என்ற நூலை நேரடியாக 'எதிரிடைகள் இசைவுறுதல்' என்று தலைப்பிடாது 'சருவசன செபம்' என்று நூலின் தொனிப்பொருள் அடிப்படையில் தலைப்பிட்டுள்ளார். தமிழ்ப் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாய்ப்புகளில் தவறாமல் தமிழ்ச் சொல்லாட்சிகளைத் துணிவுடன் கையாளுவதும், எதிர்பார்க்கவே முடியாத மேலைநாட்டு இலக்கியங்களை விருத்தப்பா நடையைக் கொண்டு மொழிபெயர்ப்பதும் போன்ற இலக்கியத் தன்மைகள், வெ.ப.சு. மொழிபெயர்ப்பில் அமையும் தன்னம்பிக்கைக் கூறுகளாகும். குறிப்பிடத்தக்கதொரு சிறப்பு யாதெனில் அவரது மொழிபெயர்ப்புத் திறத்தினை அவர் வாழும் காலத்திலேயே தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் போன்ற அறிஞர்களும், போப் போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் அங்கீகரித்துப் பாராட்டியுள்ளமையாகும்.

தமிழாய்வுலகம் வெ.ப.சு. படைத்த நூல்களையும், மொழிபெயர்ப்பு நூல்களையும் முற்றிலும் திருத்தியதொரு செம்பதிப்பாக வெளியிடலாம். நன்கொடை வசூலிக்கப்பட்டு, வெ.ப.சு.வுக்குச் சிறப்புச் செய்யப்பட்டது. அவரது பன்முகப் பரிமாணங்களைப் பலவேறு உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் போற்றிப் பாராட்டியுள்ளமை நினைவுமலராகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. அந்நினைவுமலர் மறுபதிப்பாக வெளியிடப்பட்டால் மேலும் தெளிவாக வெ.ப.சு. பற்றி வருங்கால இலக்கியச் சமுதாயம் உணரும்.

# இதழியல் கட்டுரைகள்

லொ. ஆ. உமாமகேஸ்வரி

ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், கால்நடைத் துறையில் பணிபுரிந்து, கால்நடை தொடர்பான ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து 'அறிவியல் தமிழிற்கு' முன்னோடியாகத் திகழ்ந்தவருமான வெ.ப. சுப்பிரமணிய முதலியாரின் தமிழ்ப்பணி சொல்லில் அடங்கா. செய்யுள், உரைநடை, மொழிபெயர்ப்பு, வரலாறு, ஆய்வு நூல் எனத் தமிழின் பல துறைகளிலும் தமது தடத்தைப் பதித்த அச்செம்மல் அக்காலத்தில் வெளியான இதழ்களிலும் சில கட்டுரைகளை எழுதியுள்ளார். அக்கட்டுரைகளின் கருத்துகளை வகைப்படுத்தி நோக்குவதாக இப்பகுதி அமைகிறது.

## இதழ்கள்

மாதவையாவின் பஞ்சாமிர்தம் (1924 முதல் 1925 வரை வெளிவந்துள்ள சித்திர சகித மாதப் பத்திரிக்கை), மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் செந்தமிழ்ச் செல்வி ஆகிய இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இம்மூன்று இதழ்களிலும் தொடர்ச்சியாகக் கம்பன் இன்கவித் திரட்டு, கம்பராமாயண சாரம் இரண்டும் தொடர்பான கட்டுரைகளை எழுதி வந்துள்ளார் வெ.ப.சு. இவ்விரண்டும் தனி ஆய்விற்கு உட்படுத்தப்படுவதால், இதழ்களில் வெளியான பிற கட்டுரைகள் மட்டும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறாக, வெபசுவின் கட்டுரைகள் ஐந்திணை 1. வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை, 2. அனைவருக்குமான பிரார்த்தனைப் பாடல், 3. கல்வியின் தேவை, 4. தத்துவம் தொடர்பானவை என நான்கு பிரிவுகளில் அடக்கி ஆராயின், முதலியாரின் தமிழ்ப்புலமை தெள்ளிதின் விளங்கும்.

வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை

1. குன்னூர்க் குமாரசாமி முதலியார் (செந்தமிழ் 33, பகுதி-5)
2. முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிராயர் (செந்தமிழ் 37, பகுதி-1)
3. அண்ணாமலை ரெட்டியார் (ஆனந்தவிகடன் தீபாவளி மலர், 1937)
4. அழகிய சொக்கநாத பிள்ளை (கரந்தைக் கட்டுரை)
5. முரா. அருணாசலக் கவிராயர் (செந்தமிழ் 36, பகுதி-5)

இவற்றுள் முதல் இரண்டு கட்டுரைகள் மட்டும் கிட்டியுள்ளன. "ஒரு மனிதனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை, அவை நடந்த வரிசைப்படி அடைவுபடக் கோத்து, அவற்றின் மூலம் அந்தத் தனி ஒருவனின் குணச்சித்திரம் முழுமை பெற்றுத் தோன்றுமாறு கலையழகுடன் வரையப்படுவதே வாழ்க்கை வரலாறு" என்கிறது பிரிட்டானியக் கலைக்களஞ்சியம். தனி மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றை முறைப்படுத்தி ஓர் இலக்கியமாக உருவாக்கும் முயற்சி, தமிழில் 19ஆம் நூற்றாண்டு முதல் உருவாகியுள்ளது (வாழ்க்கை வரலாற்றிலக்கியம், சாலினி இளந்திரையன், ப. 17). பொதுவாக வாழும் காலத்தில் சிறப்புற்றிருப்பவர் அல்லது மரணத்துக்குப் பிறகு புகழுக்குரியவராக உயர்ந்து விடுபவர் என்னும் இரண்டு வகையினரைப் பற்றியே வாழ்க்கை வரலாறுகள் எழுதப்படுகின்றன என்கின்றது உலகப் புத்தகக் கலைக்களஞ்சியம். இத்தகைய வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு உரிமையும் தகுதியும் உடையவர்கள் என்று அறிஞர் உலகம் சிலரை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஒருவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுகிறவன் அவரோடு நெருங்கிய தொடர்புடையவனாக இருந்திருக்க வேண்டியது மிகவும் சிறந்தது என்றே இத்துறை அறிஞர்களெல்லாம் கருத்துத் தெரிவிக்கின்றனர். (வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம், ப. 24). அவ்வகையில், ஆசிரியர் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் அவர் தம் காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர், இசைப் புலவர்கள் குறித்து 'சுருக்க வரலாறாக' இதழ்களில் 7 பக்கம் வரை கட்டுரை வடிவில் குறிப்பிட்டுள்ளார். வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் முழுமையான கூறுகளைப் பின்பற்றி எழுதவில்லை எனினும், மேற்குறித்த அறிஞர்களிடம் நெருங்கிப் பழகியவர்

என்பதால் அரிய செய்திகளை வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

எட்டயபுரம் சமஸ்தான வித்துவான் முகவூர் மீனாட்சி சுந்தரக்கவிராயர் குறித்த வரலாற்றுக் கட்டுரையில், அவர் பிறப்பிடத்தை முதலில் கூறி, பின் அவர் குடும்பத்தினரை அறிமுகம் செய்து வைக்கிறார். மீனாட்சி சுந்தரக் கவிராயரின் ஒரே குடும்பத்தில் எழுவர் கவிகளியற்றும் ஆற்றல் பெற்றிருந்தனத. 'பாண்டியன் சபையை அலங்கரித்த சங்கப் புலவர் ஏழெழுவர் போல, இந்தப் புலவர் ஒரெழுவரும் சேற்றூர்ச் சமஸ்தானதிபதி சபையை மகிமைப்படுத்தி விளங்கியவர்கள். இனிய கவிகளியற்றுதலில் எல்லாம் வல்லாரான இவ்வேழு புலவர் பெருமக்களும், ஏககாலத்தில் ஒரே குடும்பத்தில் விளங்கும் புதுமையை நினைத்து அதிசயமடைந்து, ஓர் பெரிய கவி குல தாருப்பால்

கந்தசாமிப் பெயரு மிராமசாமிப்
பெயருங்கவினப் பூண்டு
வந்தவிரு பணை முனதிற் கிளைத்தகிளை
பழனிக்குமாரசாமி
நந்து மீனாட்சி சுந்தரம்; பினதிற் கிளைத்த
கிளை நலங்கள் மிக்க
சந்த வரு ணாசலஞ்சுப் பிரமணிய
ணொடு சுந்த சாமி யாலோ

என்றும்

இருபியரிடை யேழிருடியினமீன்களுடங்கிலங்க யென்ன
மண்ணிற்
பெருகுபுகழெழு புலவரொடு குடியி லொருங்குமிகப்
பிறங்கினரால்

எனச் செய்யுளில் அறிமுகம் செய்துவைக்கின்றார். அதன்பின், எழுவரையும் தனித்தனியாகப் பிறப்பு, சிறப்பு, இறப்பு என அறிமுகம் செய்து வைத்தபின் மீனாட்சி சுந்தரக் கவிராயர் குறித்தும், அவர்தம் பாடல்கள் குறித்தும், கவித்திறன் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கிறார். முதற்சந்திப்பிடம், இரண்டாம் சந்திப்பிடம் என ஒவ்வொரு சந்திப்பிலும் நிகழ்ந்த சிறப்புச் செய்திகளைச்

சுவைபட எடுத்துக்கூறும் ஆசிரியர், எட்டயபுரத்தில் இவரைச் சந்திக்க நேர்ந்தபொழுது தேசியக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரைச் சந்திக்க நேர்ந்ததையும், அவர் பதினாறு பிராயமுடையவராகக் காணப்பட்டார் எனவும் குறிப்பிடுகின்றார். கட்டுரைத் தலைவர் இயற்றிய நூல்களுள் அச்சிடப்பட்டவை, அச்சேறாதவை போன்ற செய்திகளையும் குறிப்பிட்டு, கட்டுரையின் இறுதிப் பகுதியில் கட்டுரையாசிரியரின் செய்யுட்களில் சிலவற்றை எடுத்துக்காட்டி கட்டுரையினை நிறைவு செய்கிறார்.

வாழ்க்கை வரலாற்றினை முழுமைப் பொலிவுடனும் அழகுத் தெளிவுடனும் படைப்பதற்குப் பல வேறு துணைக் கருவிகள் வேண்டும். அவைகளுள் முக்கியமானவை வரலாற்று நாயகனின் எழுத்துக்கள்; இதில் நூல்கள், நாட்குறிப்புக்கள், தன் வரலாறு, கடிதங்கள் என்பன அடங்கும் என்கிறார் சாலினி இளந்திரையன். அதற்கொப்ப குன்னூர்ப் பெரிய வீட்டுக் குமாரசாமி முதலியாரின் வரலாற்றுக் கட்டுரையில், கட்டுரை ஆசிரியர் எழுதிய நிருபத்தில் இடம்பெற்ற கவிகளைச் சுட்டிக்காட்டுகின்றார். இசைப்புலவர் குமாரசாமி முதலியாருடன் தனக்குள்ள நெருக்கத்தினையும் அவருடன் பழகும் காலத்தில் நிகழ்ந்த சுவைமிகு செய்திகளையும் கட்டுரையில் அழகுற வர்ணித்துள்ளார் வெ.ப.சு. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர் எழுதியுள்ள இவ்வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் சிறந்த வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றன எனில் மிகையில்லை. பிற கட்டுரைகள் கிடைக்குமாயின் இப்பகுதியினை விரிவான ஆய்விற்குட்படுத்த இயலும்.

### சர்வ ஜன ஜபம்

'சர்வ ஜன ஜபம் என்னும் அனைவரும் வேண்டல்' எனும் தலைப்பில் பிரார்த்தனைப் பாடல் ஒன்று 'பஞ்சாமிர்தம்' என்ற இதழில் வெளியாகியுள்ளது. 1925ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் வெளியான இதழில் (ப. 481-485) இப்பிரார்த்தனைப் பாடல் வெளிவந்துள்ளது. சம்பத்துராய சயினரின் "எதிரிடைகள் இணங்கிடுதல்" (Confluence of Opposites) என்னும் நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு வேண்டிய வேறுபாடுகளுடன் இயற்றியது எனும் குறிப்பினைத் தந்துள்ள ஆசிரியர்,

எவ்வெந்நாட்டினர், எவ்வெவ் இனத்தினர்
எவ்வெம் மதத்தின ரெனினும் ஆண்பெண்ணெனும்
இரு பாலாருக்கும் ஏற்ற பிரார்த்தனை

எனும் அறிமுகத்துடன் பாடலைத் தொடங்குகின்றார். நல்லோர் இணக்கம், நல்லோர் நினைவு, நல்லோர் நடையினை வேண்டும் ஆசிரியர்,

பசுக் கொலைச் செய்தப் பசுத்தோலாற் செய்
செருப்பினைத் தானம் செய்குதல் போலத்
தீய எவ்வகையினும் தேடிய பொருள் கொண்டு
செய்யும் எத்தருமமும் திண்ணமா அதர்மமே; அதனால்
அறமுறை திறம்பி அறம் செயேனாக (8-12)

எனப் பிராத்தித்துக் கொள்கின்றார். கோபம் வராத்தன்மை, வஞ்சகர்பால் சென்றிடா மனது, நடுக்குறா மனம், வருத்தமடையா உறுதி, யார்க்கும் சிறு தீங்கும் செய்திடாதிருத்தல், ஒழுக்கம் வழுவா தன்மை இத்தனையும் வேண்டும் எனத் தமக்கென வேண்டிக் கொள்பவர்; பின்,

பேரறம் புவியெலாம் பெரிதும் பரவுக
துன்பம் எவ்வுயிரையும் துன்னா தொழிக
பகையும் துயரும் பயமும் நீங்கி
எல்லா உயிர்களும் இன்பினை எய்துக
அனைத்துயிர்களும் மன அமைதியை அடைக (74-78)

எனப் பிறவுயிர்களின் நன்மை வேண்டிப் பாடுவது தற்கால நடைமுறைக்குத் தேவையான ஒன்றாகக் கருத்தில் கொள்ள வேண்டியதாகும். அயலார் பொருளினை வேண்டாமை, உயிர்வதை ஒழித்தல், பிறன் மனை நாடாமை, செய்ந்நன்றி மறவாமை என வள்ளுவரின் கருத்துடன் ஒத்து இப்பிரார்த்தனைப் பாடல் அமைவது குறிப்பிடத்தக்கது.

எவ்வுயிர் துன்புறக் காணினும் இரங்கி
அவ்வுயிர்க் குதவியை ஆற்றுவேனாக;
என்னுடை நன்மைபோல் யாவர் நன்மைக்கும்
இரவினும் பகலினும் இடையறவின்றி
உழைத்திட ஊக்கம் உடையேனாக

எனும் வரிகள், தன் நன்மைக்காக மட்டுமின்றிப் பிறர் நன்மையையும் நாடும் பரந்த மனம் வேண்டும் என்ற அவாவினை வெளிப்படுத்துகின்றன. அத்தகைய பரந்த மனம் நாட்டில் அனைவருக்கும் அமைந்துவிடின் இன்றிருக்கும் மாநிலங்களுக் கிடையேயான பூசல், நாட்டினிடையே உள்ள போர், மதவெறி, இனப்பூசல் போன்றவை உலகினின்றும் ஒழிந்துவிடும் என்பது திண்ணம். இப்பாடலின் பிறசில வரிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை. தமக்காக, பிறருக்காக என வேண்டும் ஆசிரியர்,

ஆள்வார் முறை பிறழாமே ஆள்க
நீதிபதிகள் நெறியில் நின்று
பேதமின்றி நீதி செய்க

எனவும் கேட்டுக் கொள்கின்றார். உலகெங்கிலும் முறையற்ற அரசியல், பிறழ்நீதி என விரவிக் கிடக்கும் இக்காலக் கட்டத்திற்குத் தேவையான வரிகளாக இவை அமைகின்றன. செய்யும் தொழிலே தெய்வம்; கல்வித் துறையோ, கைத்தொழில்துறையோ எதனினும் இடைவிடாதுழைக்க வேண்டும் என அறிவுறுத்தி,

ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டினரோ
டமர் புரிவது தவிர்த் தன்பராய் வாழ்தல்
அறநெறியென அறிந்தடைக நல் வாழ்வே

எனப் பாடலை நிறைவு செய்கிறார். சுயநலம், ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் காழ்ப்புணர்ச்சி, பயன் வேண்டிச் செய்யும் செயல் என வினை பல மலிந்திருக்கும் இக்காலத்தே அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய பாடலாக, தேவை மிகுந்த பாடலாக இது அமைகின்றது.

**கல்வியின் இன்றியமையாமை**

செந்தமிழ்ச் செல்வி பதினேழாம் சிலம்பு, பரல் -11இல் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தும் பொருட்டு 'அனைவருக்கும் படிப்பு அவசியம்' எனும் தலைப்பிலான கட்டுரையினை எழுதியுள்ளார் (ப. 525, 1939-1940). அன்றைய காலக்கட்டத்திற்கு மட்டுமின்றி, இன்றைய காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதாக இக்கட்டுரை அமைவது குறிப்பிடத்தக்கது.

"ஒரு நாடு பூரண நாகரிகமுடையதென்று கூற வேண்டுமானால் அந்த நாட்டிலுள்ள மக்கள் நூற்றுக்கு நூறு படித்தவர்களாக யிருக்க வேண்டும்" என்று கூறுவதோடு 1931ஆம் ஆண்டின் மக்கட்தொகைக் கணக்கின் படி இங்கிலாந்து நாட்டில் 100க்கு 6 பேர், ரஷ்யாவில் 100க்கு 2 பேர், ஜெர்மனியில் 100க்கு ஒருவர், ஜப்பானில் 100க்கு 2 பேர் படிக்காதவராயிருக்க இந்தியாவில் மட்டு 100-க்கு 90பேர் படிக்காத பாமரராயிருக்கின்றனர் எனப் புள்ளி விவரத்தினைத் தருகிறார். 100க்கு 90பேர் எனும் அளவில் வேண்டுமானால் தற்பொழுது மாற்றம் ஏற்பட்டிருக்கலாமே தவிர, இன்னமும் படித்தவர் எண்ணிக்கை இந்தியாவில் போதிய அளவு உயரவில்லை என்பதே உண்மை. விவசாயி ஒருவன் தன்னுடைய நிலத்தில் முக்கால் பகுதியைத் தரிசாகவிட்டு, கால்பகுதியை மட்டும் உழுது பயிரிட்டான் எனில், எவ்வளவு நஷ்டத்தைப் பெறுவானோ, அதேபோல் தான் அரசாங்கமும் தன்னுடைய குடிகளில் 90 பேரைப் படிக்காமல் விடும்பொழுது, பெரும் தீமையை அடையும் எனத் தன்னுடைய குடிகளுக்குக் கல்வி வசதி பெறும் வாய்ப்பினைச் செய்து தராத அரசாங்கத்தை இடித்துரைக்கின்றார். ஊருக்கு ஓர் ஓராசிரியர் பள்ளி இருந்தும், அந்த ஓராசிரியரே இல்லாமல் பள்ளி மூடிக்கிடக்கும் அவலம் உள்ள இக்கால நடைமுறைக்கும் இவரின் இடித்துரை பயனுள்ளதாக அமைகிறது. மக்கள் உடலுக்கு உணவும் உடையும் ஒதுக்கிடமும் எப்படி அவசியமோ, அப்படியே அவர்கள் அறிவுக்கு வாசித்தல் எழுதுதல் கணக்கிடல் எனக் கல்வியின் தேவையை வலியுறுத்துவதுடன் மட்டுமின்றி, ஒரு நாட்டு வரும்படியில் கல்வி, மருத்துவம், போக்குவரவு சாதனம் போன்ற செலவுகளுக்குப் போக மிஞ்சுவதை அந்நாட்டு, தோட்டி முதல் தொண்டைமான் முதலாகவுள்ள அனைவரும் தத்தமது உழைப்பு, உரிமைக்கேற்றபடி பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்ற பொருளாதாரக் கொள்கையினையும் முக்கியமான ஒன்று என நன்றாகத் தெளிவுபட எடுத்துரைப்பது நோக்கத்தக்கது.

கல்வி கற்றலுக்கு அடுத்தபடியாக 'தாய்மொழிக் கல்வியினை' யும் வலியுறுத்துகின்றார் 100க்கு 90பேர் சொந்த மொழியையே படியாதிருக்கும்பொழுது, அவர்களைத் தாய்மொழி கற்கும்படி எந்த முயற்சியும் செய்யாமல், இந்தி, ஆங்கிலம் முதலான அந்நிய

மொழியினைப் படிக்கச் செய்தல் அரசாங்கத்தின் மடமையினைக் காட்டுகின்றது எனச் சாடுகின்றார். இங்கு மற்றொரு செய்தியினை இணைத்து நோக்குவது, வெ.சு.ப.விற்குத் தமிழ்மொழிக் கல்வியின் மீது இருந்த பற்றினை வெளிப்படுத்துவதாக அமையும். தமிழ்மொழிக்கெனத் தனியொரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமெனக் கோரிக்கை எழுந்தபோது, அவசியந்தானா? என விசாரணை செய்ய ஒரு குழுவை நியமித்தது அரசாங்கம். 'தமிழ்மொழி தனித்தியங்கும் தன்மை பெறவில்லை; அறிவியல் நூல்கள் போதுமான அளவில் தமிழில் வெளியாகவில்லை' என்ற கருத்துடையோர் சிலர் அங்கம் வகித்த அந்தக் குழுவிற்கு முன் சாட்சியம் அளித்த பலர், அதே கருத்தை வழி மொழிந்து, தனிப் பல்கலைக்கழகம் தேவையில்லை என வாதாடினர். ஆனால் வெ.ப.சு. குழுவின் முன் சாட்சியம் அளிக்கும்போது "தமிழால் முடியும்; தமிழில் பல அறிவியல் நூல்கள் உள்ளன" எனக் கூறினார். அத்துடன் மருத்துவம், விவசாயம், பொறியியல் எனப் பல்வேறு துறைத் தமிழ் நூல்களைக் குழுவிற்கு வழங்கி, தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென வலியுறுத்தினார். வெ.ப.சு. அவர்களுக்குக் கல்வியின் மீதுள்ள ஈடுபாட்டினையும், தாய்மொழிக் கல்வியின் மீதுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையினையும் எடுத்துக்காட்டுவதாக இது அமைகிறது.

கிராமத்திற்கொரு பகற்பள்ளி, முதியோர் கல்விக்காக இராப்பள்ளி அமைக்க வேண்டும் எனக் கட்டுரையில் வேண்டுகோள் விடுக்கிறார். தற்பொழுது அறிவொளி இயக்கம், முதியோர் கல்வி, போன்றவை இயங்கி வந்தாலும் இன்னமும் தாய்மொழிக் கல்வி, அடிப்படைக்கல்விக்கான விழிப்புணர்வு சரிவர உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தத்துவ ஞானக் கொள்கைகள்

ஆலகசாலி என்னும் அராபியப் பெரியாருடைய தத்துவ ஞானக் கொள்கைகளின் 'Draper's Intellectual Development of Europe' என்பதின் மொழிபெயர்ப்புக் கட்டுரை ஒன்று செந்தமிழ்ச் செல்வி (இதழ் - 12, ப. 282, 1933-34) இதழில் வெளியாகி உள்ளது.

ஆலகசாலி என்பவர் கி.பி. 1058இல் பிறந்தவர். அவர் ஞானம் அடைவதைப் பற்றிக் கூறிய கருத்துகளை அவர் தம் வாயிலாகவே

பேசுவதாக மொழிபெயர்த்துள்ளார் வெ.ப.சு. தத்துவ இயலும், உளவியலும் கலந்து காணப்படும் இவர் தத்துவ ஞானக் கொள்கைகளின் முடிவில் ஆசிரியர் தனது கருத்தை விரிவுபடுத்திக் கூறுவது, கட்டுரைக்குச் சிறந்த விளக்கமாக அமைகிறது

'அறிவு' இன்னது என்பதற்கான விளக்கம், புலன்கள் மூலம் அறிவது உண்மையா? அல்லது சில நேரங்களில் புலன்கள் அறிவுறுத்துவது பொய்யாகி, அறிவு தெளிவுபடுத்துவதே உண்மையாகி விடுகின்றது; எது உண்மை? எது பொய்? எதனை நம்பவேண்டும்? கனவு நிலை, விழிப்பு நிலைக்கு உள்ள வேறுபாடு என்ன? இரண்டு நிலைகளிலும் காணும் காட்சிகளின் தோற்றத்தில் எது உண்மை? எனத் தத்துவ ஆய்வு செய்து கொண்டே செல்கிறார் ஆலகசாலி. தத்துவ இயலார் 1. Meta Physics, 2. Epistemology, 3. Axiology என மூன்று பிரிவாகப் பிரித்துத் தத்துவ இயலை ஆய்வு செய்கின்றனர். இதில் முதல் பிரிவு உடலியல் சார்ந்தது; மூன்றாவது பிரிவு வாழ்வியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவது பிரிவு 'அறிவு' தொடர்பானது. 'episteme' எனும் வார்த்தை 'knowledge' அதாவது அறிவு எனப் பொருள்படும். 'Theories of Knowledge' அதாவது அறிவு சார்ந்த கொள்கைகள். இதில் மேலைநாட்டார் ஒவ்வொரு செயல் மூலமாகப் பெறும் அறிவு, அனுபவம் மூலமாகப் பெறப்படும் அறிவு என இருவிதமாக மாறுபடுகின்றனர். எனவே அவர்களுக்கு 'அறிவு' குறித்த தெளிவு சரியாகக் கிட்டவில்லை. நம் நாட்டார் ஆன்மீகத்தின் வழி 'அறிவினைத்' தெளிந்து கூறுகின்றனர்.

ஆலகசாலி எனும் அராபியப் பெரியார் 'தெரியவேண்டிய ஐயப் பொருளைப் பற்றியுள்ள ஐயப்பாடுகள் முழுவதும் நீங்கும்படி ஓர்ந்துணர்ந்து, அதனால் பின் எக்காலத்தும் அப்பொருளைப் பற்றி எவ்வகைத் தப்பெண்ணமாயினும், மாறுபட்ட கருத்தாயினும் உண்டாகாதிருப்பதே உறுதியான உண்மையறிவு' எனக் கூறுகின்றார். புலன்களின் வழியாக அறியும் பொருள்களைப் பற்றி உண்டாகும் நம்பிக்கைக்கு ஏதுவென்ன? என வினா எழுப்பும் அராபிய அறிஞர் அதற்கு எடுத்துக்காட்டினையும் தருகின்றார். 'விண்மீனை' மிகச் சிறியதாக நம் புலன்களின் மூலம் அறிகின்றோம். ஆனால் 'கணிதநூல்' நிலவுலகை விடப்பெரியது விண்மீன் என எடுத்துக்காட்டுகின்றது.

இங்குப் புலன்களால் உண்மையானவைகளாக உறுதி செய்யப்பட்டாலும் அறிவினால் பொய்யானவைகளென்று தள்ளிவிடப்படுகின்றன என விளக்கம் தரும் அராபிய அறிஞரும் 'அறிவின் உறுதிப்பாடுகளை மறுக்கக் கூடிய அறிவினுமுயர்ந்த வலிமையுடையோன் இருக்கலாகாதோ?' எனப் பிறிதொரு வினாவினை எழுப்பி, அதற்கு விளக்கம் காணாது விடுகின்றார். அதேபோல் கனவு நிலையில் தோன்றும் காட்சிகளுக்கும், நனவு நிலையில் காணும் காட்சிகளுக்குமான வேறுபாட்டினைத் தெளிவுபடுத்தாமல் விட்டு விடுகின்றார் அராபிய அறிஞர்.

வெ.ப.சு. அவர்கள் மனிதனின் 'சிந்தனா அறிவினை' நான்காகப் பகுத்து எளிதில் விளக்கம் தருகின்றார். பொதுவாக, உளவியலாளர் மனிதனின் வளர்நிலைகளைக் குழந்தைப்பருவம் (1 முதல் 9 மாதம்), முதல்நிலை சிறுவர் பருவம் (10 மாதம் முதல் 3 வயதுவரை), பின்நிலை சிறுவர் பருவம் (4 முதல் 12 வயது வரை), இளமைப் பருவம் (13 முதல் 19 வயது வரை), பெரியவர் (20 முதல் 30 வயது வரை), நடுத்தர வயது (30 முதல் 50 வயது வரை), முதியோர் (50க்கு மேற்பட்டோர்) எனப் பகுக்கின்றனர். ஒவ்வொரு நிலையிலும் மனிதனின் அறிவு வளர்ச்சியினையும், செயல்களையும் பட்டியலிடுகின்றனர். வெ.ப.சுப்பிரமணிய முதலியாரோ 1. குழந்தைப்பருவம் (கண் முதலிய புலன்களால் உணரக் கூடியவை), 2. ஏழாவது வயது முதல் பின்னுள்ள பருவம் பகுத்தறியும் பருவம்; இப்பருவத்தே புலன்களால் உணரக் கூடியதில் இன்னது உண்மையானவை, இன்னது பொய்யானவை என அறிகின்றனர்; 3. மனிதனின் மூன்றாவது பருவத்தில் விலக்கக் கூடியது இவை, விலக்கக் கூடாதது இவை என்பதை உறுதியாக அறிகின்றனர் என விளக்கம் தருகின்றார். 4. நான்காவது பருவம் 'ஞானக்கண்' திறக்கும் பருவம். இது ஆன்மீகத்தின்வழி கிட்டுகின்றது. இப்பருவத்தில் மனிதனின் வேறொரு கண் திறக்கப்பட்டு, அதனால் ஒருவன் பகுத்தறிவினாலுணர்ந்தவைகள் புலனறிவுக்குப் பொருளாகா திருந்தது போலவும், அறிவுக்கு எட்டாதவைகளாய், மற்றவர்களுக்கு மறைபட்டிருக்கிறவைகளா யுள்ளவற்றையும், வருங்காலத்து நிகழும் யாவற்றையும் அறிகிறான் எனக் கூறுகிறார். இவையே 'முக்காலமுங் காணும் வலிமை' எனக் கூறும் ஆசிரியர், ஆன்மீகத்தின் வழி அறிவிற்கும் மேம்பட்ட ஒன்று

உள்ளதென்பதைத் தெற்றெனப் புலப்படுத்து கின்றார். அத்துடன் மதமும், தத்துவ நூலும் ஒன்றுக் கொன்று மாறுபட்டனவல்ல வென்று காட்டி இரண்டினையும் ஒருமைப்படுத்துகின்றார். அறிஞரின் தத்துவக் கொள்கைகளை மொழிபெயர்த்ததுடன் மட்டுமின்றி, அதில் விளக்கம் காணாப் பகுதியினைத் தெளிவுபடுத்திக் கட்டுரையினை நிறைவு செய்திருப்பது இக்கட்டுரையின் சிறப்பாகும்.

நிறைவுரை

இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியில் 'வாழ்க்கை வரலாறு' இலக்கியமாக முகிழ்க்கத் தொடங்கியிருந்த காலக் கட்டத்தில் பல அறிஞர்கள் குறித்த வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையினைச் சுவைபடத் தந்திருப்பது இவர்தம் தனித் திறமையாகும்.

கால்நடை அறிவியல் நூல்களை மட்டுமின்றிப் பிற நூல்கள், சிறு கட்டுரைகளையும் மொழிபெயர்த்துத் தமது இருமொழிப் புலமையினை நிலைநாட்டியுள்ள வெ.ப.சு. கட்டுரைகளை அப்படியே மொழிபெயர்த்துக் கொண்டே செல்லாமல், புரிபடாத பகுதியினை எளிதில் தம் விளக்கத்தின் வழித் தெளிவு பெறச் செய்திருப்பது இவரின் பிறதுறைப் புலமைக்குச் சான்றாகத் திகழ்கின்றது.

இன்றைய நிலையிலும் பெரும் வளர்ச்சி நிலையினை எட்டிவிடாத 'கல்வி கற்பித்தல்' குறித்து அன்றே திட்டவட்டமாகப் பேசியிருப்பது மட்டுமின்றி, தாய்மொழிக் கல்வி நடைமுறைக்கு வரவில்லையெனில் பள்ளிக்கூடங்களை மூடிவிடுதல் நலம் எனக் கடுமையாகக் கூறுவதினின்றும் "கல்வி வேண்டுவது மட்டும் முக்கியமான ஒன்றல்ல, தாய்மொழிக் கல்வி பெறுவதும் இன்றியமையாத ஒன்று' என வலியுறுத்தி இருப்பது சிறப்பானதும், இன்றைய வாழ்வியல் நிலைக்குத் தேவையான ஒன்றும் என்பதில் சற்றும் மிகையில்லை.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 – கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்–புறம்)– ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 – 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்–நாட்டுப்புறவியல், கலை, பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்–எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி – I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி – II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி – III | 80.00 |
| தொல்காப்பியம்–சொல்லதிகாரம் மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்–பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம்–பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் – தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| அறந்தாங்கித் தொண்டைமான்கள் | 45.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| உ.வே.சாமிநாதையர் உரைநடை நூல்கள் உணர்த்தும் புலப்பாட்டு நெறி | 35.00 |
| **587 வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார்** | **40.00** |